மலர்-5 இதழ்-100 அக்டோபர் 16-31 2020 இலவச புத்தகம் www.aanmeegamalar.com

e- magazine

ஆன்மிகமலர் டிரஸ்ட் வெளியீடு

# ஆன்மிகமலர்

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

## மெயில் புக்

உலக வரலாற்றில் முதன்முறையாக இ-மெயிலில் வெளிவரும் இதழ்

மாதமிருமுறை

## திருமுறை செய்த அற்புதங்களும் அதிசயமும்

ஆன்மிகமலர் mobile app
Google Play

e-book



வது இதழ்

www.aanmeegamalar.com
e- magazine

## நந்தியின் அருள் பெற்ற எட்டுப்பேர்

# குருவை தேடுங்கள்

இல்லற வாழ்க்கை மட்டுமே ஒரு மனிதனை முழுமனிதனாக மாற்றிவிடாது. இல்லறத்தில் இருந்தாலும் ஞானத்தை அவசியம் தேட வேண்டும்.

இந்த ஞானத்தை பெற, அவசியம் குருநாதரின் உதவி தேவை. குருவுடன் பழகுவதற்கு அதிகப்படியான முக்கியத்துவம் கொடுங்கள். குருநாதர் மலரைப் போன்றவர்கள்.

மனிதர்கள் வலது கை, இடது கைக்கு நிறைய வேற்றுமை பார்ப்பார்கள். இது பொது வாழ்க்கையில் பலருக்கு பல அனுபவத்தை தந்திருக்கும், ஆனால் ஒரு மலர், வலது கையிலோ அல்லது இடது கையிலோ வைத்திருந்தாலும் ஒரே மனத்தைத்தான் தரும், இதைப் போன்றவர்கள்தான் உண்மையான குருநாதர்கள். நல்லவர், தீயவர், பகைவர், திருடர்கள் போன்ற பல மனித குணம் இருந்தாலும், அனைவருக்கும் நல்ல அறிவை போதிக்கும் குரு கிடைத்துவிட்டால், நிச்சயம் ஆன்மீக ஞானம் தன்னால் உருவாகிவிடும்.

இந்த ஞானம் ஏற்படும்போது, அனைவரும் இறைவனுக்கு சமமானவர்களாகவே பாவிக்கத் தோன்றும், ஏழை, பணக்காரன், உயர்ந்த ஜாதி, தாழ்ந்த ஜாதி போன்ற ஏற்றத்தாழ்வுகள் தன்னால் மறைந்து போகும்.

இன்னும் ஒருபடி மேலே சென்று மனிதர்கள், விலங்குகள் என்ற பாகுபாடுகூட மறைந்து அனைத்தும் இறை அம்சம் பொருந்திய ஜீவன்கள் என்ற எண்ணம் மேலோங்கும். இந்த நிலை அடைந்துவிட்டால், சாதாரண ஒருமனிதன் கூட மிகச் சிறந்த ஞானியாக மாறிவிடுவான்.



# பலூனும் மனித உடலும்



சாதாரணமாக காற்று அடைக்கப்பட்ட பலூனில் ஒரு சிறிய ஓட்டை ஏற்பட்டால் பலூனில் உள்ள காற்று முழுவதும் வெளியேறிவிடும். ஆனால் மனித உடலில் ஒன்பது ஓட்டைகள் இருந்தாலும் காற்று முழுவதும் வெளியேறிவிடுவது இல்லை. மனிதனின் ஆயுள்காலம் முடியும் தருவாயில் எந்த வழியில் காற்று வெளியே செல்கிறது என்று இதுவரை யாராலும் கூறமுடியவில்லை. உலக அதிசயங்களை வரையறுத்து கூறும் மனிதன், தன்னுள் உள்ள இந்த அதிசயத்தை சில நேரங்களில் மறந்து விடுவதால்தான், ஆணவம், அகங்காரம், "தான்" என்ற எண்ணம் மேலோங்கு கிறது.

# அன்னதான பலன்

நோய்களில் கொடிய நோய் பசி, இந்தநோயை வசதி வாய்ப்பிருப்பவர்கள் அனைவரும் எளிதாக தீர்த்து விடலாம், இந்த நோயை தீர்க்கும் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொருவிதத்தில் அவர்களின் கர்மாவிற்கேற்ப பலன்கள் கிடைக்கும். இதனைத்தான் இந்து மதத்தின் வாயிலாக ஜோதிடம், பரிகாரம் போன்றவற்றில் நமது முன்னோர்கள் புகுத்தி, பசி என்ற நோயை தீர்ப்பவரின் குடும்பத்திற்கு, பல்வேறு சுப பலன்கள் கிடைக்கும் என பல வழிமுறைகளில் வரையறுத்துக் கூறி, "அன்னதான''த்தையே பரிகாரமாக கூறுகின்றனர்.

உண்மையான அன்னதானம் என்பது உண்மை யான பசியுள்ளவர்களுக்கு செய்வதாகும், வசதி வாய்ப்பிருப்பவருக்கும், ஆடம்பரத்திற்கும் செய்யும் அன்னதானத்திற்கும் பலன் கிடைக்காது.





# ஒரே யுகத்தில் 5 அவதாரங்கள்

ஸ்ரீ நரசிம்மாவதாரத்துக்குத் தனிச்சிறப்பு உண்டு. நரசிம்மப் பெருமானுக்கு முன்னே இருந்தவர்களெல்லாம் மிருகமாக மட்டும் அவதரித்தவர்கள். நரசிம்மருக்குப் பின்னே இருந்தவர்கள் எல்லாம் மனுஷ்யர்களாகவோ தேவர்களாகவோ அவதரித்தவர்கள். ஆனால் நரசிம்மாவதாரம்தான் மிருகத்வம் நரத்வம் மிருகமான தன்மை, மனிதனான தன்மை இந்த இரண்டும் சேர்ந்திருக்கிற அவதாரம். இதை ‘சிதாக்ஷீர நியாயம்’ என்று சொல்வார்கள்.

பத்து அவதாரங்களுக்குள்ளே, முதல் ஐந்து அவதாரங்களான, மத்ஸ்யாவதாரம், கூர்மாவதாரம், வராகாவதாரம், நரசிம்மாவதாரம், வாமன அவதாரம் இவை ஐந்தும் முதல் யுகத்தில் நடந்தவை.

அடுத்துப் பரசுராம, ராமாவதாரங்கள் த்ரேதா யுகத்தில் நடந்தவை.

பலராம கிருஷ்ணாவதாரங்கள் த்வாபர யுகத்தில் நடந்தவை.

கடைசியாகக் கலியுகத்தில் கல்கி அவதாரம் இனிமேல் நடக்கப் போகிறது. அப்படியானால், முதல் யுகத்துக்கானப் பெருமை, ஐந்து அவதாரங்களும் அந்த யுகத் தில் நடந்தன என்பதுதான்.

# பக்தர்களுக்குப் பின்பே அர்ச்சகர்களுக்கு காட்சி



ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் சன்னதியில் நடை திறக்கும்போது, அர்ச்சகர்கள் ஆண்டாளை நேரிடையாக பார்ப்பதில்லை. அவளுக்கு வலது புரத்தில் இருக்கும் கண்ணாடியைப் பார்க்கின்றனர், ஆண்டாள் கண்ணாடி பார்த்து தன்னை அழகுபடுத்திக் கொள்வாளாம், இதனால் நேரடியாக அர்ச்சகர்கள் ஆண்டாளைப் பார்க்காமல் கண்ணாடியைத்தான் பார்ப்பார்களாம். இதை இன்றுவரை ஐதீகமாக கடைபிடித்து வருகின்றனர். ஆண்டாளைப் பார்க்கும் அந்தக் கண்ணாடியை, 'தட்டொளி' என்பார். பின்பு சன்னதியில் தீபம் ஏற்றப்படும். இந்தச் சடங்கைச் செய்யப் போடப்பட்டிருக்கும் திரையை விலக்கியதும், பக்தர்கள் கண்ணில் முதலில் ஆண்டாள் படுவாள். பின்பே அர்ச்சகர்கள் ஆண்டாளைப் பார்ப்பார்கள்.


ஆன்மிகமலர் மெயில் புக்

## அர்த்தநாரி வடிவமாக திகழும்

# திருநங்கைகள்

திருநங்கைகள் சனி புதன் காரகத்துவத்தில் வருவார்கள் அவர்களை இழிவுபடுத்தி பேச கூடாது அவர்களின் பிறவி அப்படி அமைந்ததற்கு அவர்களின் கர்மா காரணமாகும்.

திருநங்கைகள் சிவசக்தி சொரூபம். எப்பொழுதும் எந்த உயிரையும் இழிவாக பேசும் முன்பு அவர்கள் இடத்தில் உங்களை வைத்து சிந்தித்து பார்த்தால் தவறான எண்ணம் மறைந்துவிடும்.

யாரையும் இழிவாக பேசவே தோன்றாது. பொதுவாகவே அவர்களை இந்த சமூகத்தில் ஒதுக்குவதால்தான் நிறைய விஷயங்களை நாம் இழக்கின்றோம்.



திருநங்கைகளிடம் ஆசீர்வாதம் வாங்கினால் ஒருசில தோஷங்கள் நிவர்த்தியாகும், வேர்கடலை பயிரிட்ட தோட்டத்தில் ஒருசில தேவையற்ற புற்கள் முளைத்தால் அதனை பிடுங்கி எரிந்தால்தான் அந்த வேர்கடலை பயிர் செழிப்பாக வளரும், இதுபோன்றுதான் வியாபார வளர்ச்சி, குடும்ப வளர்ச்சி போன்றவற்றில் ஒருசில திருஷ்டிகள் புற்களைப் போன்று முளைத்து ஒருசில தடைகளை உண்டாக்கும். இந்த தடைகளை திருநங்கைகளின் ஆசி உடைத்தெரியும்.

வடநாட்டவர்கள் திருநங்கைகளை தெய்வமாக மதிப்பார்கள். பெரிய கடைகளை திறக்கும் பொழுது முதன்முதலாக அவர்களுக்கு கொஞ்சம் பணத்தை அளிப்பதை முக்கியமான அம்சமாக வடநாட்டவர்கள் வைத்திருக்கின்றார்கள்.

அதே போல அவர்கள் ஒரு கூட்டமாக வந்து சுற்றி நின்று பாடி ஆடி புதுகடை திறப்பு விழாவில் கலந்து கொண்டு முதல் மரியாதையை ஏற்றுக் கொள்வார்கள்.

எங்கு திருநங்கைகளை பார்த்தாலும் அவர்களுக்கு இயன்ற உதவி, பண உதவிகளை செய்துவிட்டு, அவர்களிடம் 1 ரூபாய் கேட்டு வாங்குங்கள், அந்தப் பணத்தை வியாபார நிறுவனத்தில் பணப்பெட்டியில் வைத்தால் பணவரவு அதிகரிக்கும்.

இதை இன்றும் ஒருசிலர் வழக்கமாக கடைபிடித்து வருகின்றனர்.

வடநாட்டவர்கள் தங்கள் இல்லத்தில் அவர்களை உதவிக்கு வைத்திருப்பார்கள் அவர்களின் முகத்தில் விழிப்பார்கள், திருநங்கைகள் பிச்சை எடுப்பதாக கருத வேண்டாம் அவர்கள் உங்கள் கர்மாவினை வாங்கி செல்கின்றார்கள் என்று கருதுங்கள். எந்த ஒரு உயிரினம் இந்த சமூகத்தில் புறக்கணிக்கப்படுகின்றதோ அவர்கள்தான் கடவுளின் முதல் குழந்தை ஏனெனில் இங்கு புறக்கணிப்படுபவர்கள் அனைவருமே கடவுளின் குழந்தைகள்.

குழந்தைகளுக்கு ஏற்படும் அனைத்து திருஷ்டியை எடுக்கும் சக்தி திருநங்கைகளுக்கு உண்டு. திருநங்கைகள் உண்மையில் இந்த உலகில் வாழும் தேவதைகள்.

நீங்கள் வரம் வாங்குவதும் பிரபஞ்சம் உங்களை ஆசீர்வதிப்பதும் அவர்கள் கையில் உள்ளது. தொழில் முடக்கம் தொழில் நஷ்டம் தொழில் விரக்தி வருமான தடை உள்ளவர்கள் உங்கள் அலுவலகத்திற்கு அவர்களை அழைத்து ஒரு லக்ன நேரமான இரண்டு மணி நேரம் உட்கார வைத்து சாப்பாடு விருந்து போட்டு அனுப்பி பாருங்கள் தொழில் மிகவும் விருத்தியடையும்.

வடநாட்டு இந்தியர்களுக்கு அவர்களின் அருமை தெரியும். திருநங்கைகள் அர்த்தநாரீஸ்வரர் அவதாரம் என்பதை உணருங்கள். திருமணம் நடக்காதவர்கள் அவர்களிடம் சொல்லி திருமணம் நடக்க ஆசீர்வாதம் வாங்குங்கள்

குழந்தை பாக்கியம் தடை உள்ளவர்கள், திருமணம் ஆகி கணவன் மனைவி கருத்து வேறு பாடு காரணமாக பிரிந்து வாழும் சூழல் ஏற்பட்டால் அவர்களிடம் சொல்லி ஆசீர்வாதம் வாங்குங்கள்.

திரு என்றால் மகாலட்சுமி நங்கை என்றால் பெண் மகாலட்சுமியின் பெண் திருநங்கைகள் என்பதை உணருங்கள்.

திருநங்கைகள் தெய்வத்திற்கு சமமானவர்கள். திருநங்கைகளுடன் புகைப்படம் எடுத்துக் கொள்ளுங்கள் அவர்கள் உங்களை ஆசீர்வதிக்கும் புகைப்படத்தை அடிக்கடி பாருங்கள்.

திருநங்கைகள் உங்கள் கர்மாவினை குறைப்பதற்கு இறைவனால் படைக்கப்பட்ட ஜீவன்களை என்பதை உணருங்கள். மிகவும் எளிமையான சக்தி வாய்ந்த பரிகாரம் திருநங்கைகளுக்கு உதவி செய்தல். திருநங்கைகள் சனியின் காரகத்துவம் புதனின் காரகத்துவம் ராகுவின் காரகத்துவம் கேதுவின் காரகத்துவம் என்று நாடி ஜோதிடத்தில் கூறியுள்ளது. எனவே அவர்களை என்றைக்கும் புறக்கணிக்காதீர்கள்.

– ராஜூ சுந்தர், புனே.

Aanmeega malar mobile app




GET IT ON Google Play

கூகுள் ப்ளே ஸ்டோரிலிருந்து
Aanmeega malar (mobile app)
டவுண்லோடுசெய்து, செல்போனிலேயே
நமது இதழ் முழுவதும் படிக்கலாம்.

“வெள்ளெருக்கு தேவ மூலிகை அல்லது விருட்சம் என்றும், அரிதான பொருள் இருக்கும் இடத்தில்தான் வெள்ளெருக்கு செடி முளைக்கும் என சங்க கால நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளது”



# அதி அற்புதம் வாய்ந்த வெள்ளெருக்கு விநாயகர்

**எருக்கஞ்செடி குடும்பத்தைச் சேர்ந்தது வெள்ளெருக்கு. நீல எருக்கு, ராம எருக்கு என ஒன்பது வகையான எருக்குகள் இருக்கின்றன**

எருக்கஞ்செடி 12 ஆண்டுகள் மழை இல்லாமல் இருந்தாலும் கூட, சூரிய ஒளியிலுள்ள தண்ணீரை கிரகித்து வளரும் தன்மை கொண்டது.அதன் பருவகாலத்தில் பூத்து,காய்த்து,வளர்ந்துவிடும்.இதில் விஷேச அம்சம் கொண்டதுதான் வெள்ளெருக்கு.

இதை வீட்டிலும் வளர்க்கலாம். இதன் பூவை வைத்து விநாயகருக்கும், சிவனுக்கும் அர்ச்சனை செய்யலாம். வெள்ளெருக்கம் பூ சங்கை பஸ்மமாக்கப் பயன்படுகிறது. வெள்ளெருக்கு பட்டையை நூலுக்குப் பதில் விளக்குத்திரியாக போட்டு வீட்டில் எரிக்க சகல துர்சக்திகளும் விலகி ஓடும். வெள்ளெருக்கு வேரில் மணிமாலை செய்யலாம். விநாயகர் செய்து வழிபடலாம். ஆகர்ஷணம் எட்டு வகைப்படும். இதில் தன ஆகர்ஷணம் பண வரவை அள்ளிக் கொடுக்கக் கூடியது இந்த வெள்ளெருக்கு விநாயகர்.

வெள்ளெருக்கு விநாயகர் என பல இடங்களில் விற்பனை செய்கிறார்கள். வேர்ப் பகுதிக்கு பதில் தண்டுப்பகுதியில் விநாயகர் செய்து விற்கிறார்கள். ஆனால் அது விரைவில் உளுத்துப்போய் உதிர்ந்துவிடுகிறது.

நம்பிக்கைக்குரிய சித்த வைத்தியர் மூலமாக வெள்ளெருக்கு செடியை அடையாளம் கண்டு, அதன் வேரை எடுத்து ஆசாரியை வைத்து வெள்ளெருக்கு விநாயகர் செய்து கொள்ளலாம்.

வெள்ளிக்கிழமை, ராகு காலத்தில், வெள்ளெருக்கு விநாயகருக்கு, அரைத்த மஞ்சள் கலவையைத் தடவவும். அதற்கு அடுத்த வெள்ளிக்கிழமை, ராகு காலத்தில் சந்தனம் அரைத்த கலவையை அதன்மேல் தடவி, நிழலில் காய வைத்தால் எருக்கன் விநாயகரில் உள்ள கதிர்வீச்சுக்கள் கட்டுப்படுத்தப்பட்டு, நன்மையான கதிர்கள் நம் வீட்டில் பரவும்.

இவ்வாறு செய்தபின், அவரவர் இஷ்டம் போல வழிபாடு செய்யலாம்; தூப தீப நைவேத்தியம் செய்யலாம்; ஸ்ரீ சொர்ணகணபதி மந்திரம் சொல்லி, வெள்ளெருக்கு விநாயகரை வழிபட்டால், தன ஆகர்ஷணம் உண்டாகும்.

வெள்ளெருக்கு (வெள்ளை எருக்கு) வேரில் உருவான விநாயகரே மிகவும் சக்தி வாய்ந்தவர். பொதுவாக வெள்ளெருக்குச் செடிக்கு தனி சக்தி உண்டு. வெள்ளெருக்கு தேவ மூலிகை அல்லது விருட்சம் என்றும் கூறலாம். அரிதான பொருள் இருக்கும் இடத்தில்தான் வெள்ளெருக்கு செடி முளைக்கும் என சங்க கால நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

புதையல், ரத்தினங்கள், சிலைகள் பதுக்கி வைத்திருக்கும் இடம் போன்றவற்றில் மட்டுமே வெள்ளெருக்கு முளைக்கும் என விருட்ச சாஸ்திர நூல்களில் கூறப்பட்டுள்ளது. அதன்படி பார்த்தோமேயானால் வெள்ளெருக்கு இருக்கும் இடத்தில் தெய்வீக சக்தி இருக்கிறது என்று அர்த்தம்.

ஆனால், அதேவேளையில் அங்கு தீய சக்திகளும் எருக்கன் செடியை ஆக்கிரமிக்கவும் வாய்ப்பும் இருக்கிறது. “வெள்ளருக்கு பூக்குமே வேதாளம் பாயுமே” என்ற பாடலும் சங்க காலத்தில் பிரபலம்.

எனவே வெள்ளெருக்கு செடி எதற்கு அருகில் வளர்ந்துள்ளது என்றும் பார்க்க வேண்டும். தீய சக்தி உள்ள இடத்தில் இருக்கும் வெள்ளருக்கு செடியின் வேரைக் கொண்டு விநாயகரை உருவாக்கக் கூடாது.

எனவேதான் வெள்ளெருக்கு வேரை எடுக்கும் முன்பாக வேப்பிலை, கூழாங்கற்கள், மா இலை, வில்வ இலை ஆகியவற்றை மாலை போல் கோர்த்து அந்த வெள்ளெருக்கு செடியை சுற்றி காப்புக்கட்டி, ஒருவாரம் கழித்த பின்னரே வெள்ளெருக்கு வேரை எடுத்து அதனை பதப்படுத்தி விநாயகர் உருவம் செய்ய வேண்டும்.

வெள்ளெருக்கு செடிக்கு உயிர்ப்பு சக்தி உள்ளதால், அதனைக் பார்த்தவுடன் வெட்டிவிடாமல் மேற்கூறிய பரிகார முறைகளை கடைப்பிடித்த பின் அதை வெட்டி அதன்மூலம் செய்யப்படும் விநாயகர் உருவத்திற்கு சிறப்பான பலன்கள் உண்டு.



# மூளையை பாதுகாக்க

## எளிமையான வழிமுறைகள்



உடலில் உள்ள பாகங்கள் அனைத்தும் வேலை செய்ய கட்டளை இடுவது மூளை என்னும் ஒரு சிறிய நரம்பு மண்டலமே. உடல் உறுப்புகள் அனைத்தையும் பாதுகாக்க, இந்த உறுப்பு இந்த வேலையை செய்ய வேண்டும் என்று அவசரக் கட்டளையிடும் தன்மை மூளைக்கு உண்டு. கண்ணில் தூசி விழும் என்ற சூழலில் இமைகளை மூடவைத்து கண்ணை பாதுகாக்க கட்டளையிடுவது மூளையே...

இவ்வாறான தலைமைப் பொறுப்பை அழகாக செய்து வரும் மூளையை நாம் மிகுந்த கவனத்துடன் பாதுகாக்கவேண்டும்.

- காலையில் உணவு உண்ணாமல் இருப்பவர்களுக்கு ரத்தத்தில் குறைவான அளவே சர்க்கரை இருக்கும். இது மூளைக்குத் தேவையான சக்தியையும், தேவையான ஊட்டச் சத்துக்களையும் கொடுக்காமல் மூளையின் செயல்பாட்டிற்கு குந்தகம் விளைவிக்கும் எனவே காலை உணவை தவிர்க்க கூடாது.
- மிக அதிகமாகச் சாப்பிடுவது, மூளையில் இருக்கும் ரத்த நாளங்கள் இறுகக் காரணமாகி, மூளையின் சக்தி குறைவுக்குக் காரணமாகும். எனவே மிதமான உணவை உட்கொள்வது அவசியம்.
- புகை பிடிக்கும் பழக்கத்தால் மூளை சுருகவும், அல்ஸைமர்ஸ் வியாதி வருவதற்கும் காரணமாகிறது.
- சர்க்கரை உணவில் அதிகம் சேர்ந்தால் நமது உடலில் புரோட்டின் சேர்வதைத் தடுக் கிறது. இதுவும்மூளை வளர்ச்சிக்கு பாதிப்பாகிறது.
- மாசு நிறைந்த காற்றை சுவாசித்தல், நமக்குத் தேவையான ஆக்ஸிஜனை நாம் பெறுவதிலிருந்து தடை செய்கிறது. மூளைக்கு ஆக்ஸிஜன் செல்லாவிட்டால், மூளை பாதிப்படையும்.
- தூங்கும்போது தலையை மூடிக்கொண்டு தூங்குவது, போர்வைக்குள் கரியமிலவாயு அதிகரிக்க வைக்கிறது. இது நாம் சுவாசிக்கும் ஆக்ஸிஜனை குறைக்கிறது. குறைவான ஆக்ஸிஜன் மூளையைப் பாதிக்கிறது.
- நோயுற்ற காலத்தில் மூளைக்கு வேலை கொடுப்பது உடல் நோயுற்ற காலத்தில் மிக அதிகமாக மூளைக்கு வேலை கொடுப்பதும், தீவிரமாகப் படிப்பதும் மூளையைப் பாதிக்கும். உடல் சரியாக ஆனபின்னால், மூளைக்கு வேலை கொடுப்பதே சிறந்தது.
- மூளைக்கு வேலை கொடுக்கும் சிந்தனைகளை மேற்கொள்ளாமல் இருப்பது மூளையை அதிகமாக உபயோகப்படுத்தும் சிந்தனைகளை மேற்கொள்வதால், மூளையில் புதுப்புது இணைப்புகள் உருவாகின்றன. அதனால், மூளை வலிமையான உறுப்பாக ஆகிறது.
- பேசாமல் இருப்பது அறிவுப்பூர்வமான உரையாடல்களை மேற்கொள்வது மூளையின் வலிமையை அதிகரிக்கிறது

www.aanmeegamalar.com







# ஈரேழு, பதினான்கு தலைமுறை

## எவ்வாறு கணக்கிடுவது?

தற்போதைய கால கட்டத்தில் நமது தாய் தந்தையர், பாட்டன் பாட்டி போன்ற உறவு முறையை மட்டுமே நாம் அறிந்து வைத்துள்ளோம். கால சூழ்நிலையால், கூட்டுக் குடும்பம் என்ற நிலை தற்போது மெல்ல மெல்ல மறையத் துவங்கியுள்ளது. நகர்மயமாதல் என்ற நாகரீக வளர்ச்சியில் நாம் பலவற்றை இழந்து கொண்டிருக்கிறோம். அதில் மிக முக்கியமானது, சொந்த பந்தம் என்ற உறவுமுறை.

காசு, பணம், பொன், பொருள், மண் போன்ற பல காரணங்களுக்காக தற்போது குடும்ப அமைப்பின் கட்டமைப்பு இந்தியாவில் மாறிக் கொண்டு வருவதை கண்கூடாக காண்கிறோம். ஒரு காலத்தில் உலக நாடுகள் வியக்கும் வகையில் நமது நாகரீக வாழ்க்கை மேம்பட்டதாக இருந்தது, நமது நாகரீகத்தை பல்வேறு மேலை நாடுகள் தற்சமயம் பின்பற்றத் துவங்கியுள்ள நிலையில், நமது நாகரீகத்தை நாம் மறந்து வருவதும் வேதனைதான்.

நாம் ஏதாவது ஒரு விஷயத்தை பற்றி பேசும் பொழுது, "பரம்பரை பரம்பரையாய் இருக்கிறது" என்று சொல்வதுண்டு... அந்தப் பரம்பரை முறை தற்போதைய தலைமுறையினருக்கு தெரியாமலேயே உள்ளது.

பரம்பரை என்றால் என்ன? வழி வழியாக என்று சொல்லலாம் என்றாலும், "தலைமுறை தலைமுறையாக" என்பதே உண்மை பொருள் ஆகும்.

அப்படியென்றால், பரம்பரை என்பது முந்தைய தலைமுறையை குறிக்கும் சொல் என்றே கூறலாம்.

பரன் + பரை = பரம்பரை என்று கூறலாம்.

நாம்................................முதல் தலைமுறை
நமது தந்தை + தாய்.......இரண்டாம் தலைமுறை
பாட்டன் + பாட்டி............மூன்றாம் தலைமுறை
பூட்டன் + பூட்டி..............நான்காம் தலைமுறை
ஓட்டன் + ஓட்டி..............ஐந்தாம் தலைமுறை
சேயோன் + சேயோள் .....ஆறாம் தலைமுறை
பரன் + பரை.....................ஏழாம் தலைமுறை

ஒரு தலைமுறை சராசரியாக 60 வருடங்கள் என்று கொண்டால், ஏழு தலைமுறை 480 வருடங்கள்.. ஈரேழு தலைமுறை 960 வருடங்கள்.. (கிட்டத்தட்ட ஆயிரம் வருடங்கள்) ஆக, பரம்பரை பரம்பரையாக என்று சொல்வதன் பொருள் ஈரேழு, பதினான்கு தலைமுறையாக என்று பொருள் வரும்.

இந்து மதத்தில் மட்டுமே மனித இனத்தின் பரம்பரையை மிக நேர்த்தியாக கையாண்டிருக்கின்றனர்.

www.aanmeegamalar.com

# சான்றோரின் லக்ஷணங்கள்

- கெட்டவர்கள் உள்ள கிராமத்தில் குடியிருத்தல், சுவையில்லாத உணவு, எரிந்து விழும் மனைவி, முட்டாளான மகன் ஆகிய இவையாவும் ஒரு மனிதனுடைய உடம்பை நெருப்பு இல்லாமலே எரித்து விடுகின்றன.
- பால் கறவை அற்றுப் போன ஒரு மலட்டுப் பசுமாடு எப்படி உபயோகம் அற்றதோ அதேபோல கல்வியும், தெய்வ பக்தியும் இல்லாத மகனால் எந்த உபயோகமும் இருக்கப் போவதில்லை!
- ஒரு சந்திரன் இருளைப் போக்குகிறது. ஆனால் நக்ஷத்திரங்கள் ஆயிரமிருந்தும் இருளைப் போக்க முடியாது. அது போல நூறு குணமில்லாத மகன்களை விட ஒரு குணமுள்ள மகன் மேலானவன் ஆவான்.
- ஒருவனாக இருந்து தனிமையில் ஜபம் செய்வது நல்லது.
- இருவராகச் சேர்ந்து படிப்பது உதவும்.
- மூவராகச் சேர்ந்து பாடுவது சிறக்கும்.
- நால்வர் சேர்ந்து வெளியில் செல்வது மகிழ்ச்சிகு உதவும்.
- ஐந்து பேர் சேர்ந்து க்ஷேத்ரங்களுக்கு யாத்திரை செல்வது துணை பயக்கும்.
- போரென்று வரும்போது பலர் சேர்வது நலம் பயக்கும்.
- தெய்வ பக்தி உள்ளவளும், வீட்டு வேலைகளில் திறமைசாலியும், கற்பு உள்ளவளுமே உயர்ந்த மனைவி!
- தர்மத்தில் பற்று, பேச்சில் இனிமை, தானம் கொடுப்பதில் உற்சாகம், நண்பனிடம் நேர்மை, குருவிடம் பணிவு, உள்ளத்தில் கம்பீரம், நடத்தையில் சுத்தம், நற்குணங்களுக்கு மதிப்பு, சாஸ்திரங்களில் தேர்ச்சி, உருவத்தில் அழகும், சிவனிடத்தில் பக்தி இவை எல்லாம் சான்றோரின் லக்ஷணங்கள் ஆகும்.

– சாணக்கியர்











# மரணப்படுக்கையில் நீர் கொடுக்க காரணம்?

குருசேத்திரப் போர் நடந்து கொண்டிருந்தது. பிஷ்மரின் தந்தை சந்தனு மகனுக்கு ஒரு வரமளித்தார். ‘எப்பொழுது பீஷ்மர் மரணமடைய விரும்புகிறாரோ அப்போது மரணமடைவார்’ என்பதே அது. பத்தாம் நாள் போர் அன்று, பீஷ்மர் பாண்டவர் படைக்குப் பலத்த சேதத்தை ஏற்படுத்தினார். அப்போது அவருக்குத் தான் செய்யும் செயலில் சலிப்பு ஏற்பட்டது. உடன் தான் இறக்க நினைத்தார்.

அவரின் நிலையை அறிந்த அர்ச்சுனன் தேரின் முன்னால் சிகண்டியை நிறுத்தி விட்டு பீஷ்மர் மேல் அம்பெய்தினான். சிகண்டி முன் போர் புரிய விரும்பாத பீஷ்மர் அமைதி யாயிருந்தார். அர்ச்சுனனின் அம்புகள் அவரது உடலைத் துளைத்தன. உத்திராயண காலத்தில் இறக்க விரும்பிய பீஷ்மர் அம்புப் படுக்கையில் இருந்தார்.

அவரைத் தரிசிக்கவும் ஆசி பெறவும் பல அரசர்களும் வீரர்களும் வந்தனர். உடலில் காயங்களுடன் படுத்த படுக்கையாக இருந்த பீஷ்மர் மிகவும் களைப்படைந்தார். தாகம் ஏற்படவே அருந்தத் தண்ணீர் கேட்டார். துரியோதனனும் கர்ணனும் நறுமணம் மிக்க இனிய பானங்களைக் கொண்டு வந்தும் அதை அருந்தவில்லை.

அர்ச்சுணனை நோக்கி, ‘சாஸ்திரங்கள் கூறும் வழியில் எனக்கு தண்ணீர் தருவாயாக’ என்றார். அர்ச்சுணன் தன் காண்டீபத்தை நாணேற்றி பீஷ்மரின் தலைக்கருகே ஏவினான். உடனே பூமி பிளந்து பீஷ்மரின் தாயான கங்கை நீர் ஊற்றாகப் புறப்பட்டு நேராக பீஷ்மரின் வாயின் அருகில் பாய்ந்தது. பீஷ்மரும் அதைப் பருகித் தாகம் தணிந்தார்.

மங்காத புகழ் பெற்ற பீஷ்மருக்கு மரணப் படுக்கையில் ஏற்பட்ட தாகம், கங்கையான அவளது தாயால் தணிந்து புண்ணியலோகத்தை அடைந்தார். இதனால்தான் இன்றும் மரணப் படுக்கையில் இருப்பவருக்குக் கங்கை நீர் கொடுத்து அதனால் அவர்கள் புண்ணிய லோகம் அடைய வேண்டி இப் பழக்கம் கடை பிடிக்கப்பட்டது. கங்கை தீர்த்தம் கிடைக்காதவர்கள் கோவி லில் தீர்த்தம் அல்லது துளசி கலந்த நீரை கொடுக்கலாம்.





## ஸ்ரீலட்சுமிக்கு பிரியமான வில்வம்

வில்வ மரத்தில் லட்சுமி வாசம் செய்கிறாள் என்று சொல்லப்படுகிறது.

லட்சுமிக்கு மிகவும் பிடித்தமான இலை வில்வம் என்பது பலருக்குத் தெரியாது. திருவஹிந்திரபுரத்தில் தாயாருக்கு வில்வ அர்ச்சனையே செய்யப்படுகிறது.

வில்வ மரத்தில் லட்சுமி வாசம் செய்கிறாள் என்று சொல்லப்படுகிறது. சவுபாக்கிய சஞ்சீவினியில் லட்சுமி வில்வக்காட்டில் மரத்தடியில் தவம் செய்பவளாக வருணிக்கப்பட்டுள்ளது. வாமன புராணத்தில் லட்சுமியின் கைகளில் இருந்தே வில்வம் தோன்றியது என்று காத்யாயனர் கூறுகிறார்.

காளிகா புராணத்தில் லட்சுமி வில்வ மரங்கள் அடங்கிய காட்டிலேயே தவம் செய்தாள் என்று குறிப்பிடுகிறது.

## சின்ன... சின்ன ஆன்மிக செய்தி

காலை எழுந்தவுடன் தனது உள்ளங்கைகள், பசு, கோவில் கோபுரம், இறைவனின் திருவுருவப் படம் இவற்றை பார்க்கவேண்டும்

தினசரி விளக்கேற்றுவது சிறப்பு. செவ்வாய் மற்றும் வெள்ளிகளில் 5 முகம் கொண்ட விளக்கேற்றுவது இன்னும் சிறப்பு.

விளக்கை அமர்த்துதல் அல்லது மலையேற்றுதல் என்று தான் சொல்லவேண்டும். 'அணைப்பது' என்ற வார்த்தையை உபயோகிக்கவே கூடாது. அது அமங்கலச் சொல்லாகும்.

விளக்கை தானாக மலையேற விடக்கூடாது, ஊதியும் அமர்த்தக்கூடாது. புஷ்பத்தினாலும் மலையேற்றக்கூடாது. அப்போ எப்படித் தான் சார் மலையேற்றுவது என்று தானே கேட்கிறீர்கள்?

தீபத்தை எப்போதும் கல்கண்டை கொண்டு தான் அமர்த்தவேண்டும்.



## சிவலிங்கம்...!!

தேவர்கள் சிவலிங்க வழிபாடு செய்வதற்காகவே விசுவ கர்மாவிடம் பற்பல சாந்தித்யங் களோடு கூடிய சிவலிங்கங்களைப் பெற்றனர். அவை:

அசுவினி தேவர்கள் – மண்ணாலான லிங்கம்

இந்திரன் – பதுமராக லிங்கம்

எமதர்மன் – கோமேதக லிங்கம்

சந்திரன் – முத்து லிங்கம்

சரஸ்வதி – சொர்ண லிங்கம்

வருணன் – நீல லிங்கம்

வாயுதேவன் – பித்தளை லிங்கம்

விஷ்ணு – இந்திர லிங்கம்

நாகர்கள் – பவள லிங்கம்

பிரம்மன் – சொர்ண லிங்கம்

ருத்திரர்கள் – திருவெண்ணீற்று லிங்கம்

குபேரன் – சொர்ண லிங்கம்

மகாலட்சுமி – நெய்யினாலான லிங்கம்





# ஆடம்பரத்திற்காக தானம் கொடுத்தால் கொடிய நரக வாசம் கிடைக்கும்



தற்போது தானம் என்பது ஏனோ தானோ என்ற முறையில் வழங்கப்படுகிறது. பணம் இருப்பவர் தனது பிறந்த தினம், மற்றும் குடும்ப விஷேச தினங்களில் வெற்று படோடபத்திற்காக குறைந்த விலையில் கிடைக்கும் எந்த பொருளையாவது ஊர் அறிய வேண்டும் என்ற நோக்கத்திற்காக மிகப் பெரிய விழாவைப் போன்று கொண்டாடி கொடுக்கின்றனர்.

அவர்கள் கொடுக்கும் பொருட்களின் மதிப்பைவிட, ஆடம்பரத்திற்கு அவர்கள் செய்யும் செலவுதான் அதிகமாக இருக்கும். மேலும் தானம் கொடுப்பதன் நோக்கம் தெரியாமல் பெயருக்காக கொடுக்கப்படும் தானம் மிகவும் வேடிக்கையாகவும் விநோதமாகவும் இருக்கும், அந்த அந்த காலநிலைக்கு ஏற்ற பொருளை கொடுக்காமல் குறைந்த விலையில் அதிகமான பொருள் கிடைக்கும் என்பதால், வெயில்காலத்தில் கம்பளிப் போர்வையையும் மழைகாலத்தில் குளிர் பானத்தையும் தானமாகத் தருபவர்களும் உண்டு.

ஒருசிலர் தானம் என்ற பெயரில் ஒருசிலருக்கு, ஒருசில பொருட்களை வேண்டாவெறுப்பாக கொடுத்துவிட்டு, மற்றவர்களுக்கு தங்களது உதவியாளர் மூலம் வழங்க கூறி தனது ஆடம்பர வாழ்க்கையை மற்றவருக்கு பறைசாற்றுவார்கள்.

இதுபோன்ற வேடிக்கையான தானங்கள் எந்த வகையிலும் அவருக்கு பலனைத் தராது. மேலும் இதுபோன்ற அர்த்தமற்ற தானங்கள் கொடுப்பவருக்கு மிகக் கொடிய பாவங்கள் வந்து சேரும் என்று இந்து வேதங்கள் கூறுகிறது.

ஒருவன் மனத்தூய்மையோடு தானதர்மங் களைத் தன் கையாலே செய்வானாயின், அதனால் அவன் அடையும் பயன் என்ன? அவனுக்காக அவனுடைய மகன் முதலியோர் தான தர்மம் செயபவர்களானால்அதனால் உண்டாகும் பயன் என்ன? என்பதை வேத சாஸ்திரம் எளிமையாக கூறியுள்ளது.

மனத்தூய்மை இல்லாமலும், மனவுறுதி இல்லாமலும் (நம்பிக்கையில்லாமல்) செய்யப்படும் நூறு கோதானங்களுக்கு எத்தனைப் பயன் உண்டோ, அத்தனை பயனும் சித்த சுத்தத்தோடு சாஸ்திரங்களில் விதித்த வண்ணம் ஒரு பசுவை நல்லவர் ஒருவருக்கு தானம் செய்தால் கிடைக்கும்.

கோதானம் கொடுப்பவரும், வாங்குபவரும் மனத்தூய்மை உள்ளவராகயிருக்க வேண்டும். கற்றுணர்ந்த சான்றோருக்குக் கொடுக்கப்படும் தானம். வாங்குபவர் உத்தமராக இருக்க வேண்டும். தானம் கொடுப்பவருக்கும் வாங்குபவருக்கும் புண்ணியமுன்டாகும். வேத சாஸ்திரங்களை ஓதாமலும், ஒழுக்க வழியில் நில்லாமலும், பிராமணன் என்ற பெயரை மட்டும் கொண்டவனுக்கு தானம் கொடுத்தால், அந்த தானமே தானங் கொடுத்தவனுக்கு நரகத்தைக் கொடுக்கும்.

மேலும் தானம் வாங்குவதற்கே தகுதியில் லாதவன் தானம் வாங்குவானாயின் அவன் இருபத்தோரு தலைமுறை உள்ளவர்களோடு நரகம் புகுவான்.

ஒரு பசுவை, ஒருவருக்கு மட்டுமே தானம் கொடுக்க வேண்டும். சாதுக்களிடம் நல்லப் பொருள்களைப் பக்தி சிரத்தையோடு தானம் கொடுத்தவன், அந்தப் பிறவியிலாவது, மறுபிறவியிலாவது அதற்குரிய நற்பயனைச் சந்தேகமின்றி அடைவான்.

தானம் கொடுப்பவன் எளியவனாக இருந்தால் ஏதாவது ஒருபொருளைக் கொடுத்தாலும் போது மானது.

– ஸ்ரீ பதி

# சிவாலயம் எழுப்பினால் ஏற்படும் மேன்மைகள்



சிவாலயம் எழுப்புவதால் ஒருவன் பெறக்கூடிய மேன்மையை பற்றிச் சூத முனிவர் நைமிசாரணிய முனிவர்களுக்கு கூறலாணார்.

- சிவாலயம் எழுப்புபவன் தினமும் பெருமானை வழிபாடு செய்தால் உண்டாகும் சிறப்பை அடைகிறான்.
- அவன் குலத்தில் வாழ்ந்த நூறு தலைமுறையினர் சிவலோகம் செல்வர்.
- சிவாலயம் எழுப்ப வேண்டும் என்று மனதால் நினைத்தாலே ஏழு பிறவிகளில் செய்த பாலங்களில் இருந்து விடுபடுவான்.
- ஆலயம் கட்டி முடித்தால் அதில் உள்ள கற்கள் ஒவ்வொன்றிர்க்கும் ஒவ்வோரு ஆயிரம் ஆண்டுகள் சிவ லோகத்தில் இருக்கும் வேறு பெறுவர்.
- சிவலிங்கத்தை உருவாக்குபவர் சிவலோகத்தில் அறுபதினாயிரம் ஆண்டுகள் இருப்பார். அவனது தோன்றல்களும் சிவலோகத்தை அடையும் புன்னியம் பெருவர்.
- சிவாலயத் தொண்டுகளில் ஈடுபடு வோரை எமன் நெருங்கக் கூடா தென்று சிவ பெருமான் எச்சரித்து உள்ளார். அவர்கள் தலைமுறையினரைக் கூட எமதூதர்கள் நெருங்க மாட்டார்கள்.
- சிவாலயத்தில் உரிய பொருள்களால் அபிஷேகம் செய்து வழி படுபவன் ஆயிரம் பசுக்களைத் தானம் செய்த பலனைப் பெறுவான்.
- கிருஷ்ணபக்ஷ சதுர்த்தசியில் சிவ லிங்கத்துக்கு சிவ லிங்கத்துக்கு நெய் அபிஷேகம் செய்தால் சர்வ பாவங்களும் விலகும்.
- பௌர்ணமி, அம்மாவாசைகளிலும் சிவ லிங்கத்திற்க்கு அபிஷேக, ஆராதனைகள் செய்வோர்க்கும் அத்தகைய பலனே கிடைக்கும்.
- பிரதோஷ காலங்களில் நெய்யபிஷேகம் செய்தால் அது தெரிந்தோ,தெரியாமலோ செய்த பாவங்களை நீர்மூலமாக்கும்.
- பசும்பாலால் அபிஷேகம் செய்தால் சிவலோகமடைந்து என்றும் மகிழ்சியாக இருப்பார்.
- நவக்கிரகங்களும் அவனுக்கு அருள் புரியும்.
- மலர்களுக்குப் பதில் பிருங்கராச பத்திரம், அருகம்புல் போன்றவற்றால் அர்ச்சனை செய்யலாம்.





# குளிர்ச்சியை தரும் சந்தனம் குங்குமம்

சந்தன மரம் மருத்துவப்பயன் நிறைந்த ஒரு மரம். சந்தனக்கட்டையை சந்தனக் கல்லில் தேய்த்து சாந்தாக்கி, உடம்பில் பூசிக்கொள்வதன் மூலம் கோடை வெப்பத்திலிருந்து தங்களை காத்துக்கொள்கிறார்கள் இந்தியர்கள். சந்தன மரம், வாசனை நிறைந்தது. மரத்தின் வைரம் பாய்ந்த கட்டைப் பகுதி எண்ணெய்ச்சத்து நிறைந்தது. இதிலிருந்து எடுக்கப்படும் எண்ணெய் மருத்துவத்தன்மை நிறைந்ததும், சருமத்துக்கு குளிர்ச்சி தரக்கூடியதுமாகும்.

நம் உடலின் அனைத்து நாடி நரம்புகளும் மூளையுடன் இணைக்கப்பட்டுள்ளன. உடலின் பெரும்பாலான நரம்புகள் நெற்றிப்பொட்டின் வழியாகவே செல்கின்றன. ஆகவே நெற்றிப்பகுதி அதிக உஷ்ணமாகவே இருக்கும்.

நம் அடிவயிற்றில் நெருப்பு சக்தி இருக்கிறது. ஆனால் அந்தச்சூட்டின் தாக்கம் அதிகமாக உணரப்படுவது நெற்றிப் பொட்டில்தான். அங்கு பூசப்படும் சந்தனம் நமது மூளையையும், அதை இணைக்கும் நரம்புகளையும் குளிரச் செய்கிறது. நெற்றிப்பகுதியிலுள்ள frontal cortex என்னும் இடத்தில் அணியப்படும் சந்தனமானது, வெப்பம் மிகுதியால் ஏற்படும் மூளைச்சோர்வை நீக்குகிறது.

பெண்கள் நெற்றியில் பொட்டு வைத்துக்கொள்ள பயன்படுத்தும் ஒரு பொடி குங்குமம். இயற்கை முறையில் விரலி மஞ்சள், வெண்காரம், படிகாரம், கஸ்தூரி மஞ்சள் ஆகியவற்றைச் சேர்த்து அரைக்கப்பட்ட பொடியுடன் நல்லெண்ணெய் சேர்த்தால் குங்குமம் தயார். மஞ்சளும், காரமும் வேதிவினை புரிவதால் சிவப்பு நிறம் கிடைக்கிறது. அம்மன் கோவில்களில் பிரசாதமாக குங்குமம் தரப்படுகிறது. மனித உடலில் தெய்வ சக்தி வாய்ந்தது நெற்றிக்கண். அதாவது, இரண்டு புருவங்களுக்கு நடுவிலுள்ள பகுதி. இங்கு குங்குமத்தை இட்டால் அமைதி கிடைக்கும்.

நம் கபாலத்தில் உள்ள சிந்தனை நரம்புகளின் முடிச்சு இரு புருவங்களுக்கு இடையே உள்ளது. மனிதன் அதிகமாக சிந்திக்கும்போது சிந்தனை நரம்புகள் சூடேறி நெற்றி வலி, தலைபாரம், தலைச்சுற்றல் ஏற்படும். மேலும் மன உளைச்சல் ஏற்பட்டு, தன் நிலை மறக்க வேண்டிய சூழ்நிலை உருவாகி பல விரும்பத் தகாத விளைவுகள் ஏற்படும். ஆகவே



அந்த நரம்பு மண்டலம் குளிர்ச்சியாக இருக்க வேண்டும்.

சந்தனம், குங்குமம் போன்றவற்றுக்கு குளிர்ச்சியூட்டும் தன்மை உண்டு. எனவே அந்த நரம்பு மண்டலம் குளிர்ச்சியாக இருக்க வேண்டும் என்பதற்காக சந்தனம் பூசி, சந்தனம் காயாமல் இருக்க குங்குமம் இடுகிறோம். இதனால் புத்துணர்வும், புதுத்தெளிவும், புதிய சிந்தனைகளும், உற்சாகமும் தோன்றும். உணர்ச்சியற்ற நரம்புகள் தூண்டப்படுகின்றன.

மனிதனின் உடற்கூறுக்கு உகந்த முறைகளைத்தான் நாம் இறைவழிபாடுகள் மூலம் அடைகிறோம்.


1


2


3


4


5

# பல்வேறு நோய்களை எளிதாக தீர்க்கும் முத்திரைகள்


6


7


8

1

## வஜ்ர முத்திரை

தினமும் 5நிமிடங்கள் புகை பிடிக்கும் பழக்கம் விடவும் இரத்த ஓட்டத்தை அதிகரிக்கவும் வயிறு கோளாறு நீக்கவும் தலைச்சுற்றல் மயக்கம் போன்றவற்றை குணமாக்கும்

2

## கபநாச முத்திரை

தினமும் 15நிமிடங்கள் உடல் பருமனை குறைக்கவும், வியர்வை சம்பந்தப்பட்ட பிரச்சனைகளுக்கும் வியர்வை நன்றாக வெளியேறவும், தாழ்வு மனப்பான்மை நீக்கவும், தைராய்டு நோயையும் குணமாக்கும்

3

## சி முத்திரை

தினமும் 15நிமிடங்கள் நீர்சத்து கட்டுப்பாட்டில் இருக்கும், கவலை மற்றும் மனக் கஷ்டங்களையும், பயம், மனச் சோர்வு, போன்றவற்றை நீக்கவும் மூளையின் சக்தியை அதிகரிக்கவும் பெரிதும் பயன்படும்.

4

## தாரண சக்தி முத்திரை

தினமும் 5நிமிடங்கள் மூச்சுவிடுகிற சக்தி அதிகரிக்கும் இரத்த ஓட்டம் நன்றாக செயல்படும், நுரையீரலுக்கு பிராணவாயு கிடைக்கும் இம்முத்திரையை மூச்சை அடக்கி செய்ய வேண்டும்.

5

## காலேஸ்வர முத்திரை

தினமும் 20 நிமிடங்கள் வாழ்க்கை முறை ஒழுக்கம் நிறைந்ததாக இருக்கவும், நல்ல எண்ணங்கள் உருவாகவும், தைரியம், தன்னம்பிக்கை உருவாகவும் மது பழக்கத்திலிருந்து விலகவும் உதவும்.

6

## முகுள முத்திரை

தினமும் 5 நிமிடங்கள் உடலுக்கு புத்துணர்ச்சியைக் கொடுக்கும், நோய்களை குணப்படுத்தும் சக்தி கிடைக்கும், மனக்கவலை, மன இறுக்கம் நீங்கும், உடலில் சக்தி அபரிமிதமாக கிடைக்கும்

7

## வாயு முத்திரை

தினமும் 15நிமிடங்கள் தூக்கமின்மையிலிருந்து நிவாரணம் கிடைக்கும், பெருங்குடலில் வாயு சேர்வதை தடுக்கும், காதில் இரைச்சல் குணமடையும், பக்கவாத நோய்களை எளிதாக குணப்ப டுத்தும்

8

## வயிறு முத்திரை

வயிற்றில் வாயு தொந்தரவால் அவதிப்படுவதை எளிதாக நீங்கும், நெஞ்செரிச்சல் நீங்கும், இருதயம் படபடப்பு குறையும், சாப்பிடும் உணவு எளிமையாகவும் சத்தானதாகவும் நன்றாக ஜீரணமாம் ஆகவும் உதவும்


ஆன்மிகமலர்
16-31 அக்டோபர் 2020 17
www.aanmeegamalar.com

# சடாரி தத்துவம்

பெருமாள் கோவில்களில் சடாரி சாத்துவதும் சிறப்பு. சடாரியின் மேல் இறைவனின் திருவடி பொறிக்கப்பட்டிருக்கும். இதனால் இறைவன் நம்மை ஆள்கிறான் என்ற பவ்யமும் குடிகொள்ளும். அஹங்காரமும் மட்டுப்படும். நம்மாழ்வார் பெருமாள் திருவடிகளை அடைந்தவர் அவரே குருவாக இறைவனின் பாதத்தை நம்மிடம் சேர்பித்து நம்மை உய்விக்கிறார் என்று நம்பிக்கை. நம்மாழ்வாருக்கும் சடகோபன் என்று பெயர். சடாரிக்கும் சடகோபம் என்று வழங்குகிறார்கள். ‘சடை’ என்ற தேவையற்ற விஷயங்களை விலக்குவது, தீர்ப்பது என்று பொருள். பெருமாளுக்கு ஆதிசேஷனை பாதரக்ஷையாக பார்ப்பதால் இதை ஆதிசேஷம் என்றும் சொல்வார்கள்.

சடாரியை பற்றி மேலும் கூறும் போது

சடாரி அல்லது சடகோபம்; அதைக் கொஞ்சம் கூர்ந்து பாருங்க; ஏதோ ஒரு கிரீடம் போல இருக்கும். அதன் மேலே இரு பாதங்கள்! இறைவனின் திருப் பாதங்களை நாம் தேடிப் போகா விட்டாலும் கூட, அவை நம்மைத் தேடி வருகின்றன! நம்மைக் கடைத்தேற்ற! கோவிலுக்கு உள்ளேயும் சரி, வெளியேயும் சரி, இந்த சடாரி கூடவே பய ணிக்கும்! அறியாத சீடன், குருவை மட்டும் எப்படித் தனியாக அறிந்து விட முடியும்?



அவன் குருவை நோக்கிச் செல்ல வேண் டியதில்லை! சீடனை நோக்கிக் குரு தானே வருவார், சீடன் கற்க விழையும் போது! அது போல் ஒரு குரு வருகிறார் நம்மைத் தேடி! நம்மாழ்வாரின் இயற்பெயர் மாறன் சடகோபன்! சடாரிக்குப் பெயரும் சடகோபம் தான்! வைணவ மரபில் அவர் தான் ஆதி குரு! அவர் தான் சடாரியாக வருகிறார் நம்மிடம்! அவரே இறைவனின் சடாரியாக இருந்து, அவன் பாதங்களை, நம்மை நோக்கிக் கொண்டு வந்து கொடுத்து, நம்மை உய்விக்கிறார்! இதுவே சடாரியின் தத்துவம்! சரி, அதற்கு ஏன் கிரீடம் போல ஒரு அமைப்பு?

நம்மைச் சிறப்பித்து, நமக்கு்த் தலையில் சூட்டினா, உச்சி குளிர்ந்து விடாதா? வெளியில் காட்டிக் கொள்ளாவிட்டாலும், உள்ளே கொஞ் சமாச்சும் புளகாங்கிதம் அடைவோம் அல்லவா?: ) “தலை” மேல தூக்கி வச்சிக்கிட்டு ஆடுறான், “தலை” கால் தெரியலை அப்படின்னு பேச்சு வழக்கில் கூட, எண்சாண் உடம்புக்கு “தலையே” பிரதானம்! என்னா “தல”, சௌக்கியமான்னு தான் நாமளும் கேக்கறோம்! “தலை”யாய ஒன்றுன்னு தானே இலக்கியங்களும் சொல்கின்றன! இப்படிப்பட்ட மனிதனின் தலைக்கு அணிகலனாகத் தான் அந்தக் கிரீடம்!

இப்படிப்பட்ட மனிதனின் தலைக்கு அணிகலனாகத் தான் அந்தக் கிரீடம்!ஆனா கிரீடம் தான் உண்மையான அணிகலனா? இல்லை! அதுக்கு மேலேயும் ஒன்னு இருக்கு! உலகத்தில், தலை மேல் வைத்துக் கொண்டாட வேண்டிய ஒரே பொருள் எது? இறைவனின் திருப் பாதங்கள் தான்!

எண்குணத்தான் தாளை வணங்காத் தலை என்பது தான் வள்ளுவம்! அவன் மலரடிகளைச் சூட்டிக் கொள் வதை விட பெரும்பெருமை வேறெதுவும் இல்லை!

www.aanmeegamalar.com





# தொலைந்து போன நிம்மதி

சின்மயானந்தர்



ஒருவர் ஒரு வங்கியில் பணம் எடுத்துக்கொண்டு, பணப்பெட்டியை பின்னால் மாட்டிக்கொண்டு டூவீலரில் வேகமாகச் செல்லுகிறார். வண்டியின் அதிர்வில் அந்தப் பெட்டி லேசாகத் திறந்துகொண்டு, 100 பத்துரூபாய்நோட்டுகள் கொண்ட ஒரு கட்டு கீழே விழுந்துவிடுகிறது. அது தெரியாமல் அந்த நபர் வண்டியை ஓட்டிக்கொண்டு சென்றுவிடுகின்றார். (அந்த நபர் இக்கதையில் இனி வரமாட்டார்)

கீழே விழுந்த வேகத்தில் 100 பத்துரூபாய்நோட்டுகள் கொண்ட அந்த கட்டிலிருந்து ஒரே ஒரு பத்துரூபாய்நோட்டு மட்டும் விடுபட்டு காற்றில் பறந்து சிறிது தூரத்தில் கிடக்கிறது.

அந்த ஒற்றை பத்துரூபாய்நோட்டு இருந்த வழியில் ஒருவன் வருகிறான். இந்த நோட்டைக் கண்டு, ‘இன்று நரி முகத்தில் விழித்திருக்கிறேன் போல’ என நினைத்து, மிகவும் சந்தோஷமடைகிறான். அந்த நோட்டை எடுத்துக்கொண்டு ஹோட்டலுக்குப் போனான். இரண்டு இட்லி ஒரு காப்பி (அன்றய விலைவாசியில்) சாப்பிட்டான், அருகிலிருந்த பிள்ளையார் கோவில் உண்டியலில் மீதியிருந்த ஒரு ரூபாயைப் போட்டு, பிள்ளையாருக்கு நன்றி சொன்னான். சந்தோஷமாக வீடு திரும்பினான்.

மீதி 99 பத்துரூபாய்நோட்டுகள் கொண்ட கட்டு அது விழுந்த இடத்திலேயே கிடந்தது. அந்த வழியாக ஒருவன் வந்தான். இந்த நோட்டுக்கட்டைப் பார்த்தான். எடுத்தான்.

பரபரவென்று எண்ணினான். 99 நோட்டுகள்.

மீண்டும், மீண்டும் பலமுறை எண்ணினான்.

99 நோட்டுகள்தான்.

வங்கியில் 99 நோட்டுகள் கொண்ட கட்டு கொடுக்கமாட்டார்களே....

அந்த ஒற்றை பத்துரூபாய்நோட்டு இங்கே பக்கத்தில் எங்கேனும்தான் கிடக்க வேண்டுமென்று தேட ஆரம்பித்தான்...............

அந்த ஒற்றை பத்துரூபாயைத்

தேடினான்.... தேடினான்.... தேடினான்....

இன்னும் தேடிக்கொண்டிருக்கிறான்

என்று சொல்லி கலகலவென்று சிரித்தார் பூஜ்ய குருதேவ் அவர்கள்.

பத்து ரூபாய் கிடைத்தவன் திருப்தியாக சாப்பிட்டுவிட்டு சந்தோஷமாக சென்றான்.

990 ரூபாய் கிடைத்தவன் அதை அனுபவிக்காமல், இன்னம் ஒரு பத்து ரூபாய்க்காக அல்லாடிக்கொண்டிருக்கிறான்.





www.aanmeegamalar.com

# ஸ்ரீ குரு சரித்திரம்



எஸ்.ரகுராமன்

சப்த ரிஷிகளில் மிக ச்ரேஷ்டரான அத்ரி மகரிஷிக்கும் பதிவ்ரதா சிரோன்மணியான அனுஸூயா மாதாவிற்கு மும்மூர்த்திகளின் அம்சமாக பிறந்தவர் ஸ்ரீ தத்தாத்ரேயர்.

குரு பரம்பரை என்பது ஸ்ரீ தத்தாத்ரேயரிடம் இருந்துதான் ஆரம்பம்.

தத்தாத்ரேய வழிபாடு மகாராஷ்டிரா மற்றும் கர்நாடகாவில் மிக மிக அதிகம். அதற்குக் காரணம் இந்த இரண்டு மாநிலங்களில் மட்டுமே தத்தாத்திரேய அவதாரங்களாக பல மகான்கள் இருந்துள்ளார்கள் என்பதே. அவர்களுக்கு ஸ்ரீ குரு சரித்திரம் என்பது அதி ஸ்ரேஷ்டமாக கருதப்படுகிறது. அதில் தத்தாத்ரேய கலியுக முதல் இரண்டு அவதாரங்களான ஸ்ரீ ஸ்ரீ பாத ஸ்ரீ வல்லபர் மற்றும் ஸ்ரீ ஸ்ரீ நரசிம்ம சரஸ்வதி ஸ்வாமிகள் வரலாறு மிக விரிவாக கூறப்பட்டுள்ளன.

இந்த புத்தகம் ஸ்ரீ நரசிம்ஹ சரஸ்வதி ஸ்வாமிகளின் சீடரான ஒரு சித்தர் ஸ்ரீ நரசிம்ஹ சரஸ்வதி ஸ்வாமிகளின் பெருமைகளை அவருடைய ஒரு பக்தரான நமத்ஹரகா என்பவருக்கு விளக்கிக் கூறுவதாக உள்ளது. தத்த பக்தர்களுக்கு இந்நூல் வேதமாக கருதப்படுகிறது.

ஸ்ரீ நரசிம்ம சரஸ்வதியின் சீடரான ஸ்ரீ கங்காதர சரஸ்வதி முதலில் மராத்தியத்திலும் பிறகு வந்த ஸ்ரீ வாசுதேவானந்த சரஸ்வதி என்னும் தேம்பெ ஸ்வாமிகள் சமஸ்க்ரிதத்திலும் மற்றும் பலர் பல மொழிகளிலும் இயற்றி இன்று பல லக்ஷம் மக்கள் நித்ய பாராயணம் செய்யும் ஓர் ஒப்பற்ற புனித நூலாக ஸ்ரீ குரு சரித்திரம் விளங்குகிறது.

ஸ்ரீ குரு சரித்திரம் அவ்வளவு எளிதாக யாராலும் பாராயணம் பண்ண முடியாது. பூர்வ ஜென்ம புண்ணியக்குவியல்களால் மட்டும்தான் ஒருவரால் இதன் ஒரு அத்தியாயமாவது படிக்க முடியும். அதிலும் சப்தாக பாராயணம் அதி ஸ்ரேஷ்டம். நாம் நினைத்த கோரிக்கைகள் அனைத்தும் உடனடியாக நிறைவேறும். மிகவும் ஆச்சாரமாக அனுஷ்டித்தல் அவசியம்.



நிரந்தர லட்சுமி மற்றும் குரு கடாக்ஷம் ஸ்ரீ குரு சரித்திர பராயணத்தால் கிடைக்கும். நமது பூஜை அறையில் இப்புத்தகம் இருத்தலே பரம ஐஸ்வர்யம்.

குருச்சரித்திரத்தை இடை விடாது தொடர்ந்து 16 ஆண்டுகள் படித்ததின் பயனாக ஸ்ரீ தத்தாத்ரேயர் ஸ்ரீ மாணிக் பிரபு மகாராஜ் ஆக ஸ்ரீ மனோஹர நாயக ஹரகுடே, தாய் ஸ்ரீ பய தேவி தம்பதிக்கு மகனாக பிறந்தார்.

இப்புனித நூலை ஒருமித்த மனதுடன் நமது கோரிக்கையை மனதில் சங்கல்பித்து கொண்டு சப்தாக பாராயணம் (வியாழக் கிழமை தொடங்குவது உத்தமம்) அல்லது எந்தவொரு நன்னாளில் பின்வரும் முறைப்படி ஏழு நாட்களுக்குள் முடிக்க வேண்டும்.

முதல் நாள் 1 9 அத்தியாயங்கள் வரை
இரண்டாம் நாள் 1021 அத்தியாயங்கள் வரை
மூன்றாம் நாள் 2229 அத்தியாயங்கள் வரை
நான்காம் நாள் 3035 அத்தியாயங்கள் வரை
ஐந்தாம் நாள் 3638 அத்தியாயங்கள் வரை
ஆறாம் நாள் 3943 அத்தியாயங்கள் வரை
ஏழாம் நாள் 452 அத்தியாயங்கள் வரை

இப்புனித நூலை பாராயணம் செய்வதால் இல்லம் லட்சுமி கடாக்ஷமாய் நிரந்தர ஐஸ்வர்யத்துடன், மஹான்களின் தரிசனம் மற்றும் புண்ணிய மஹநீயர்கள் ஸூக்ஷ்ம ரூபத்தில் இல்லத்தில் தோன்றுவார்கள். நமது அனைத்து பாவங்களும், தாரித்ரியங்களும், தீராத ரோகங்களும், கொடிய நோய்களும், நிறைவேறாத நீண்ட நாள் பிரார்த்தனைகளும், புத்திர சந்தானமும், உத்தியோக உயர்வும், நிறைந்த கல்வியும், ஞானமும் மற்றும் அணைத்து விதமான நியாயமான வேண்டுதல்களும் நிறைவேறும். யார் யார் சிரத்தை எப்படியோ அதற்கேற்ற பலன் கிடைக்கும்.

ஸ்ரீ ராமாயணம், ஸ்ரீமத் பாகவதம், ஸ்ரீ சுந்தர காண்டம், ஸ்ரீ தேவி பாகவதம் போன்று ஸ்ரீ குரு சரித்திரத்தையும் சப்தாக பாராயணம் செய்வது மஹா மஹா புண்ணியம்.

ஒவ்வொரு நாளும் பாராயணம் செய்த பிறகு பூஜை செய்ய வேண்டும். வேறு இடங்களில் உணவருந்த கூடாது. சைவ உணவு மட்டுமே உட்கொள்ள வேண்டும். புலனடக்கம் அவசியம். சப்தாக பாராயணம் நிறைவடைந்தவுடன் ஏழை எளியோர்களுக்கும், அந்தணர்களுக்கு அன்னதானம் செய்வது மிக உத்தமம்.

புண்ணிய க்ஷேத்ர மஹிமைகளும், தீர்த்த யாத்திரை மகத்துவத்தையும், சிவ பூஜை மஹாத்ம்யம், ஸ்ரீ ருத்ர பாராயண பலன், பிரதோஷ வழிபாட்டின் சிறப்பு, சிவராத்ரியின் மஹிமை , பலன் மற்றும் அனுஷ்டிக்கும் விதம், விபூதியின் மஹிமை, ருத்ராக்ஷத்தின் மஹிமை, குருவின் மஹிமை, அத்ரி மஹரிஷியின் ஆற்றல் மற்றும் அனுசுயா மாதாவின் கற்பின் சிறப்பு, அனந்த விரதத்தின் பலன், தத்தாத்ரேயரின் அவதாரம், பதிவிரதா தர்மம், அத்திமரத்தின் பெருமை, அந்தணர்களின் வழிமுறைகள், இந்நூலில் உள்ளதை போன்று வேறு எந்த நூலிலும் விரிவான விளக்கங்கள் இல்லை.

ஸ்ரீ ஷிர்டி சாய்பாபா, தனது பக்தரான ஸாதேவை குரு சரித்திரத்தை பாராயணம் செய்யும்படி கூறினார். ஒரு வாரம் பாராயணம் செய்தவுடன் ஸாதேயின் கனவில் பாபா தம் கையில் குருசரித்திரத்துடன் காணப்பட்டார். பின்னர் பாபாவிடம் இந்த காட்சியின் கருத்து என்ன? குரு சரித்திரத்தை இன்னொரு வாரம் (ஸப்தாஹம் 7 நாட்களுக்குள் படித்தல்) பாராயணம் செய்ய வேண்டுமென்பதா? என்று கேட்டார். அதற்க்கு பாபா "ஆம். குரு சரித்திரத்தை சிரத்தை யுடன் பாராயணம் செய்யும் பக்தன் தூய்மை பெற்று நலம் பெறுகிறான். பகவான் அவனிடம் மகிழ்ச்சி கொண்டு, அவனை சம்சாரத்தினின்றும் காப்பாற்று கிறார்" என்று கூறினார்.

"ஆம். குரு சரித்திரத்தை சிரத்தையுடன் பாராயணம் செய்யும் பக்தன் தூய்மை பெற்று நலம் பெறுகிறான். பகவான் அவனிடம் மகிழ்ச்சி கொண்டு, அவனை சம்சாரத்தினின்றும் காப்பாற்றுகிறார்".

ஸ்ரீ ஷீர்டி சாய்பாபா

குரு சரித்திரத்தை பாராயணம் செய்வதினால் அறியாமை விலகி ஸ்ரீ குருவிடம் திடமான பக்தி ஏற்படும். குருவை முழுமையான நம்பிக்கையோடு பக்தியுடன் சேவிப்பவர்களுக்கு அவரின் கருணை மழை பொழியும். அப்படி சேவிக்கும் பக்தனின் கூடவே இருந்து காப்பாற்றுவதே அவரின் தர்மம். குரு சரித்திரத்தை பாராயணம் செய்வதனால் உங்களின் துயரங்கள் தீர்ந்து வேண்டியது நிறைவேறும்.

– எஸ்.ரகுராமன்

தொடர்பு எண்: 9940349593



ஆன்மிகமலர் மெயில் புக்
16-31 அக்டோபர் 2020 21
www.aanmeegamalar.com

# துன்பங்கள் போக்கும் தீபம்



- கஷ்டங்கள் நீங்க, நினைத்தது நடக்க எளிய வழி தீபம் ஏற்றுவதுதான். தீப ஒளி இருக்குமிடத்தில் தெய்வ அணுக்கிரகம் நிறைந்திருக்கும். வீட்டில் எங்கெல்லாம் முடியுமோ அங்கெல்லாம் தீபம் ஏற்றி வைக்கலாம்.
- தீபத்தில் உள்ள எண்ணெய் தான் எரிய வேண்டுமே தவிர திரி அல்ல. திரி எரிந்து கருகாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.
- விளக்கை ஏற்றும்போது வீட்டில் பின் வாசல் இருந்தால் அதன் கதவை சாத்தி விட வேண்டும்.

# இறை வழிபாடு

- சுப்ரபாதத்தை தினமும் காலை வேளையில் மட்டுமே கேட்க வேண்டும். அவ்வாறு கேட்க முடியாத நிலையில் மாலையில் கேட்க கூடாது.
- காலையில் விழித்தவுடன் நாராயணனையும் இரவு தூங்கு முன் சிவபெருமானையும் நினைக்க வேண்டும்.



# பாவம் தீர

- காலையில் நின்று கொண்டு செய்யும் ஜெபத்தால் இரவில் செய்த பாவமும், மாலையில் உட்கார்ந்து கொண்டு செய்யும் ஜெபத்தால் பகலில் செய்த பாவமும் தொலைகிறது.
- விளக்கு எரிந்துகொண்டிருக்கும்போது கைவிரலால் எண்ணெய்யிலுள்ள தூசியை எடுப்பதோ திரியை தூண்டுதோ கூடாது.
- எரிந்து கொண்டிருக்கும் தீபத்தை ஆண்கள் அணைக்கக் கூடாது.



# மாங்கல்ய விருத்திக்கு



- ருத்ரம், சமகம் போன்றவற்றை வீட்டில் காலையில் தினமும் கேட்பது நல்லது.
- நாம் வீட்டில் கடவுளை வணங்கும்போது நின்றவாறே தொழுதல் குற்றமாகும். அமர்ந்தபடி தான் தொழுதல் வேண்டும்.
- யாராவது தூங்கிக் கொண்டிருக்கும்போது காலை, மாலை வேளைகளில் விளக்கேற்றக்கூடாது. தூங்குபவர்கள் எழுந்த பிறகுதான் விளக்கேற்ற வேண்டும். தூங்குபவர்களின் தலைக்கு நேராக தேங்காய் உடைக்கக் கூடாது.
- பூஜையின்போது விபூதியை நீரில் குழைத்து பூசக் கூடாது. தீட்சை பெற்றவர்கள் மட்டுமே விபூதியை நீரில் குழைத்து பூசலாம்.
- பூஜை அறையில் வழிபாடு முடிந்ததும் இடது நாசியில் சுவாசம் இருக்கும்போது பெண்கள் குங்குமம் இட்டுக் கொண்டால் மாங்கல்ய விருத்தி ஏற்படும்.

www.aanmeegamalar.com

# திருமுறை செய்த அற்புதங்களும் அதிசயமும்



- வேதங்களால் பூட்டப்பட்ட திருக்கதவு திறந்தது பிறகு திருத்தாளிட்டது
- பாலை நிலம் நெய்தல் ஆனது
- பாண்டியன் சுரம் தீர்த்து கூன் நிமிர்த்தியது
- தேவார ஏடுகளை தீயில் கருகாமல் பச்சையாக எடுத்தது எதிர் நீச்சல் இடவைத்தது
- ஆண் பனை பெண் பனையாகியது
- விஷத்தினால் இறந்த செட்டி உயிர்பெற்றது
- எலும்பை பெண்ணாக்கியது
- சுண்ணாம்புக் காளவாயில் 7 நாட்கள் இருந்தும் உயிர் பிழைத்தது
- மத யானையை வலம் வரச்செய்து வணங்கவைத்தது
- மானசரோவரில் மூழ்கி திருவையாற்றில் எழுந்தது
- கல்லை தெப்பமாக கொண்டு கரையேறியது
- செங்கல்லைப் பொன்னாக்கியது
- விருதாசலத்தில் மணிமுத்தாற்றில் இட்ட பொன்னை ஆரூர் குளத்தில் எடுத்தது
- முதலை விழுங்கிய பிள்ளையை மீட்டது
- காவேரி பிரிந்து வழி விட்டது
- நரியை குதிரையாக்கியது
- வெள்ளானையில் கயிலாயம் சென்றது
- குதிரையை நரியாக்கியது
- பிறவி ஊமையை பேச வைத்தது
- பரம்பொருளான சிவபெருமானே எழுதிய பெருமைக்குரியது.

இப்படி திருமுறைகளின் அற்புதங்கள் ஏராளம் அதன் பெருமைகளை அளவிட முடியாது திருமுறைகளை நாளும் ஓதுவோம் சிவானுபவம் பெறுவோம்

# ஈர துணியுடன் பூஜை கூடாது..

- பூஜை அறையில் தெய்வப்படங்களை வடக்குப் பார்த்து வைத்தால் சாபமுண்டாகும்.
- விரத தினத்தில் தாம்பூலம் தரித்தல், பகல் உறக்கம், தாம்பத்திய உறவு, சண்டையிடுதல் கூடாது.
- ஈர உடையுடனும், ஒராடையுடனும், தலைகுடுமியை முடியாமலும், தலையிலும், தோளிலும் துணியை போட்டுக் கொண்டோ, கட்டிக் கொண்டோ வழிபாடு செய்யக் கூடாது.
- ஈர ஆடையுடன் வழிபட நேருமானால் ஈர உடையை, ஓம் அஸ்த்ராய பட் என்ற 7 முறை கூறி உதறி உடுத்தலாம்.
- ஆண்கள் தெய்வங்களை வழிபடும்போது தையல் உள்ள உடைகளை அணியக் கூடாது.



www.aanmeegamalar.com

## சிவபுராணம் சுட்டிக்காட்டும்

# மனித இறப்பிற்கான அறிகுறிகள்

இவ்வுலகில் பிறப்பு என்ற ஒன்று இருந்தால், இறப்பு என்ற ஒன்று நிச்சயம் இருக்கும். பிறப்பை கண்டு மகிழும் நாம், இறப்பைப் கண்டு அச்சமடைவோம். சாதிக்கும் யாருக்கும் இறக்க வேண்டுமென்ற எண்ணம் இருக்காது. இருப்பினும், நிச்சயம் ஒரு கட்டத்தில் அனைவரும் இறக்க நேரிடும். அதை யாராலும் தடுக்க முடியாது. அந்த வகையில் ஒரு மனிதன் இறக்கும் நிலையை அவனே அறிந்து கொள்ள வேண்டும் என்பதால், மனித இறப்பு சம்பவத்தின் போது நிகழக்கூடிய அறிகுறிகளை சிவபுராணத்தில் குறிப்பிட்டுள்ளனர்.

### அறிகுறி 1

எப்போது ஒருவரது சருமத்தின் நிறமானது வெளிர் மஞ்சளாகவோ அல்லது வெள்ளையாகவோ அல்லது லேசான சிவப்பாக மாற ஆரம்பித்தால், அது அவர் இன்னும் 6 மாத காலத்தில் உயிரை விடப் போகிறார் என்று அர்த்தமாம்.

### அறிகுறி 2

எப்போது ஒருவனால் அவனது பிம்பத்தை எதிரொலியை தண்ணீரிலோ அல்லது கண்ணாடியிலோ தெளிவாக காண முடியவில்லையோ, அத்தகையவர்களும் ஆறு மாதத்தில் இறக்கப் போகிறார் என்பதை வெளிப்படுத்துமாம்.

### அறிகுறி 3

எப்பொழுது ஒருவனுக்கு பார்க்கும் அனைத்தும் கருப்பாக தெரிய ஆரம்பிக்கிறதோ, அவர்களும் இறப்பை சந்திக்கப் போகிறார் என்று அர்த்தம்.

### அறிகுறி 4

ஒருவரது இடது கை மட்டும் ஒரு வாரத்திற்கு மேல் துடிக்கவோ அல்லது நடுங்க ஆரம்பிக்கிறதோ, அவர்கள் ஒரு மாதத்திற்கு மேல் உயிருடன் இருக்கப் போவதில்லை என்று அர்த்தமாம்.

### அறிகுறி 5

ஒருவரின் உணர்ச்சிமிக்க உறுப்புக்கள் இறுக்கமடைந்து கல் போன்று மாறுகிறதோ, அவர்களும் இன்னும் கொஞ்ச மாதத்தில் இறக்கப் போகிறார் என்று அர்த்தமாம்.

### அறிகுறி 6

நிலா, சூரியன் அல்லது நெருப்பின் ஒளியை சரியாக காணமுடியவில்லையோ, அத்தகையவர்களும் விரைவில் மரணத்தை சந்திக்கப் போகிறார் என்று அர்த்தம்.

### அறிகுறி 7

எப்போது ஒருவரின் நாக்கு வீக்கமடைந்து, ஈறுகளில் சீழ் கட்ட ஆரம்பிக்கிறதோ, அவர்கள் இவ்வுலகில் நீண்ட நாட்கள் வாழப் போவதில்லை என்று அர்த்தம்.



### அறிகுறி 8

ஒருவரால் வானத்தில் உள்ள போல் நட்சத்திரங்களை காண முடியவில்லையோ, அவரும் ஆறு மாதத்தில் இறக்கப் போகிறார் என்று அர்த்தம்.

### அறிகுறி 9

சூரியன், நிலா மற்றும் வானத்தை பார்க்கும் போது, அவை சிவப்பாக தெரிய ஆரம்பித்தால், அத்தகையவர்களும் விரைவில் மரணத்தை சந்திக்கப் போகிறார் என்று அர்த்தமாம்.

### அறிகுறி 10

ஒருவரின் கனவில் ஆந்தையோ, வெற்றிடமோ அல்லது கிராமம் அழிவது போன்றோ வந்தால், அவரும் மரணத்தை நெருங்கிக் கொண் டிருக்கிறார் என்று அர்த்தமாகும்.

www.aanmeegamalar.com



aanmeegamalar.com
இணையதளத்தின்
mobile app
GET IT ON Google Play

அனைத்து செய்திகளும், இ-புத்தகத்தையும்
இனி உங்கள் மொபைலில் படித்து மகிழலாம்.

ஆன்மிகமலர் .காம்

கூகுல் ப்ளே ஸ்டோரிலிருந்து ஆன்மிகமலர்
Aanmeega malar (mobile app)
டவுண்லோடுசெய்து, ஆன்மிக செய்திகள்,
உடல்நலன், பலன்கள், இ-புத்தகம் போன்றவற்றை
எளிதாக படிக்கலாம். சிறிய, பெரிய எழுத்துக்களில்
பெரியவர்களும் தெளிவாக படிக்கலாம்.

அனைத்து ANDROID சாதனத்திலும் எளிதாக இன்ஸ்டால் செய்யலாம்



www.aanmeegamalar.com

# 72,000 நாடிகளுக்கு வேலை கொடுக்கும்
# குசா தோப்புக் கரணம்



கிழக்கு அல்லது வடக்கு திசை நோக்கி நின்று கொள்ளவும். வலது காலை இடது காலுக்கு முன்னோ அல்லது இடது காலை வலது காலுக்கு முன்னோ வைத்துக் கொள்ளலாம். இரண்டு கைகளால் இரண்டு காதுகளைப் பிடித்துக் கொள்ளவும்.

இந்நிலையில் மெதுவாக நன்றாக அமர்ந்து, எழுந்து தோப்புக் கரணம் இடவும். கால்கள் முழுவதுமாக மடங்கும் அளவிற்கு அமர வேண்டியது முக்கியம்.

குறைந்தது மூன்று தோப்புக் கரணம் இடவும். முடிந்தால் 12, 24, 36 என 108 தோப்புக் கரணங்களோ அதற்கு மேலும் இடலாம்.

உடல், மனம், உள்ளத்தை அற்புத நிலையில் வைத்திருக்க உதவும் ஓர் ஒப்பற்ற வழிபாட்டு முறை. ஒவ்வொரு தோப்புக் கரணத்திற்கும் ஒரு இறை நாமத்தையோ, 108 அஷ்டோத்திர சத நாமாவளிகளில் ஒன்றையோ அல்லது தங்கள் பெயரையோ கூறவும். இது மிக முக்கியமான விதி முறையாகும். இறை நாமத்துடன் கூடி வராத எந்த ஆசனமும் வழிபாடாக அமையாது.

வெறும் உடல் பயிற்சியில் கிட்டும் ஆரோக்யம் ஆடு, மாடுகளைப் போல் நம்மை நீண்ட நாள் உயிருடன் வைத்திருக்கும். அவ்வளவே. உடம்பை இறை நினைவுடன் வளர்த்தலே உண்மையான யோகாசனப் பயிற்சி ஆகும். உடலுடன் உயிரையும் வளர்ப்பதே இறைவனின் திருநாமம். இதை நன்றாக நினைவில் கொள்ளுங்கள். தோப்புக் கரணம் இட்ட பின் மூச்சுக் காற்று சகஜ நிலை அடையும் வரை சற்று நேரம் ஓய்வெடுத்துக் கொள்ளவும்.

சாதாரணமாக, கால்கள் இரண்டையும் ஒன்றொக்கொன்று இணையாக வைத்தே தோப்புக் கரணம் இடுவார்கள். ஆனால், இங்கு குறிப்பிட்டதுபோல் ஒரு காலுக்கு முன் அடுத்த காலை வைத்து தோப்புக் கரணம் இடுதல் குசா முறையில் அமைந்த தோப்புக் கரணம் ஆகும். சாதாரண தோப்புக் கரணத்தைப் போல் குறைந்தது 100 மடங்கு பலன் தரக் கூடியதே சித்தர்கள் அருளிய இந்தக் குசா தோப்புக் கரணம் ஆகும்.

வலது காலை முன் வைத்தோ அல்லது இடது காலை முன் வைத்தோ இந்தப் தோப்புக் கரணத்தைப் போடலாம். பெண்கள் ஆண்கள் இருபாலரும் இந்தத் தோப்புக் கரணத்தால் அற்புத பலன் பெறலாம்.

கர்ப்பமுற்று இருக்கும் பெண்களுக்கு இந்தத் தோப்புக் கரணம் ஒரு வரப் பிரசாதமாகும். பிரசவம் சிரமமின்றி ஆவதுடன் பிறக்கும் குழந்தைகளுடம் பூரண உடல் ஆரோக்கியத்தையும் சிறந்த மன வளத்தையும் பெற்றிருக்கும் என்பது உறுதி.

அவ்வாறு பிரவத்திற்கு முன் இந்தத் தோப்புக் கரணம் போடாதவர்களும் பிரசவத்திற்குப் பின் இந்தத் தோப்புக் கரணத்தை போட்டு வந்தால் வயிறு, முதுகு தசைகள் இறுகி அறுவை சிகிச்சையின் போது அளித்த மயக்க மருந்துகளால் ஏற்பட்ட வேதனைகள் குறையும்.





# செரிமானம்



உடல் பருமன், உடல் எடை அதிகரிப்பதற்கான அடிப்படை காரணம், உடலில் கபம் சமநிலையில் இல்லாதது. கபத்தை சரி செய்ய இயற்கையில் ஆயுர்வேத தீர்வுகள் உள்ளது. கபத்தை சரி செய்வதால் உடல் எடை அதிகரிப்பதை தடுக்கலாம். செரிமானம் சரி இல்லை என்றால், அது நச்சுத் தன்மையை ஏற்படுத்தும். இது கபத்தை அதிகரிக்கும்.

தீபன், செரிமானத்திற்கு உதவும் வெப்பத்தை, எரியூட்ட உதவும் ஆயுர்வேத மருந்து. ஆனால் தீபன் பித்த சமநிலையை சீர்கெடுக்கும். இது பித்த உடம்பிற்கு உகந்தது அல்ல. இஞ்சி ஒரு மிக சிறந்த தீபன். பல மருத்துவ குணம் உள்ளது. சரிவர எடுத்துக்கொள்ளும் இஞ்சி, செரிமானத்தை உறுதிபடுத்தும். சாப்பிடுவதற்கு முன், ஒரு சிறிய இஞ்சித் துண்டை கருப்பு உப்பு அல்லது எலுமிச்சைச் சாறுடன் மென்று சாப்பிட்டால், செரிமானத்திற்கு உதவும் வெப்பத்தை ஊக்குவிக்கும். இஞ்சி டீ குடிப்பதும் நல்லது. இது சளியை குணப்படுத்தும், இரப்பை குடல் வலியை சரி செய்யும். இஞ்சிக்கு பதிலாக சுக்கு உபயோகம் செய்யலாம்.

பெருஞ்சீரக மூலிகை டீ குடிப்பது நல்லது. பெருஞ்சீரகம் சேர்த்து கொதிக்கவைத்த நீரை இவ்வளவுதான் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று வரைமுறையே இல்லை. நாள் முழுவதும் கூட குடிக்கலாம். சாப்பிட்ட பின் வருத்த பெருஞ்சீரகம் சிறிது சாப்பிடலாம். பெருஞ்சீரகத்தின் தனிச்சிறப்பு, பித்த உடம்பிருக்கு கூட இது உகந்தது.



சீரகத்தை பெருஞ்சீரகத்தோடு சேர்த்து சாப்பிடலாம். இது மிக நல்ல தீபன், அதோடு பற்களையும் சுத்தம் செய்யும்.

வாதம், கபம் உள்ளவர்கள் சாப்பிடும்போது கண்டிப்பாக குளிர்ந்த நீர் குடிக்கக் கூடாது. பித்தம் உள்ளவர்கள் குடிக்கலாம், ஆனால் அதிக அளவு கூடாது, தவிர்ப்பது நல்லது. குளிர்ந்த நீர் , செரிமானத்திற்கு உதவும் வெப்பத்தைத் தணிக்கும்.இது இயற்கையான செரிமானதிற்கு கேடாகும். அறிவுரையின்படி தீபன் எடுத்துக்கொள்பவர்கள், சூடான நீர் தான் குடிக்க வேண்டும். சாப்பிட்ட பின் சூடான நீர் குடிப்பது, செரிமானத்தை உந்துவிக்கும்.

– யோகி அஷ்வினி

குரு சிஷ்ய பரம்பரை வழியாக யோகா நெறியை கற்றுக் கொள்ள அணுகவும். இந்தியாவில் பல பாகங்களில் தியான் அஷிரமத்தால் யோகா கற்றுக் கொடுக்கப்படுகிறது. எந்த கட்டணமும் கிடையாது. 9841430369.

# உண்மையான யோகம் என்பது அன்புணர்வோடு இறைவனுடன் நம்மை இணைத்துக் கொள்வதாகும்

❖ பெற்றோரை ஒவ்வொருவரும் மதிக்க வேண்டும். அப்போதுதான் எதிர் காலத்தில் நீங்கள் தாய் தந்தையர் ஆகும் போது, உங்களை உங்கள் பிள்ளைகள் மதிப்புடன் நடத்துவார்கள்.

❖ மண்ணில் பிறக்கும் உயிர்களில் மனிதப்பிறவி தனிச்சிறப்புடையது. கடவுளின் கரங்களில் இருந்து இவ்வரிய கொடையாகிய மனிதப்பிறவி என்னும் வெகுமதியை பெற்ற நாம், அதன் அருமையை உணராமல் வாழ்ந்தால், பெரும் பாவம் செய்தவர்களாகி விடுவோம்.

❖ மனதை அலைபாய விடாமல் தடுப்பது யோகம். அவ்வாறில்லாமல் அலைபாய விட்டால் உண்டாகும் ரோகம். இன்றைய மனிதன் புலனடக்கம் இல்லாததால் உலக சுகங்களில் மூழ்கி தன்னையே இழந்து கொண்டிருக்கிறான்.

❖ சிலர் காலை மடக்கி உட்காருதல், ஒற்றைக் காலில் நிற்றல் இதைத்தான் யோகாசனம் என்று எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். உண்மையான யோகம் என்பது உயர்ந்த அன்புணர்வோடு இறைவனோடு நம்மை இணைத்துக் கொள்வதாகும்.

❖ அன்பால் இதயத்தை நிறைத்திருக்கும் மனிதனையே இறைவன் விரும்புகிறார். உண்மையோடும், பக்தியோடும் இருக்கும் மனிதர்களை இறைவனே தேடிவந்து விடுவார். அவர்களின் தேவைகளை நிறைவேற்றி அருள்வார்.







# 10 வகையான பொருள் தானம்

ஒரு சில தான தர்மங்கள் மக்களுக்கு ஒரு சில நன்மைகளை தரக்கூடியதாக அமையும் அந்த வகையில் மிக மிக நன்மைகளைத் தரக்கூடிய தானத்திற்கு தச தானங்கள் என்று பொருள். அதாவது 10 வகையான பொருட்களை தானம் செய்பவர்களுக்கு மிகுந்த நன்மைகள் விளையும் என்று பொருள் அந்த பத்து பொருட்கள்.

1. நெல் 2. எள் 3. உப்பு 4. தீபம் 5. மணி 6. வெள்ளி 7. வஸ்திரம் 8. சந்தனக்கட்டை 9. தங்கம் 10. நீர்ப்பாத்திரம்.

மேற்கண்ட பொருட்களை தானம் கொடுத்தால், தானம் கொடுத்ததின் பலன் சில காலங்களில் நமக்கு நன்மையாக மாறும் என்று புராணங்கள் கூறுகின்றன.



## நந்தியின் அருள் பெற்ற எட்டுப்பேர்

1. சனகர் 2. சனாதனர் 3. சனந்தகர்
4. சனத்குமாரர் 5. வியாக்கிரபாதர்
6. பதஞ்சலி 7. சிவயோக முனிவர்
8. திருமூலர்

## அஷ்ட பர்வதங்கள்

1. கயிலை 2. இமயம் 3. ஏமகூடம்
4. கந்தமாதனம் 5. நீலகிரி
6. நிமிடதம் 7. மந்தரம் 8. விந்தியமலை

### மந்த புத்தி குழந்தைகள்

# கல்வியில் சிறக்க எளிய பரிகாரம்



தற்போதைய கல்வி முறையில் பல்வேறு கடினங்கள் நிறைந்து விட்டதால் பிள்ளைகள் அவற்றை ஏற்கவும், சாதிக்கவும் முடியாமல் போகிறது, இது போன்ற வேதனையை பெரும்பாலும் மந்த புத்தி என்ற சோம்பலால்தான் விளைகின்றன.

இந்த மந்த புத்தி மாறி கல்வியில் சிறக்க இந்த எளிய பரிகாரம் பலன் தரும்.

சுக்லபட்ச (வளர்பிறை) சதுர்த்தி நாளில் அருகிலுள்ள விநாயகர் கோவிலில் குழந்தை பெயரில் அர்ச்சனை செய்து 11 குழந்தைகளுக்கு பென்சில், நோட்டுக்களை இனிப்புடன் சேர்த்து தானம் செய்யவும். கல்வி மேம்படும். மேலும் சங்கட ஹர சதுர்த்தியன்று மந்த புத்தி குழந்தைகளை விநாயகர் வழிபாட்டில் ஈடுபடுத்தினாலும், மந்த புத்தி அகலும், சந்திரனின் பாவத்தை போக்கும் விநாயகர், குழந்தைகளின் மந்த புத்தியையும் எளிதாக தீர்த்துவைப்பார்.

## திருவண்ணாமலை கிரிவல மகிமை

திருஅண்ணாமலையில் கிரிவலம் சென்றால் செல்வபவருடைய அத்தனை பிறவி வடிவங்களும் கூடவே சேர்ந்து வருகின்றன. ஒவ்வொருவரின் ஒட்டு மொத்தப் பிறவிச் சாரமே கூடவே சேர்ந்து அருணாச்சலத்தை வலம் வருமாம்!!!

இதற்குக் காரணம், அத்தனை கோடிப் பிறவிகளுக்கும் முற்றுப்புள்ளி இடும் ஆன்மசாதனமே அண்ணாமலை கிரிவலம் என்பதால்தான்!

நமது பிரபஞ்சத்தில் அருணாச்சலமான திரு அண்ணாமலையில் மட்டுமே இது சாத்தியமாகும். பவுர்ணமி தினம் போன்று மாதசிவராத்திரி நாளிலும் அருணாச்சல கிரிவலத்தைக் கடை பிடிக்க வேண்டும்.

# நாம் செய்யும் தானத்தில் மிகச் சிறந்தது அன்னதானம்

கலியுகத்தில் நம் ஒவ்வொருவருடைய கர்மவினைகளையும் அடியோடு மாற்றும் வல்லமை அன்னதானத்திற்கு உண்டு; கட்டாயப்படுத்தி அன்னதானம் செய்யக் கூடாது; அசைவ அன்னதானம் செய்யக் கூடாது; அரைகுறை மனதுடன் அன்னதானம் செய்யக் கூடாது; நமது குல தெய்வம் கோவிலில் அன்னதானம் செய்யலாம்; உள்ளூர் சிவாலயத்தில் தினமும் அன்னதானம் செய்யலாம்; மிகவும் தலைசிறந்த அன்னதானம், துவாதசி திதி அன்று அண்ணாமலையில் செய்யப்படும் அன்னதானமே!!!

ஒரு தமிழ் ஆண்டில் 8 முதல் 10 முழுத் துவாதசி திதி நாட்கள் மட்டும் தான் வரும்; இந்த நாட் களில் காலை 6 முதல் 7 மணிக்குள் குறைந்தது 18 சாதுக்களுக்கும், மதியம் 1 முதல் 2 மணிக்குள் குறைந்தது 18 சாதுக்களுக்கும்,இரவு 7 முதல் 8 மணிக்குள் குறைந்தது 18 சாதுக் களுக்கும் அன்னதானம் செய்ய வேண்டும்; அதன் பிறகு,கிரிவலம் வரவேண்டும்; இப்படிச் செய்தால் மறுபிறவியில்லாத முக்தி கிட்டும் என்று அருணாச்சல புராணம் தெரிவிக்கின்றது.



# சித்திரா பௌர்ணமி அன்று வெளிவரும் உப்பு

சித்ரா பவுர்ணமியன்று இரவில், ஒரு சில பகுதிகளில் பூமியிலிருந்து ஒருவகை உப்புவெளிப்படும். இதை பூமிநாதம் என்று சொல்வர். இந்த உப்பு, சித்தமருத்துவத்துறையில் முக்கிய இடத்தைப் பெறும் இது மூலிகையிலுள்ள ஜீவசக்திகள் வீரியத்துடன் விளங்க உதவுகிறது. இந்த உப்பு, சித்ரா பவுர்ணமியன்று வெளிப்படுவதை முதன்முதலில் கண்டறிந்தவர்கள் சித்தர்களே.





## 'சோறு கண்ட இடம் சொர்க்கம்'

## அன்னாபிஷேகத்தை பார்ப்பவர்களுக்கு

# சொர்க்கம் நிச்சயம்

'அன்னம் பரபிரம்ம சொரூபம்' என்று சொல்வது மரபு. அதாவது, அன்னம் வேறு; ஆண்டவன் வேறல்ல. இரண்டும் ஒன்று தான் இதையே நாட்டுப்புறங்களில் 'சோத்துக்குள்ளே இருக்கிறார் சொக்கநாதர்' என்றும் குறிப்பிடுவர்.

சிவபெருமானுக்கு, ஐப்பசிமாதம் பவுர்ண மியன்று அன்னத்தால் அபிஷேகம் செய்கிறார்கள். தஞ்சாவூர் பிரகதீஸ்வரர் கோயிலிலுள்ள பெரிய லிங்கத்திற்கு அன்னாபிஷேகம் நடப்பதைக் காண ஏராளமான பக்தர்கள் வருகிறார்கள்.

அன்னம் இட்ட கை சின்னம் கெட்டுப் போகாது. ஒருவர் செய்த அன்னதான புண்ணிய பலன் பல பிறவிகளுக்கும் தொடரும் என்று தர்ம சாஸ்திரங்கள் கூறுகின்றன. அன்னம் அரிசியிலிருந்து தயாராகிறது.

'அரிசி' என்ற சொல்லில் இருவித மந்திரங்கள் சேர்ந்துள்ளன.

'அரி' என்பதை விஷ்ணு என்றும், சிங்கம் என்றும் கூறலாம். பிரகலாதனைக் காப்பதற்காக பெருமாள் எடுத்த அவசரத்திருக்கோலம் சிங்க முகத்துடன் கூடிய நரசிம்ம அவதாரம்.

'சி'என்பது சிவ பெருமானைக் குறிக்கும். மகான்களுக்கு மட்டும் 'சி' என்ற மந்திரம் சொல்லி சிவனை வழிபட உரிமை இருக்கிறது.

'சோறு கண்ட இடம் சொர்க்கம்' என்று சாப்பாட்டு ராமன்களுக்கு உதாரணம் காட்டி சொல்வார்கள். உண்மையில், சோரில் அபிஷேகம் நடக்கும் சிவலிங்கத்தை தரிசிப்பவர்களுக்கு சொர்க்கம் கிடைக்கும் என்பதையே இப்படி குறிப்பிட்டனர்.

www.aanmeegamalar.com

# ஆசையால் உந்தப்பட்ட மனிதர்கள் வேட்டையில் விரட்டப்பட்ட முயலைப் போல ஓடுகின்றனர்

❖ உலகத்தின் மீது கொண்டுள்ள அளவு கடந்த பற்றை விடுங்கள். வாழ்க்கையில் ஒருவனுடைய செல்வமோ, அதிகாரமோ அவனை மேலும் மேலும் கீழ்நிலைக்குத் தள்ளி விடுகின்றன.

❖ 'அவன் என்னை நிந்தித்தான், தாக்கிச்ன், என் பொருளை அபகரித்தான்' என்று எண்ணிக் கொண்டே இருந்தால், எந்நாளும் பகைமை தீர்வதில்லை. அத்தகைய எண்ணங்களுக்கு சிறிதும் இடம் தராதீர்கள். அவனிடம் அன்புகாட்டுங்கள். பகைமை மறைந்துவிடும்.



❖ உங்கள் அறிவை நீங்களே தூண்டிக் கொள்ளுங்கள். உங்கள் நீங்களே பரிசோதனை செய்யுங்கள். இதனால், வாழ்வில் உண் டாகும் துன்பங்களைத் தடுத்துக்கொள்ளும் வலிமை உண் டாகும்.

❖ பொற்காசுகளை மழையாகப் பொழிந்தாலும் ஆசைகள் அடங்காமல் பெருகும். ஆசைகளின்படி அனு பவித்தல் அற்ப இன்பம் என்றும் பின்விளைவு துக்கமென்றும் அறிந்தவன் ஞனியாவான்.

❖ தன்னுடைய பகையால் ஏற்படும் தீமைகளை விட அடக்கம் இல்லாத மனமே ஒருவனுக்கு அதிகமான தீமைகளை ஏற்படுத்துகிறது.

❖ எந்த ஒரு நதியாலும் ஒருவனுடைய பாவத்தைக் கழுவ முடியாது. எந்த ஒரு சடங்கும் நம்மைத் தூய்மைப்படுத்தாது. தயவு, தருமசிந்தை, அமைதி போன்ற நல்லொழுக்கங்கசே நம்மை ஈடேற்றும்.

❖ நன்கு வேயப்படாத கூரை வீட்டில் மழைநீர் புகுந்து விடுவது போல புண்படுத்தப்படாத மனதில் ஆசைகள் புகுந்துவிடும். ஆசையைப் போன்ற நெருப்பு வேறு எதுவும் இல்லை. இதனால் உந்தப்பட்ட மனிதர்கள் வேட்டையில் விரட்டப்பட்ட முயலைப் போல ஓடுகின்றனர்.





# சம்மணங்கால் இட்டு சாப்பிடுவது

## ஆரோக்கியத்திற்கு சிறந்தது

இந்தியர்கள் ஏன் சம்மணம் இட்டு சாப்பிடுகின்றனர் என்ற ஆராய்ச்சி நடை பெற்றது அதன் முடிவில் "சம்மணங்கால் இட்டு சாப்பிடுவது தான் ஆரோக்கியத்திற்கு சிறந்தது" என அறிவிப்பு வெளியிட்டது.

### இரத்த ஓட்டம்!

நமது உடலை இடுப்பை மையமாக வைத்து, கீழ் உடல், மேல் உடல் என இரண்டாக பிரிக்கலாம். இதில் முக்கிய மான உடல் உறுப்புகள் பல மேல் உடலில் தான் இருக்கிறது. கீழ் உடலில் கால்கள் மட்டுமே இருக்கின்றன.

நடக்கும் போது மட்டும் தான் இரத்த ஓட்டம் கால்களுக்கு தேவைப்படுகிறது. மற்ற வேளைகளில் மேல் உடலில் இருக்கும் கண், காது, மூளை, கணையம், நுரையீரல், சிறுநீரகம், போன்றவைக்கு தான் இரத்த ஓட்டம் அதிகமாக தேவைப்படுகிறது.

### சக்தி!

சாப்பிடும் போது கீழே தரையில் சம் மணங்கால் இரட்டு அமர்ந்து உணவு உட்கொள்வதால் உட லுக்கு சக்தியும், ஆரோக்கியமும் அதி கம் கிடைக்கிறது.

### காலை மடக்கி அமர்தல்!

காலை மடக்கி அமரும் இந்த நிலை உணவு உட்கொள்வதால், சாப்பிடும் போது மேல் உடலுக்கு தேவையான அளவு இரத்த ஓட்டம் செல்லும். இது மேல் உடல் பாகங்களின் செயற்திறனை ஊக்குவிக்கும்.

### செரிமானம்!

முக்கியமாக, சம்மணங்கால் இட்டு உணவு உட்கொள்வதால் செரிமான மண்ட லம் வலுபெற்று, செரிமானம் சீராகவும், அஜீரண கோளாறுகள், வயிறு பிரச்சனைகள் உண்டாகாமல் இருக்கவும் உதவும்.

### கீழே கால்களை தொங்கவிடுதல்

மாறாக, நீங்கள் கால்களை தொங்கவிட்ட நிலையில் அமர்ந்து உணவு உட்கொள்ளும் போது, போதுமான இரத்த ஓட்டம் மேல் உடலுக்கு செல்லாமல். தேவையின்றி கீழ் உடலுக்கு கால்களுக்கு செல்லும். இதனால் மேல் உடலின் செயற்திறன் பாதிக்கப்படும்.

### இன்று முதல்.

எனவே, உணவை கீழே அமர்ந்து உட்கொள்வது கேவலமோ, கவுரவ குறைச்சலோ இல்லை என்பதை புரிந் துக் கொண்டு. இது முற்றிலும் ஆரோக்கியம் சார்ந்தது என்பதால், கீழே சம்மணங்கால் இட்டு அமர்ந்து சாப்பிடும் பழக்கத்தை இன்று முதலே பின்தொடருங்கள்!



# “அப்படியே ஆகட்டும்”

## தேவதை கொடுக்கும் வரம்



நம் வீடுகளில் ஏதாவது சண்டை சச்சரவு ஏற்படும்போது விபரீத வார்த்தைகளை கூறக்கூடாது என்று நமது முன்னோர் அடிக்கடி கூறுவதை கேட்டிருப்போம் அதற்கு காரணம் என்ன? என்று நாம் ஆராயாமல் விட்டிருப்போம்.

ஆனால் நம் முன்னோர் அவ்வாறு கூறியதற்கான அற்புத காரணம், நமது வீடுகளில் நம்மை சுற்றி எப்போதும் ஒரு தேவதை இருந்து கொண்டே இருக்குமாம். அந்த தேவதையை “அப்படியே ஆகட்டும் தேவதை” என்று கூறுவார்கள். நாம் எதைச் சொன்னாலும் “அப்படியே ஆகட்டும்” என்று அந்த தேவதை ஆசிர்வாதம் அளித்துக் கொண்டே இருக்குமாம். வேறு எந்த வார்த்தையையும் மாற்றியும் கூறத்தெரியாத தேவதை என்றும் கூறுவார்கள். அந்த தேவதையின் ஆசீர்வாதம் அப்படியே பலித்தும் விடுமாம்.

நாம் பேசுவது, சொல்வது, நல்ல வார்தைகளாகவும், மங்கள வாக்காகவும் இருந்தால் அந்த தேவதையும், “அப்படியே ஆகட்டும்” என்று ஆசீர்வதிக்கும்.

மாறாக தீயதான சொல்களையும் வார்த்தைகளையும் நாம் பிரயோகித்தோமானால், அதற்கும் அந்த தேவதை “அப்படியே ஆகட்டும்” என்றே கூறுமாம்.

இதனால்தான் நமது வீடுகளில், ஏதாவது ஒருபொருள் இருக்கிறதா என்று கணவன் கேட்டால், “இல்லையே”என்று மனைவி சொல்லக்கூடாது.

நிறைய இருந்தது. மறுபடியும் வாங்கவேண்டும் என்பது போல் சொன்னால் தேவதையும் அப்படியே ஆகட்டும் என்று ஆசீர்வதிக்குமாம். வீட்டில் எந்த பொருளும் எப்போதும் நிறைந்திருக்கும். வீடு எப்போதும் மங்களகரமாகவே இருக்கும். எனவே பேசும்போது நல்ல வார்த்தையாக அனைவரும் பேசுவோம்



## பெருமாள் கோவில்களில் மூன்று முறை தீர்த்தம் ஏன்?

முதல் முறை தீர்த்தம் ஸ்வீகரிப்பது ப்ரதமம் கார்ய சித்யர்த்தம் என்றபடி நம் செயல்களில் வெற்றி பெற (ஜ்ஞானத்தை வேண்டி) ஸங்கல்பம் செய்துகொள்வது.

இரண்டாம் முறை தீர்த்தம் ஸ்வீகரிப்பது த்விதீயம் தர்மஸ்தாபனம் என்றபடி, நாம் நெறியைக் கடைப்பிடிக்க ஸங்கல்பம் செய்துகொள்வது.

மூன்றாம் முறை தீர்த்தம் ஸ்வீகரிப்பது த்ரிதீயம் மோக்ஷ ப்ரோக்தம் குணார்னவம் என்றபடி, மெய்ப்பொருளான பகவானை உணர ஸங்கல்பம் செய்து கொள்ளும் மோக்ஷ உபாயம்.



## பாஞ்சசன்ய சங்கின் மகிமை

பாஞ்சசன்யம் என்பது கடலில் கிடைக்கும் ஒரு சங்கு தான். ஆனால் அந்த சங்கு சாமான்யமாக கிடைப்பதில்லை.

ஆயிரம் சிப்பிகள் சேருமிடத்தில் ஒரு இடம்புரி சங்கு கிடைக்குமாம்.

ஆயிரம் இடம்புரி சங்குகள் விளையும் இடத்தில் ஒரே ஒரு வலம்புரி சங்கு கிடைக்குமாம்.

வலம்புரி சங்குகள் ஆயிர கணக்கில் எங்கு இருக்கிறதோ அங்கே அரிதான சலஞ்சலம் என்ற சங்கு கிடைக்குமாம்.

சலஞ்சலம் சங்கு பல்லாயிர கணக்கில் உற்பத்தியாகுமிடத்தில் அரிதினும் அரிதான பாஞ்சசன்ய சங்கு கிடைக்கும்.

சங்கொலி என்பதே பிரணவ ஓசையை வெளிப்படுத்தும் ஒரு இயற்க்கை வாத்தியம். அதிலும் சுத்தமாக அக்ஷரம் பிசகாமல் பிரணவ மந்திரத்தை ஒலிப்பது பாஞ்சசன்யம் சங்கு மட்டும் தான்.

அந்த சங்கு கிருஷ்ணன் கையில் மட்டும் தான் இருக்கும்!!



## பூஜையின் போது மணி அடிக்கப்படுவது ஏன்?

நமது இருப்பிடத்துக்கு வரும் பெரியோர்களை மேளம் தாளம் முதலிய மங்கள வாத்ய ஓசைகளுடன் வரவேற்கிறோமல்லவா அதைப்போன்றே பூஜை செய்யுமிடத்துக்கு வரும் தெய்வங்களை வரவேற்பதற்காகவே மணி ஓசை எழுப்பப்படுகிறது

தேவர்களை வரவேற்பதற்காகவும் பூஜை செய்யும் இடத்தில் இருந்து நமக்கு இடையூறுகளைத் தரும் ராக்ஷஸர்களை விலக்குவதற்காகவும் தெய்வங்களை வரவழைப்பதற்க்காகவுமே மணி ஓசை எழுப்பப்படுகிறது.பூஜையின் போது நாம் அடிக்கும் மணி ஓசை கருடாழ்வாரின் ஒலி அல்லது ரிஷபத்தின் சப்தம் போன்று இருக்க வேண்டும் என்பதற்காகவே தான் பூஜா மணியின் மீது கருடர் அல்லது ரிஷப உருவம் பதிக்கப்பட்டுள்ளது. இந்த மணியின் ஒலி பூஜை செய்யப்படும் தெய்வங்களுக்கும் பூஜை செய்பவருக்கும் ஆனந்தத்தைத் தரும்.



ஆன்மிகமலர் மெயில் புக்

## மகாவிஷ்ணுவை பற்றி
# அற்புதமான தகவல்கள்

- திருநெல்வேலி நெல்லையப்பர் கோயிலில் உள்ள பெருமாளின் உற்சவத் திருமேனியில் மார்பில் சிவலிங்க அடையாளம் உள்ளது.
- உடுப்பி கிருஷ்ணருக்கு நவராத்திரி ஒன்பது நாட்களும் புடவை உடுத்துகிறார்கள்.
- ஆந்திராவில் பத்ராசலத்தில் ராமர் சங்கு, சக்கரத்துடன் காட்சியளிக்கிறார்.
- திருநெல்வேலிக்கு அருகில் உள்ள நாங்குநேரியில் பெருமாளுக்கு தினமும் மூன்று லிட்டர் எண்ணெய் சாத்தப்படுகிறது. பின்பு இது பக்தர்களுக்கு பிரசாதமாக வழங்கப்படுகிறது.
- சிவனைப்போல் முக்கண் உடைய பெருமாளைக் காண, சிங்கபெருமாள் கோயில் செல்ல வேண்டும். இங்குள்ள மூலவர் நரசிம்ம மூர்த்திக்கு மூன்று கண்கள் உள்ளன.
- திருக்கண்ணபுரத்தில் கண்ணபுரத்தான் பத்மாசனத்தில் ஸ்ரீதேவி, பூதேவி, பத்மினி, ஆண்டாள் என நான்கு தேவியருடன் சங்கு சக்கரம் தாங்கிக் காட்சியளிக்கிறார்.
- திருக்கோவிலூரில் உள்ள மூலவர் இலுப் பை மரத்தால் ஆனவர். இவரது பெயர் திருவிக்ர சுவாமி.
- கர்நாடகத்தில் உள்ள ஸ்ரீரங்கபட்டினத்தில் உள்ள ரங்கநாதர் எழுந்தருளியுள்ள ஆதிசேஷனுக்கு ஏழுதலைகள் இருப்பது வித்தியாசமானது.
- திருமலை, தான்தோன்றிமலை, உப்பிலியப்பன் கோயில், குணசீலம் ஆகிய நான்கு பெருமாள் கோயில்களிலும் தாயாக்கு சன்னதி இல்லை.
- பொதுவாக பெருமாள் ஆதிசேஷன் மேல் சயனித்தபடி இருப்பார். ஆனால் ஸ்ரீவைகுண்டத்தில் நத்தத்தில் ஆதிசேஷன் குடைபிடிக்க, பெருமாள் நின்ற கோலத்தில் காட்சி தருகிறார்.
- காஞ்சிபுரத்தில் உள்ள விளக்கொளிப் பெருமாள் கோயிலில் பெருமாள் ஜோதி வடிவில் இருப்பதாக ஐதிகம். இங்கு பெரிய கார்த்திகை அன்று பெருமாளுக்கு விளக்கேற்றி வழிபடுகிறார்கள்.
- கருங்குளத்தில் பெருமாளை மூன்று அடி உயரமுள்ள சந்தனக்கட்டை வடிவில் வைத்து அபிஷேக ஆராதனை செய்து பூஜித்து வருகிறார்கள். இதற்கு இரண்டு பக்கமும் சங்கு, சக்கரம் இருக்கிறது.
- மாமல்லபுரம் ஸ்தலசயனப் பெருமாள் கோயிலில் பெருமாள் ஒரு கரத்தை தலைக்கு வைத்துக் கொண்டு தரையில் சாய்வாகக் கால் நீட்டி சயனம் கொண்டிருக்கிறார். சங்கு, சக்கரம் இல்லை.
- காஞ்சி உலகளந்தபெருமாள் திருக்கோயிலில் திருமழிசையாழ்வாராலும், திருமங்கை மன்னராலும் மங்களாசாசனம் செய்யப்பட்ட நான்கு திவ்ய தேசங்கள் உள்ளன. பேரகம், நீரகம், காரகம், கார்வானம் ஆகியவையே அவை.





ஆன்மிகமலர் மெயில் புக்

www.aanmeegamalar.com

# மறுபிறவி அற்றவர்கள்
## சாஸ்திரம் கூறும் வழிமுறைகள்

மரணத்தோடு ஒரு மனிதனின் வாழ்க்கை முற்றுப் பெறுவதில்லை. அது மேலும் மேலும் தொடர்கிறது.

யாருக்கு மறுபிறவிகள் ஏற்படாது என்ற சந்தேகம் அனைவருக்கும் இருக்கும். இதற்கு சாஸ்திரங்கள், கருட புராணம், கடோபநிஷதம் போன்றவை மறுபிறவி, பற்றிய சில செய்திகளை குறிப்பிடுகின்றன.

பொதுவாக பூமியில் அனுபவிக்க வேண்டிய அனைத்தையும் அனுபவித்து முடிந்தவருக்கு மீண்டும் மறுபிறவி ஏற்படுவதில்லை.

இது கர்ம பூமியாதலால் தங்களது கர்மத்தை அனுபவிக்கவே உயிர்கள் பிறப்பெடுக்கின்றன. அவற்றை முற்றிலுமாக அனுபவித்து விட்டு, இனி அனுபவிக்க சஞ்சித கர்மா, பிராரப்த கர்மா, ஆகாம்ய கர்மா என ஏதும் இல்லாதவர்களுக்கு மறுபிறவி ஏற்படுவதில்லை.

இவ்வுலக ஆசைகள் ஏதும் இல்லாமல், பற்றற்ற வாழ்க்கை வாழ்பவர்களுக்கும், தவயோகிகளுக்கும் மறுபிறவி இல்லை.

சிறந்த தவத்துடனும் பக்தியுடனும் வாழ்ந்து, இறைவன் ஒருவனையே தங்கள் பற்றுக் கோடாகக் கொண்டு, தாங்கள் செய்யும் செயல்கள் அனைத்தையும் இறைவனுக்கே அர்ப்பணித்து வாழ்பவர்களுக்கு மறுபிறவி இல்லை.

தாங்கள் செய்த பாவக் கணக்கும், புண்ணியக் கணக்கும் சரியாகி கழிக்க ஏதும் கர்மவினைகள் இல்லாதவருக்கு மறுபிறவி ஏற்படுவதில்லை.

தன்னலம் கருதாது வாழ்ந்து மறைந்த மகான்களுக்கு மறுபிறவி இல்லை.

இறைவனின் கட்டளைப்படி மட்டுமே அவர்களது அவதாரம் நிகழும்.

பந்தம், பாசம், மோகம், அகந்தை, காமம் போன்ற மன அழுக்குகளிலிருந்து விடுபட்டு, இவ்வுலக வாழ்வை வெறுத்து, இறைவனையே சதா தியானித்து, அவன் நாமத்தையே எப்போதும் கூறி வரும் உண்மையான பக்தர்களுக்கு மறுபிறவி ஏற்படுவதில்லை.

நமது சாஸ்திரங்கள் கூறும் முறைப்படி பரமாத்மாவிலிருந்து பிரிந்து வந்த ஜீவாத்மாக்கள் அனைவரும், ஏதாவது ஒரு காலத்தில் அந்தப் பரமாத்மாவோடு இணைந்து தான் ஆக வேண்டும்.



ஆன்மிகமலர் மெயில் புக்



www.aanmeegamalar.com

# விடாமுயற்சியே ஆன்மீக வெற்றிக்கான முழுமையான மந்திர வித்தை

குருதேவர் அருளுகிறார்: “இறை அனுபூதியின் மிகப்பெரிய எதிரி தேகம்தான். அது எளிதில் சோர்வடைந்து முயற்சியைக் கைவிட விழைகிறது. ஓர் உண்மையான பக்தன், தன்னுடைய முயற்சியை தளர்த்தவோ அல்லது தேகத்தின் ஆதிக்கத்தை அனுமதிக்கவே மாட்டான். இடையறாத விழிப்பு தேவைப்படுகிறது. இடையூறுகளாகத் தோன்றும் அனைத்தையும் மீறி அவன் வருவான் என நாம் நம்ப வேண்டும். இறைவன் இருக்கிறான் என்பது சாத்தியமில்லை எனக் கருதுகின்ற, அவனைத் தேடுவதில் முயற்சி தளராமல் இருக்கின்ற நாத்திகவாதிகூட, இறுதியாக அவனைக் காண்பான். இறைவன் பதிலளிப் பான் எனத் தோன்றாவிடினும்கூட, சந்தேகங்களுக்கு ஆளாகிவிடாமல், புனிதத் தேடலை விடாமுயற்சியுடன் தொடர வேண்டும். விடாமுயற்சியே ஆன்மீக வெற்றிக் கான முழுமையான மந்திரவித்தை. இறைஞானத்திற்கான பக்தனின் பிரார்த்தனைகளுக்கு இறைவன் சுலபமாகவும் வெளிப்படையாகவும் பதில் அளிப்பானாகில், அனைத்து மனிதர்களும் உடனடியாக நாடுவார்கள். அது அவனிடம் கொண்ட அன்பினால் அல்ல, மாறாக எல்லையற்ற வெகுமதிகளுக்காகவே..”

“இவ்வுலகம் இறைவனின் விளையாட்டரங்கு. அவன் தன்னுடைய இருப்பைத் தேடுதலை மிகவும் கடினமாக்கி இருப்பதானது, இங்கே அவனுடைய சிக்கலான நாடகத்தின் ஒரு பகுதியாகும். தேடல் எளிதானதல்ல என்பதால், நாம் அவனை மறந்துவிட முயற்சிக்கிறோம். நம் அன்பிற்குரியவர்கள் மர்மமான அறியப்படாத பிரதேசத்திற்குள் இழுத்துக்கொள்ளப்படுவதை நாம் கண்டாலும் நாமும்கூட எப்பொழுதாவது போகவேண்டியிருக்கும் என்பதைப்பற்றித் தீவிரமாகச் சிந்திப்பதில்லை. ஆனால் இறைவனை நாடவேண்டியதன் முக்கியத்துவத்தை அறிந்துகொள்வதற்காக, மரணம் அருகில் நெருங்கும்வரை ஒருவர் காத்திருக்கக்கூடாது. அது ஒவ்வொரு மனிதனுடைய தலையாய மற்றும் உடனடியான கடமையாகும். வாழ்வின் ஒவ்வொரு நிமிடமும் ஓர் இறைத்தேடலாக இருக்க வேண்டும். நம் இதயங்களில் இருக்க வேண்டிய கொழுந்துவிட்டு எரியும் வினா, “ஓ இறைவா! உன்னை எப்பொழுது காண்பேன்.?”



குருப்ரியா

“என்ன நடந்தாலும் சரி, இந்த இன்றியமையாத தேடலைக் கைவிடாதீர்கள். ஒருவர் தியானம் செய்ய அமரும்போது, நண்பர்கள் வருவதாக வைத்துக்கொள்வோம். தியானத்தைக் குறைத்துக் கொள்வதைத் தவிர வேறு எதுவும் செய்வதற்கில்லை; இருந்தாலும், ஒருவர் இறைவன்பால் தன் மனதை தொடர்ந்து வைத்திருக்கலாம். எந்த வேலையாக இருந்தாலும் சரி, உங்கள் கவனம் அவன் மீதே இருக்க வேண்டும். அந்த அளவிற்கு அவன் நமக்குத்தேவை! எனவே, இப்பொழுதே மும்முரமாகுங்கள்; காலம் கழிந்து கொண்டிருக்கிறது. கண் இமைக்கும் நேரத் தில் வாழ்நாள் கடந்து விட்டது. ஆயினும் இன்னும் அவனைக் கண்டறியவில்லை என்னும் பயங்கரமான ஞானம் ஒருநாள் தோன்றும். அவன்மீது தியானம் செய்வதற்கான உங்களு டைய முயற்சியை மேற்கொள்ளாமல் எந்த நாளையும் கடக்க விடாதீர்கள். விரைவில் ஆச்சியப்படும் வண்ணம் கொஞ்சம் முயற்சியே தேவைப்படும். உறுதி தளராத பக்தனுக்கு பெரும் மகிழ்ச்சி வந்தடையும். தணியாத உற்சாகம் இல்லாமல், எதையும் அடைய முடியாது.”

**92**
**பாகம்**
**பரமஹம்ஸ யோகானந்தர் அருளிய வழிமுறைகள்**
**மனித வாழ்வு மேம்படுவதற்காக**

குருதேவர் தொடர்கிறார்: “ஆன்மீகப் பாதையில் தேக உணர்வுகளுக்கு மேலாக எழுப்ப வேண்டியதின் முக்கியத்துவத்தை பகவத்கீதை போதிக்கிறது. வெளிப்புற சூழ்நிலையுடன் புலன்களுக்கு உள்ள தொடர்பானது, வெப்பம், குளிர்ச்சி, இன்பம், துன்பம் மற்றும் இதர எதிரெதிர் திசைகளின் உணர்ச்சிகளை ஏற்படுத்துகிறது, சாதாரண மனிதன் இந்த உணர்ச்சிகளால் எளிதில் பாதிக்கப்படுகிறான். ஆனால் ஒருவன் இவைகளுக்கு நடுநிலையில் இருக்க வேண்டும் எனக் கீதை போதிக்கிறது. இது அஜாக்கிரதையுடன் இருக்க வேண்டும் என்பதற்கான பரிந்துரை அல்ல! யோகியானவன் வெப்பம் அல்லது குளிர்ச்சி ஆகிய உணர்ச்சிகள் தாங்கிக் கொள்வதற்கு வெகு கடினமாக இருப்பதைக் கண்டால் அக முகமாக பாதிப்படையாமல் வெளிப்புற பரிகாரத்தை நாட வேண்டும். எவர் மன நடுநிலைமையை பயிற்சி செய்ய முடியுமோ, அவர் ஒரு மகான் ஆவதற்கான பாதையில் உள்ளார். எவர், மாறுகின்ற புலன் உணர்வுகளால் பாதிக்கப்படாமல் இன்பம், துன்பம், குளிர்ச்சிவெப்பம், மற்றும் இது போன்ற நிலைகளில் மனச் சமநிலையுடன் இருந்து, இந்த தேக ஆலயத்தில் வாழ்கின்றாரோ அவர் மனிதருள் ஓர் உண்மையான அரசனாகிறார். மாற்ற மடையாத தன்மையை எய்திவிட்டால், மாற்றமடையா பரம்பொருளுடன் ஒன்றாகிறார்.”

மேலும் அவர் கூறுகிறார்; “ஆன்மீகப் பயிற்சிக்காக என்னுடைய குருதேவரின் ஆசிரமத்திற்கு வந்தவர்கள் அனைவரும் இவ்வாறான வழியில் ஒழுக்கப்பயிற்சி அளிக்கப்பட்டனர். இதுபோலவே மேலை மற்றும் கீழைநாட்டின் ஆன்மீக ஆவலுள்ள யோகி, தன்னை ஒழுங்குபடுத்திக்கொள்ளவேண்டும். அவர் தன் தேகத்தைப்பற்றி அதிகம் அலட்டிக்கொள்வதைத் தவிர்க்கவேண்டும். அவர், மற்ற எல்லா காரியங்களுக்கும் தன்னால் நேரத்தை ஒதுக்க முடியாதுபடி மும்முரமாகத் தன்னை கண்டால், ஒழுக்கமென்னும் சாட்டையைத் தனக்குத்தானே எடுத்துக்கொள்ளவேண்டும். ஏன் அஞ்சி இருக்க வேண்டும்? பலன் அடைவதற்கான அனைத்தும் உள்ளன. ஒரு மனிதன் தன் சொந்த முக்தியை அடைவதற்காக தானே கதறி அழுது

போராடவில்லையெனில், அவனுக்காக வேறு எவராவது அதனைச் செய்வார்களா?”

“இறைஅனுபூதி எய்துவதற்கு மிகக் கடினமான நிலையாகும். எவரும் தன்னை முட்டாளாக்கிக்கொள்ளவேண்டாம், அல்லது வேறு ஒருவர் அதைத் தனக்கு ‘கொடுக்க ‘ முடியும் என எண்ணவும் வேண்டாம். நான் மனரீதியான தேக்க நிலையை அடைந்தபோதெல்லாம். எனது குருதேவர் எனக்காக ஒன்றும் செய்ய இயலவில்லை. ஆனால் அவர் என்னை எதையெல்லாம் செய்ய சொன்னாரோ அவற்றை உற்சாகத்துடன் செய்வதன் மூலம் அவருடன் இசைந்திருக்க முயன்றுகொண்டு என் முயற்சியைக் கைவிடாமல் இருந்தேன்” நான் இறைஞானத்திற்காக இவரிடம் வந்துள்ளேன். மேலும் நான் அவருடைய அறிவுரையை செவிமடுக்க வேண்டும்.” என நான் நியாயப்படுத்தினேன். அவருடைய ஆசிரமத்தில் இளம் சீடர்களாகிய நாங்கள் எப்பொழுதும் சமைத்துக்கொண்டே இருப்பதுபோல் தோன்றியது. மேலும் தியானம் செய்யாமல் இருப்பதற்காக இதர பல சாக்கு போக்குகள் இருந்தன. ஆனாலும் என் சொந்த வீட்டில் வேலை செய்வதைவிட, அதிகக்கடினமாக அங்கு உழைத்தாலும் கூட, ஆசிரம சூழ்நிலை எனக்கு ஆன்மீக ரீதியாக உதவியாக இருப்பதைக் கண்டேன். “ என்கிறார் அன்பு குருதேவர்.

‘விடாமுயற்சியே ஆன்மீக வெற்றிக்கான முழுமையான மந்திர வித்தை’என போதிக்கிறார் குருதேவர். குருதேவர்கூட அவ்வாறிருந்துதான் இறைவனை அடைந்தார் என்பதை நமக்கு சுட்டிக்காட்டி, அவரைப் போன்று நம்மையும் முயற்சி செய்யத் தூண்டுகிறார். நாம் நமக்குத் தெரியாத பணிகளை முதலில் கற்கும்போது கடினமாகத் தெரியும். ஆனால் நாம் அதை தொடர்ந்து முயற்சி செய்ய வேண்டும். நமக்கு தெரிந்துகொள்ளவேண்டும் என்ற ஆர்வத்துடனும் வைராச்சியத்துடனும் முயற்சித்தால் தெரியவரும். எந்தப்பணியையுமே விடா முயற்சியில் தொடர்ந்து செய்தால் எல்லாம் நன்கு செய்ய முடியும் என்பது தெரியவரும். உதாரணமாக சிறு குழந்தைகள் நடக்க ஆரம்பிக்கும்போது பார்த்துக்கொண்டிருக்கும் நமக்கே கஷ்டமாக இருக்கும். ஆனால் அக்குழந்தைகள் வெகு விரைவிலும் எளிதிலும் நடக்கத் தொடங்குகின்றனர். சிறு குழந்தைகூட விடாமுயற்சியினால் நடக்கப்பழகி பின்னர் குழந்தை தன்னுடைய குறிக்கோளை அடைகின்றது. அதேபோலவே எல்லா செயல்களையும் செய்து பழகலாம். வாழ்க்கையில் நடக்கக் கூடிய சின்னச்சின்ன விஷயங்களைக்கூட விடாமுயற்சியால் சாதிக்கலாம் என்கின்றபோது இறைவனை அடையவேண்டும் என்ற குறிக்கோளை ஏன் சாதிக்க முடியாது. மனம்தான் முக்கியம் சோம்பேறியாக இருந்தால் எந்த முயற்சியும் செய்ய முடியாது. அவர் மனரீதியான தேக்க நிலையை அடைந்த போதெல்லாம் அவருடைய குருதேவரால் அவருக்காக ஒன்றுமே செய்ய இயலவில்லை என்று குருதேவர் குறிப்பிட்டுள்ளார். இதிலிருந்து, மனம் செம்மையாக வேண்டும்; அதன் பின்னர்தான் குருவும் நமக்காக உழைக்க முடியும் என்பது தெரியவருகிறது.

நமது மனித வாழ்க்கை நாடகத்தில் ‘மரணம்’ நெருங்குவதற்கு முன்னரே இறைவனைத் தேடிக்கண்டுபிடிக்கவேண்டும் என்பது குருதேவருடைய முக்கியமான போதனை. ஆனால் மரணத்தைப்பற்றி கவலைப்படாமலிருக்க வேண்டுமென்ற ஆர்வம் இருப்பவர்கள் இறைவனைத் தேடுவதில் மும்முரமாக இருப்பர். இறைவனை வேறெங்கும் சென்று தேடவேண்டாம். நாம் இருக்கு மிடத்திலேயே இருந்து கொண்டு நமக்குள் உறைந்திருக்கும் இறைவனை கண்டுபிடிக்க வேண்டும். பகவத் கீதை கூறுகிறது:

க்ஷேத்ரஜ்ஞும் சாபி மாம் வித்தி
ஸர்வக்ஷேத்ரேஷு பாரத
க்ஷேத்ரக்ஷேத்ரஜ்ஞயோர் ஜ்ஞானம்
யத்தல் ஜ்ஞானம் மதம்மம

பகவான் கிருஷ்ணன் அருளுகிறார்: “அர்ஜுனா! எல்லா தேகங்களிலும் வியாபித்திருக்கின்ற ஜீவ சைதன்யம் இறைவனுடைய பிரதிபிம்பம். அதை அறியாமலிருக்கும்வரை இறைவன் வேறாக இருப்பதாக நினைக்கின்றனர். உதாரணமாக, தோளில் போட்டிருக்கும் அங்கவஸ்திரத்தை காணவில்லை என்று வீடு முழுவதும் தேடுகின்றனர்.



ஆனால் கிடைக்கவில்லை. அங்கவஸ்திரத்தைக் காணவில்லை என்று வருத்தப்பட்டுக் கொண்டிருக்கும்பொழுது, யாரோ ஒருவர் மூலமாகவோ, அல்லது வெகு நேரம் கழித்து தானாகவோ’ அங்கவஸ்திரம் காணாமல் போகவில்லை, அது தன்னுடைய தோளில்தான் உள்ளது’ என்பது தெரியவருகிறது. உண்மையில் அங்கவஸ்திரம் எங்கேயும் போகவில்லை. அது மனதின் பிரமைதான். அதுபோலவே நமக்குள் உறைந்திருக்கும் இறைவனை அறியாமலிருப்பதற்குக் காரணம் அறியாமைதான்.

அதுபோலவே அஞ்ஞானத்தால் ஏற்படுவதுதான் பிறப்பும் இறப்பும், அஞ்ஞான ஸ்வரூபமான ஸம்ஸ்காரத்தினால் ஸம்ஸார வாழ்க்கையிலுள்ள எந்த ஓர் அனுபவத்தாலும் ஜீவனின் துன்பமானாலும் துயரமானலும் தீராது. மாறாக அவை அதிகரிக்கத்தான் செய்யும். தியானத்தால், ஆழ்ந்த தியானத்தால் சித்த சுத்தி வந்தால் மகான்களின் தொடர்பு ஏற்பட்டு, அவர்களுடைய போதனைகள் படித்து, அவற்றைப் பின்பற்றும்போது மட்டுமே ஒருவனுடைய துக்கத்திற்கு நிவர்த்தி உண்டாகும். அது இல்லையெனில் ஸம்சாரத்திலிருந்து வெளியேவர கடினம்ததான்.

(பகவத் கீதை அத்.13 ஸ்லோகம் 2)

எனவே, எது எவ்வாறிருந்தாலும் இறைவனை அடைவதென்ற குறிக்கோள் உதயமானால் அதை மேலும் தியானத்தால் வளரச்செய்ய முயற்சிசெய்ய வேண்டும். முயற்சியால் முன்னேற்றமடையும்பொழுது இறைவன் நமக்குள் உறைந்திருப்பதைக் காண்பிக்க குருதேவர் வருவார். தானாகவே வருவார். அது நமது இறைவனுடனுள்ள பக்தியும் விஸ்வாசமும் அதை வளர்க்க உள்ள இறைத்தேடுதலும், விடாமுயற்சியும் உலகப் பொருட்கள் மேலுள்ள ஆசையின்மையுமாகும். பின்னர் குருவை கீழ்ப்படிந்து அவருடைய ஆசீர்வாதத்தாலும் உதவியாலும் பக்தன் இறைவனைக்கண்டுபிடிப்பான்.

மீண்டும் மலரும்...

குருப்ரியா (வசுமதி) சர்பதிவாளர் (ஓய்வு)
Cell No.9894595909

# நவராத்திரி 9 நாள் 9 வடிவம்

நவராத்திரியின் 9 தினங்களும், கடைசி தினமான வெற்றியை குறிக்கும் 10ம் நாள் வரை 10 தினங்களுக்கு 10 வடிவங்களின் அம்பாளை வணங்கவேண்டும். மேற்கண்ட 10 தினங்களும், 10 வடிவங்களும், அந்த வடிவங்களில் வழிபட்டால் நீங்கும் பிரச்சனைகளைப்பற்றியும் பார்ப்போம்.

நவராத்திரி பண்டிகையின் முதல் நாள் மது கடைபர் அழிவுக்கு காரணமான தேவியை குமாரி வடிவமாக வழிபட வேண்டும்.

இரண்டாம் நாள் மகிஷாசுரனின் சேனைகளை வதம் செய்ய புறப்பட்ட ராஜராஜேஸ்வரியாக துர்க்கையின் வடிவத்தை அலங்கரித்துப் பூஜிக்க வேண்டும்.

மூன்றாம் நாள் மகிஷாசுரனை வதைத்த அம்பிகையை சூலத்துடன் மகிஷன் தலை மீது நிற்கும் கோலத்தில் வழிபட வேண்டும்.

**9 நாள்களும் வழிபடவேண்டிய வடிவங்களும், பலன்களும்**

| நாள் | பெயர் | பயன் |
|---|---|---|
| 1 | குமாரி | தொல்லை நீங்கும் |
| 2 | திருமூர்த்தி | தனதான்ய வளம் |
| 3 | கல்யாணி | பகை ஒழித்தல் |
| 4 | ரோகிணி | கல்வி வளர்ச்சி |
| 5 | காளிகா | துன்பம் நீங்குதல் |
| 6 | சண்டிகா | செல்வ வளர்ச்சி |
| 7 | ஸாம்பவி | நலம் விரும்பி |
| 8 | துர்க்கா | பயம் நீக்குதல் |
| 9 | ஸீபத்ரா | உண்டாகுதல் |

நான்காம் நாள் அம்பிகையின் வெற்றித் திருக்கோலமாக வழிபட வேண்டும்.

ஐந்தாம் நாள் அம்பிகை சும்பன் என்ற அசுரனின் தூதன் வந்து பேசுவதை கேட்கும் கோலத்தில் பூஜிக்க வேண்டும்.

ஆறாம் நாள் அன்று சர்ப்ப ராஜா ஆசனத்தில் ஸ்ரீ சண்டிகா தேவி அமர்ந்திருக்கும் கோலம் பூஜைக்குரியதாகும்.



ஏழாம் நாளில் சண்ட முண்டர்களை வதைத்த பின் பொன் பீடத்தில் அம்பிகை அமர்ந்து வீணை வாசிக்கும் கோலத்தில் பூஜைகள் செய்யப்பட வேண்டும்.

எட்டாம் நாளில் ரக்த பீஜன் வதமான பின் கருணை நிறைந்த தோற்றத்துடன் உள்ள அம்பிகையை பூஜிக்க வேண்டும்.

ஒன்பதாம் நாளில் வில், அம்பு, அங்குசம், சூலம் முதலியவைகளை தரித்த கோலத்தில் அம்பிகையை பூஜிக்க வேண்டும்.

பத்தாம் நாளன்று அம்பிகை லிங்கத்தைப் பூஜித்து சிவசக்தி ஐக்கிய ரூபிணியாக விளங்குகிறாள்.

எனவே அந்த கோலத்தில் அம்பிகையை வழிபடுதல் வேண்டும். நவராத்திரியில் கன்னிகை பூஜை, சுவாஸினி பூஜை, மிகவும் முக்கியம். ஒவ்வொரு நாளும் 2 வயதுப் பெண் குழந்தை முதல் முறையே பத்து வயது பெண் வரை ஒவ்வொன்றாகவோ அல்லது முதல் நாள் ஒன்று இரண்டாம் நாள் இரண்டு என்ற முறையாகவோ குமாரி பூஜை செய்ய வேண்டும்.

www.aanmeegamalar.com



ஆன்மிகமலர் மெயில் புக்

# கடவுள், ஆசிரியர் மற்றும் கடவுளின் பக்தனுக்கு முன்னால் காலை நீட்டித் தூங்குதல் கூடாது



நல்ல ஒழுக்கமும், உயர்ந்த பக்தியும் கொண்டவர் களிடம் இருந்து மட்டும் உணவைப் பெற்று மகிழுங்கள். ஒரு கடவுள் வணக்கமே மேலானது, பிற தெய்வங்களை வணங்குதல் பாவமாகும்.

கடவுளின் பக்தர்களுக்கு பணி செய்வதால் தான் கடவுளை அடைய முடியும் என்பதை உங்கள் இதயத்தில் நிறுத்திக் கொள்ளுங்கள்.

கடவுளுடைய பக்தர்களுக்குப் பணி செய்யத் தன் னையே எவன் தியாகம் செய்யாமல் இருக்கிறானோ, அவன் சிறந்தவனாக இருந்தாலும் அழிந்து விடுவான்.

தன் உறவினர்களை எப்படி நேசிக்கிறீர்களோ அவ் வாறே கடவுளின் பக்தர்களைப் பாடி மகிழ வேண்டும்.

காலையில் எழும்போது ஆன்மீகச் சொற்களை உச்சரித்துப் பழக வேண்டும்.

கடவுளுக்கு முன்னால், ஆசிரியருக்கு முன்னல் கடவுளின் பக்தனுக்கு முன்னால் காலை நீட்டித் தூங்குதல் கூடாது.

கோயில், விமானம், கோபுரம் ஆகியவற்றைக் கண்டதும் மரியாதையுடன் தலைவணங்குதல் வேண்டும்.

ஒருவனுடைய பிறப்பைப் பற்றியோ, தொழிலைப் பற்றியோ எண்ணாமல் அவனுடைய கொள்கை களைப் பின்பற்றி பணிவிடை செய்வதே மேலான தாகும்.

– ராமானுஜர்

## கொடிய பாவத்தையும் போக்கி சந்ததியினரை காக்கு சோமவார பிரதட்சிண அமாவாசை

மாதந்தோறும் வரும் அமாவாசைகளில் திங்கட்கிழமை அன்று அமையும் அமாவாசைக்கு, “பிரதட்சிண அமாவாசை” என்று பெயர். இந்நாளில் அரச மரம், அரசுடன் இனைந்த வேப்ப மரம், அரசு, அத்திமரம், பனைமரம் இணைந்த தலங்களில், இதனைச் சுற்றிக் குறைந்தது 16, 32, 64, 108 முறை “விருட்சப் பிரதட்சிணம்” செய்தால் (மரத்தைச் சுற்றிவந்தால்) பன்மடங்காய்ப் பலங்களைப் பெறலாம்.

இப் பிரதட்சிண அமாவாசை பிதுர் தோஷங்களை அகற்றும், உற்றம், சுற்றத்தில் உள்ள மனக் கசப்புகளைத் தீர்த்து மன அமைதியைத் தரும்.

மிகக் கொடூரமாய்த் தீய செயல்களைப் புரிந்து பூமியில் வாழ்ந்து மறைந்தவர்களாக இருந்தால் அவர்களின் பலன் கொடிய நரகம் என்று புராணங்கள் கூறுகிறது.

அப்படிப்பட்ட நரக வாசம் அனுபவிப் பவர்களுக்கு நல் பலன் கிடைக்க வேண்டுமானால், சோமவார அஸ்தவப் பிரதட்சிண பூஜைகளைச் செய்தால் அக்கொடியவர்களுக்கு நல்ல பலன் கிடைக்கும் என்று கூறுப்படுகிறது.

முன்னோர்கள் செய்த தீவினைக் கர்மங்கள், தற்போதைய சந்ததியினரைத் தாக்காமல் காக்க வேண்டுமானால், சோமவார பிரதட்சிண அமாவாசை வழிபாடு செய்தால் உடனடிப் பலன் கிடைக்கும் என்று புராணங்கள் கூறுகிறது.

ஆன்மிகமலர் மெயில் புக்



www.aanmeegamalar.com

# யாரெல்லாம் ஒரு (ஏக) உருத்திராட்சம் அணியலாம்? அணிவதால் உண்டாகும் பலன்கள்



- தீட்சை பெற்றவர் பெறாதவர் என அனைவரும் அணியலாம்
- ஆண் பெண் பாகுபாடு இல்லாமல் எல்லா வயதினரும் எல்லாக்காலத்தும் அணியலாம்
- மது மாமிசம் அறவே சாப்பிடக்கூடாது .அதன் புனிதம் காக்கப்படவேண்டும்
- தாம்பத்தியம் செய்ய இல்லற வாழ்க்கைக்கு தடை எதுவும் இல்லை
- பெண்கள் மாதவிலக்கு பிறப்பு இறப்பு தீட்டு என்று எந்த கட்டுப்பாடுகளும் கிடையாது ஏனெனில் இவையெல்லாம் மனிதபிறவியில் உண்டான இயற்கை நிகழ்வுகளே ஆகும்
- வியாதி உள்ளவர்கள், குழந்தைகள், மன நோய்க்கு ஆட்பட்டவர்கள், நரம்பு, வலிப்பு, இரத்த அழுத்தம் மற்றும் அது சம்பந்தமான நோய்கள் என சகல நோய் பீடித்தவர்களுக்கும் மிக சிறந்த வைத்தியமாகும்
- பில்லி ஏவல் சூனியம் பேய் பிசாசு தந்திரம் மந்திரம் எந்திரம் கண் திருஷ்டி போன்ற எதுவும் உருத்திராட்சம் அணிந்தவர்களுக்கு வேலை செய்யாது.
- சிவப்பு கயிற்றில் கோர்த்து கழுத்தில் கண்டத்தில் படுமாறு அணிய வேண்டும்
- குளிக்கும்போது உருத்திராட்சம் அணிந்து குளித்தால் கங்கையில் குளித்த பலன் உண்டு
- ஒரு முறை அணிந்தால் வாழ்நாள் முழுக்க அணிந்திருக்க வேண்டும். மரணத்தின் போது எமகணங்கள் நம்மை நெருங்காது. சிவகணங்கள் வந்து கொண்டு செல்வார்கள் அதனால் நரகம் கண்டிப்பாக இல்லை.
- ஆலய வழிபாட்டின் போதும் சிவபூசையின் போதும் கண்டிப்பாக உருத்திராட்சம் அணிய வேண்டும் அதில் உள்ள மின் காந்த ஆற்றல் நமக்கு இறைவனை நெருங்கி இழுத்து வரும் காந்தம் இரும்பை ஈர்ப்பது போல இறை சக்தியை ஈர்த்து தரும்.

# கஷ்டங்களைத் தீர்க்க உதவும் தீப வழிபாட்டு முறைகள்

ஒவ்வொரு செவ்வாய்கிழமை காலையும். மாலையும் ஸ்ரீ கால பைரவரை அஷ்டலட்சுமியும் வழிபட உகந்த நேரமாகும், அந்த நேரத்தில் கடன் தீரவும். செல்வம் பெருகவும் இரு அகலில் நெய்தீபம் ஒன்றிலும். நல்லெண்ணெய் ஒன்றிலும் ஊற்றி சிவப்பு திரி போட்டு தனித்தனியே ஏற்றினால் கஷ்டங்கள் தீரும்,



நவகிரக தோஷம் விலக அரசடி விநாயகருக்கு சதுர்த்தி திதி அல்லது ஞாயிற்றுக்கிழமை மூன்று அகலில் ஒவ்வொன்றின் வீதம் தேங்காய் எண்ணெய். நல்லெண்ணெய். பசு நெய் இவைகளை தனித்தனியே ஏற்றி வழிபட கிரக தோஷம் விலகும்.

சித்திரை. ஆடி மாதத்தில் வரும் செவ்வாய் கிழமையில் ராகுகால வேளையில் சிவாலயத்தில் உள்ள அன்னை துர்க்கைக்கு 9 அகலில் 9 வகை எண்ணெய் தனித்தனியே ஊற்றி 9 வகை கலர் திரி ஒவ்வொன்றிலும் ஒரு கலர் திரி வீதம் போட்டு தீபம் ஏற்றி அன்னையை வழிபட தீரா பிரச்சினையும் தீரும்,





# ராகுகால பூஜைசெய்ய உகந்த கிழமைகளும் பயன்படுத்தும் மலர்களின் பலன்களும்

எந்த ஒரு நல்ல காரியம் செய்யும் போதும் ராகுகாலம், எமகண்டம் போன்றவற்றை பார்த்து பார்த்து செய்வது வழக்கம்.

இவ்வாறு நாம் பார்க்கும் கால நேரங்கள் நமது ராசி, அதிர்ஷ்டம் போன்றவற்றுடன் சேர்ந்து பல்வேறு வெற்றி கிடைக்க வழிவகை செய்யும் என்று முன்னோர்கள் கூறியுள்ளனர். அந்தவகையில் ராகுகாலத்தில் பொதுவாக எந்த காரியத்தையும் செய்வதில்லை.

ஆனால் அந்த நேரத்தில் இறை நம்பிக்கையுடன் ராகுகால பூஜை செய்யும்போது கிரக மற்றும் கெடுதல் சக்திகளிலிருந்து விடுபடலாம் என்று முன்னோர்கள் வகுத்த பூஜைதான் ராகுகால பூஜையாகும்.



ராகு கால பூஜை என்பது என்ன, அதனால் ஏற்படும் நன்மைகள் என்ன என்று அனைவரும் தெரிந்து கொள்ளவேண்டும்.

நாம் நமது இல்லங்களில் அன்றாடம் பூஜை மேற்கொள்கிறோம், இது தவிர கோவில்களுக்கு சென்று வழிபடுகிறோம். ராகு கால நேரம் என்பது வாரத்தில் அணைத்து நாட்களிலும் உண்டு.

செவ்வாய் கிழமை மற்றும் வியாழக் கிழமைகளில் செய்யப்படும் ராகு கால பூஜை மிகவும் சிறப்பானது.

இதைத்தவிர மற்ற நாட்களிலும் ராகு கால பூஜை செய்யலாம். ஒவ்வொரு கிழமைகளில் ஒவ்வொரு விதமான மலர்களைக் கொண்டு பூஜை செய்வது வாழ்வில் நிம்மதியும் வளங்களும் பெருகும்.

சூரிய கிரகத்துக்கு ஞாயிற்று கிழமைகளில் பாரிஜாதம் மற்றும் வில்வ மலர்களைக் கொண்டு பூஜை

சந்திர கிரகத்துக்கு திங்கள் கிழமை களில் வெள்ளை அலரி மலர் கொண்டு பூஜை

செவ்வாய் கிரகத்துக்கு செவ்வாய் கிழமைகளில் செவ்வரளி, செந்தாமரை மற்றும் செம்பருதி மலர் கொண்டு ராகு கால பூஜை செய்வது செவ்வாய் தோஷம் விலகும்.

புதன் கிரகத்துக்கு புதன் கிழமை களில் துளசி கொண்டு பூஜிக்கலாம்.

வியாழக் கிழமைகளில் குரு கிரகத்துக்கு மஞ்சள் நிற மலர்கள் மற்றும் சாமந்தி மலர் கொண்டு பூஜை செய்யவேண்டும்.

சுக்கிரனுக்கு வெள்ளிக் கிழமைகளில் வெள்ளை அரளி கொண்டு பூஜை செய்யலாம்.

சனி பகவானுக்கு சனிக் கிழமைகளில் நீல நிற சங்கு மலர் கொண்டு அர்ச்சிக்க வேண்டும்.

மேற் கண்ட ஒவ்வொரு தினத்திலும் குறிப்பிட்ட மலர்களைக் கொண்டு பூஜை செய்தால் இல்லத்தில் அமைதி மற்றும் சுபிட்சம் பெருகும்.

## கடன் தீர்க்கும் எளிய வழிமுறைகள்

ஒன்னேகால் அடி வெள்ளை துணியை எடுத்து அதில் நான்கு பக்கங்களிலும் சிகப்பு ரோஜாவை வைத்து கட்டி, பின்பு நடுவிலும் ஒரு ரோஜாவை வைத்து அதை 3 நதிகள் சங்கமிக்கும் இடத்தில் விட, கடன்கள் அடியோடு அழியும்.

தொடர்ந்து வரும் பண பிரச்சனைகளுக்கு சிறிய மூடியுடன் கூடிய செம்பு கிண்ணம் அல்லது பாத்திரத்தில் பச்சை பாசிப்பருப்பை நிரப்பி ஓடும் நீரோடையில் விடவும். சுத்தமான நீரோடையாக இருக்க வேண்டும்.



## திசைக்கு ஏற்ற பலன் தரும் குத்து விளக்கு

1. குத்து விளக்கின் தீபம் கிழக்கு முகமாக ஏற்றினால் துன்பங்கள் நீங்கி வசீகரம் உண்டாகும்.
2. மேற்கு முகமாக ஏற்றினால் கிரக தோஷம் பங்காளி பகை உண்டாகும்.
3. வடக்கு முகமாக ஏற்றினால் கல்வி மற்றும் சுபகாரியங்களில் ஏற்படும் தடைகள் விலகும்.திரண்ட செல்வம் உண்டாகும்.
4. தெற்கு முகமாக ஏற்றினால் நல்லதல்ல. அபசகுணங்கள் தென்படும். வீட்டுக்கு எம தூதர்களை விருந்தாளிகலாக்கும் அதனால் மரணங்கள் சம்பவிக்கும்.





# கண்ணனை காதலித்த மீரா



மீரா என்ற மீராபாய் (கி.பி 1498 கி.பி 1547) வட இந்திய வைணவ பக்தி உலகில் மறுக்கமுடியாத கிருஷ்ண பக்தை ஆவார். தென்னிந்திய ஆண்டாள் போல இவர் கிருஷ்ணர் மீது தீவிர பற்று கொண்டவர். 1300 பாடல்களுக்கு மேல் பாடிய மீரா ராஜபுத்திர இளவரசியாக தற்போதைய ராஜஸ்தானில் பிறந்தவர். பக்தி நெறியில் தீவிர பற்று கொண்ட இவர், கிருஷ்ணரின் மீது இயற்றிய பக்திப் பாடல்கள் மிகவும் புகழ்பெற்றவை.

### வாழ்க்கை

மீராபாய் ஜோத்பூர் அரசை நிர்மாணித்த ராவ்ஜோதாவின் மகனான ராவ் தூதாவின் இளையமகனான ரத்தன் சிங், வீரகுமாரி தம்பதிகளின் மகளாக ஒரு வைணவக்குடும்பத்தில் பிறந்தார். தன்னுடைய ஏழாம் வயதில் தன் அன்னையை இழந்த மீரா பின்னர் தன் பாட்டனாரான ராவ்தூதால் வளர்க்கப்பட்டு கல்வியும் பயின்றார். அரச குடும்பத்தைச் சார்ந்த இவர் வைணவ சமய மரபில் வளர்க்கப்பட்டார். குழந்தைப் பருவம் முதலே “கிரிதர கோபாலன்” எனும் கிருஷ்ணர் சிலை மீது தொடங்கிய ஈடுபாடு நாளடைவில் ஆண்டாள் போல கண்ணனை தன் மணவாளானாக வரித்துக் கொண்டது. குடும்பத்தின் வற்புறுத்தலின் பேரில்1516ல் பதினெட்டு வயதில் சுய விருப்பமின்றி போஜராஜன் எனும் சித்தோர்கர் இளவரசனுக்கு மணமுடித்துக் கொடுக்கப்பட்டார்.

போஜராஜன் குடும்பத்தின் குலதெய்வமான துளஜ பவானி எனும் துர்க்கை வழிப்பாட்டை மேற்கொள்ளாத மீராபாயின் கிருஷ்ண வழிபாட்டிற்கு எதிர்ப்பு கிளம்பியது. 1521 இல் தில்லி சுல்தானின் இசுலாமிய சாம்ராச்சியத்திற்கு எதிராக ராஜபுத்திரர்கள் ஒன்றுசேர்ந்து போர்புரிந்த போது இறந்த பலர் அரசர்களில் மீராவின் கணவர் போஜராஜனும் ஒருவர். மாமனார் அரவணைப்பில் அரண்மனையில் வாழ்ந்த மீரா, பின்னர் அவரையும் இழக்க கண்ணன் ஒருவனே துணையென சித்தோர்கர் அரண்மனையிலேயே வாழ்ந்து வரலானார்.

### கொலைமுயற்சி

ஆரம்பம் முதலே இவரின் கிருஷ்ண பக்திக்கு இருந்துவந்த எதிர்ப்பு, அடுத்து பதவிக்கு வந்த போஜராஜன் தம்பியான விக்ரமாதித்யாவால் உச்சத்தை அடைந்தது. அந்தரங்கமான இவரின் பக்தி நாளடைவில் அரண்மனைவிட்டு சாதுக்களின் கூட்டத்தோடும் சாமான்யர்களோடும் தன்னைமறந்து ஆடுவதும் பாடுவதுமான போக்கினால், அரசகுடும்ப மதிப்பிற்கு களங்கம் வருமென எண்ணி விக்ரமாதித்யா தன் தங்கையான உதாபாயோடு சேர்ந்து பலமுறை மீராவை கொலைசெய்ய முயற்சித்தான். அவற்றில் சில;

கண்ணனுக்கு நிவேதனம் (படைத்த) செய்த பிரசாதத்தில் நஞ்சைக் கலந்து, அதனை மீராவை அருந்துமாறு செய்தான். பின்னர் கண்ணன் அருளால் நஞ்சு நீக்கப் பட்டது.

மீராவின் படுக்கையில் இரும்பு முட்களை நிறைக்க, கண்ணன் அருளால் அவைகள் ரோசாமலர் இதழ்கள் ஆனது.

கொடிய பாம்பு அடைத்த பூக்கூடையை கொடுத்து கண்ணனுக்கு அர்ப்பணிக்குமாறு கொடுக்க, அலங்கரிப்பதற்கு மீரா அப்பூக் கூடையை திறந்த போது அது அழகிய பூமாலை ஆனது

### தேடல்

பின்னாட்களில் குரு ரவிதாசருக்கு சீடரான இவர், அரசக் குடும்பத்தின் தொல்லைகள்தாளாதுபலஇடங்களுக்கு சென்றும் நிறைவுப்பெறாது இறுதியில் கண்ணன் வாழ்ந்த பிருந்தாவனத்தை வந்தடைந்தார். அங்கு தன்னை கோபியர்களில் ஒருவராக உணர்ந்த அவர் வட இந்தியா முழுதும் யாத்திரையாக சென்று தம் கருத்துகளை பாடல்கள் மூலம் வட்டார மக்கள் மொழியான விரஜ மொழியில் பரப்பினார். பிறப்பு, இறப்பு என்னும் சுழற்சியினின்று விடுபட்டு பேரின்ப நிலையை அடைய கிருஷ்ணபக்தி அவசியம் என்றார். இவரது பக்திப் பாடல்கள் இனிமையானவை. பக்தி நெறியைச் சுவையான பாடல்கள் வாயிலாகப் பரப்பினர். எளிய பக்தியும், நம்பிக்கையுமே வீடு பேற்றினை அடைய நல்வழி என்றார். பிறப்பால் எவரும் உயர்ந்தவர் இல்லை. உயர்விற்கு காரணம் செயல் என்னும் கருத்தைப் பரப்பினார்.

### முக்தி

தன் இறுதிக் காலத்தில் குஜராத்தின் துவாரகைக்கு வந்தடைந்தார். அங்கு கோயில்கொண்ட துவாரகதீசன் (கண்ணன்) முன்பு பாடிக்கொண்டே அனைவரும் கண்ணெதிரிலேயே இறைவனோடு கலந்து மாயமானார்.



# சிங்கம், கொக்கு, கழுதை, கோழி, காக்கை, நாயிடம் மனிதன் கற்கவேண்டியவை

# முன்னோர் கூறிய உண்மை













சிங்கத்திடம் இருந்து ஒன்றையும்,
கொக்கிடம் இருந்து இரண்டையும்,
கழுதையிடம் இருந்து மூன்றையும்,
கோழியிடம் இருந்து நான்கையும்,
காக்கையிடம் இருந்து ஐந்தையும்,
நாயிடம் இருந்து ஆறு
விஷயங்களையும்
நாம் கற்று கொள்ள வேண்டும்.
என முன்னோர்கள்
கூறியுள்ளனர்.

சிங்கம் எந்த ஒரு விஷயத்தையும் உடனடியாக செய்யாது, நன்கு ஆலோசனை செய்த பின்பு முழு மனதுடன் உறுதியாக செயல்படும்.

கொக்கு ஒடு மீன் ஓட உறு மீன் வரும் வரை காத்து நிற்கும், அது போல் அறிவாளி ஒரு காரியத்தை செய்வதற்கு முன் காலம், இடம், தன் ஆற்றல் கூடும் வரை காத்திருந்து செய்வான்.

களைப்புற்றாலும் கழுதை தன் வேலையை தொடர்ந்து செய்யும், வெயில், மழை என்று பாராமல் உழைக்கும், தன் முதலாளிக்கு கட்டு பட்டிருக்கும். ஆகிய மூன்றும் கழுதையிடம் இருந்து கற்று கொள்ள வேண்டிய விஷயங்கள் ஆகும்.

விடியற்காலை எழுதல், தைரியமாக சண்டையிடுதல், அவர் அவர்க்கு தேவையானவற்றை பிரித்து கொடுத்தல், தனக்கு தேவையானவற்றை தானே உழைத்துத் தேடி சம்பாதித்தல் ஆகிய நான்கும் சேவலிடம் இருந்து கற்று கொள்ள வேண்டிய விஷயங்கள் ஆகும்.

இரவில் மனைவியுடன் சேர்ந்து இருத்தல், தேவையான பொருள்களை சேமித்து வைத்தல், யாரையும் எளிதில் நம்பாமல் இருத்தல், தைரியம், எச்சரிக்கை உணர்வு ஆகிய ஐந்தும் காக்கையிடம் இருந்து கற்று கொள்ள வேண்டிய விஷயங்கள் ஆகும்.

கிடைப்பதை உண்டு திருப்தி அடைதல், உணவு கிடைக்காத நேரத் தில் பட்டினி இருத்தல், நன்றாக பசி இருந்தும் கட்டளை வரும் வரை காத்து இருத்தல், நல்ல தூக்கத்தில் இருந்தாலும் உடனடியாக எழுந்து செயல்படுதல், முதலாளிக்கு விசுவாசமாக இருத்தல், உருவத்தில் பெரிய மிருகமாக இருந்தாலும் தைரியமாக எதிர்த்தல் ஆகிய ஆறு குணங்களை நாயிடம் இருந்து கற்று கொள்ள வேண்டும்.



# மாத பௌர்ணமியும் சிவபூஜையும்



மாத பவுர்ணமிகளில் கீழே குறிப்பிடப்படுவனவற்றால் சிவ பூஜை செய்தால் அனைத்து விருப்பங்களையும் அடைந்து, சிவசாயுஜ்யம் அடையலாம்.

சித்திரை ........................மரிக்கொழுந்து,
வைகாசி ..................................சந்தனம்,
ஆனி ................................ முக்கனிகள்,
ஆடி ............................................பால்,
ஆவணி.....................நாட்டுச் சர்க்கரை,
புரட்டாசி ..................................அப்பம்,
ஐப்பசி ......................................அன்னம்,
கார்த்திகை .......................... தீபவரிசை,
மார்கழி ........................................ நெய்,
தை ............................... கருப்பஞ்சாறு,
மாசி........... நெய்யில் நனைத்த கம்பளம்,
பங்குனி ..........................கெட்டித் தயிர்.

# சிவபெருமானின் சிவத்தாண்டவங்கள்

சிவபெருமான் படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய செயல்களைச் செய்யும் போது காளிகா, சந்தியா, சங்கார (சம்ஹார) தாண்டவம் ஆடியதாகக் கூறப்படுகிறது.

1. காளிகா தாண்டவம் படைத்தல் செய்யும் போது. தலம் நெல்லையப்பர் கோவில், திருநெல்வேலி. ஆடிய இடம் தாமிர சபை.
2. சந்தியா தாண்டவம் காத்தல் செய்யும் போது. தலம் மீனாட்சி அம்மன் கோவில்,மதுரை. ஆடிய இடம் வெள்ளி அம்பலம்.
3. சங்கார தாண்டவம் அழித்தல் செய்யும் போது. தலம் மதுரை
4. திரிபுர தாண்டவம் மறைத்தல் செய்யும் போது. தலம் குற்றாலநாதர் கோவில், குற்றாலம். ஆடிய இடம் சித்திரசபை.
5. ஊர்த்தவ தாண்டவம் அருளல் செய்யும் போது. தலம் ஊர்த்தவதாண்டவர் கோவில், திருவாலங்காடு, ஆடிய இடம் இரத்தின சபை.
6. ஆனந்த தாண்டவம் இவ்வைந்து செயல்களையும் செய்யும் இடம். தலம் நடராஜர் கோவில், சிதம்பரம். ஆடிய இடம் கனக சபை.
7. கௌரி தாண்டவம் பார்வதிக்காக ஆடிய போது. தலம் திருப்பத்தூர்.
8. அஜபா நடனம் சிவபெருமான் மேல்மூச்சில், கீழ்மூச்சில் (தவளை போல்) அசைந்தாடிய நடனம். ஆடிய தலம் திருவாரூர்.
9. சிவபெருமான் பித்தனைப் போல் தலை சுற்றி ஆடிய நடனம் உன்மத்த நடனம் ஆகும். ஆடிய தலம் திருநள்ளாறு.
10. தரங்க நடனம் என்பது கடல் அலைபோல் அசைந்து ஆடுவது. இதை சிவபெருமான் நாகப்பட்டினத்தில் ஆடினார்.
11. குக்குட நடனம் என்பது கோழி போல் ஆடுவது. ஆடிய தலம் திருக்காறாயில்.
12. பிருங்க நடனம் என்பது வண்டு மலரைக் குடைவது போல் ஆடுவது. இதை சிவபெருமான் ஆடியது இடம் திருக்கோளிலி ஆகும்.
13. கமல நடனம் என்பது தாமரை காற்றில் அசைவது போல் ஆடுவது. ஆடிய தலம் திருவாய்மூர்.
14. ஹம்சபாத நடனம் என்பது அன்னம் போல் அடியெடுத்து ஆடுவது. ஆடிய தலம் திருமறைக்காடு (வேதாரண்யம்)







எந்த விதமான கட்டணமும் இல்லை
தரத்தில் முதலிடம்
முற்றிலும் இலவசம்



உலக அளவில் தரமான ஆன்மிக இ-புத்தகமாக
வெளிவரும் ஆன்மிக மெயில் புத்தகம்
இலவசமாக படிக்க
aanmeegamalar.com
aanmeegamalr app-லும் படிக்கலாம்
GET IT ON Google Play

உங்கள் இ-மெயில் முகவரியை எங்களுக்கு அனுப்பிவைத்தும் பெற்றுக்கொள்ளலாம் கீழ்கண்ட வாட்சப் எண் மற்றும் இமெயில் முகவரிக்கு உங்கள் இமெயில் முகவரியை அனுப்பிவைக்கவும்
வாட்சப்பில் பெற 08825844033
இமெயிலில் பெற aanmeegamalar@gmail.com

# ராகு கால பூஜை

எந்த ஒரு நல்ல காரியம் செய்யும் போதும் ராகுகாலம், எமகண்டம் போன்றவற்றை பார்த்து பார்த்து செய்வது வழக்கம்.

இவ்வாறு நாம் பார்க்கும் கால நேரங்கள் நமது ராசி, அதிர்ஷ்டம் போன்றவற்றுடன் சேர்ந்து பல்வேறு வெற்றி கிடைக்க வழிவகை செய்யும் என்று முன்னோர்கள் கூறியுள்ளனர். அந்தவகையில் ராகுகாலத்தில் பொதுவாக எந்த காரியத்தையும் செய்வதில்லை. ஆனால் அந்த நேரத்தில் இறை நம்பிக்கையுடன் ராகு கால பூஜை செய்யும்போது கிரக மற்றும் கெடு தல் சக்திகளிலிருந்து விடுபடலாம் என்று முன்னோர்கள் வகுத்த பூஜைதான் ராகுகால பூஜையாகும்.

ராகு கால நேரம் என்பது வாரத்தில் அனைத்து நாட்களிலும் உண்டு. ராகு கால பூஜை என்பது என்ன, அதனால் ஏற்படும் நன்மைகள் என்ன என்று அனைவரும் தெரிந்து கொள்ளவேண்டும்.

செவ்வாய் கிழமை மற்றும் வியாழக் கிழமை களில் செய்யப்படும் ராகு கால பூஜை மிகவும் சிறப்பானது.

இதைத்தவிர மற்ற நாட்களிலும் ராகு கால பூஜை செய்யலாம். ஒவ்வொரு கிழமைகளில் ஒவ்வொரு விதமான மலர்களைக் கொண்டு பூஜை செய்வது வாழ்வில் நிம்மதியும் வளங்களும் பெருகும்.

சூரிய கிரகத்துக்கு ஞாயிற்று கிழமைகளில் பாரிஜாதம் மற்றும் வில்வ மலர்களைக் கொண்டு பூஜை

சந்திர கிரகத்துக்கு திங்கள் கிழமை களில் வெள்ளை அலரி மலர் கொண்டு பூஜை

செவ்வாய் கிரகத்துக்கு செவ்வாய் கிழமைகளில் செவ்வரளி, செந்தாமரை மற்றும் செம்பருதி மலர் கொண்டு ராகு கால பூஜை செய்வது செவ்வாய் தோஷம் விலகும்.

புதன் கிரகத்துக்கு புதன் கிழமை களில் துளசி கொண்டு பூஜிக்கலாம்.

வியாழக் கிழமைகளில் குரு கிரகத்துக்கு மஞ்சள் நிற மலர்கள் மற்றும் சாமந்தி மலர் கொண்டு பூஜை செய்யவேண்டும்.

சுக்கிரனுக்கு வெள்ளிக் கிழமைகளில் வெள்ளை அரளி கொண்டு பூஜை செய்யலாம்.

சனி பகவானுக்கு சனிக் கிழமைகளில் நீல நிற சங்கு மலர் கொண்டு அர்ச்சிக்க வேண்டும்.

மேற் கண்ட ஒவ்வொரு தினத்திலும் குறிப்பிட்ட மலர்களைக் கொண்டு பூஜை செய்தால் இல்லத்தில் அமைதி மற்றும் சுபிட்சம் பெருகும்.





ஆன்மிகமலர் மெயில் புக்

# 5-இன் அற்புதம்

**1. பஞ்ச கன்னியர்**
அகலிகை, சீதை, தாரை, திரௌபதி, மண்டோதரி.

**2. பஞ்சவாசம்**
இலவங்கம், ஏலம், கற்பூரம், சாதிக்காய், தக்கோலம்.

**3. பஞ்சாமிர்தம்**
சர்க்கரை, தயிர், தேன், நெய், பால்.

**4. பஞ்சபாண்டவர்**
தருமன், பீமன், அர்ஜுனன், நகுலன், சகாதேவன்.

**5. பஞ்சசீலம்**
கொல்லாமை, பொய்யாமை, கல்லாமை, காமமின்மை, இரவாமை.

**6. பஞ்சதிராவிடர்**
தெலுங்கர், திராவிடர், கன்னடர், மகாராஷ்டிரர், கூர்ஜரர்.

**7. பஞ்சபட்சி**
வல்லூறு, ஆந்தை, காகம், கோழி, மயில்.

**8. பஞ்சபுராணம்**
தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, பெரியபுராணம்.

**9. பஞ்சரத்தினம்**
வைரம், முத்து, மாணிக்கம், நீலம், மரகதம்.

**10. பஞ்சவர்ணம்**
வெண்மை, கருமை, செம்மை, பொன்மை, பசுமை.

**11. பஞ்சாங்கம்**
கரணம், திதி, நட்சத்திரம், யோகம், வாரம்.

**12. பஞ்சமூலம்**
செவ்வியம், சித்திரமூலம், கண்டுபாரங்கி, பேரரத்தை, சுக்கு.

**13. பஞ்சபாதகம்**
பொய், களவு, கள்ளுண்ணல், குருநிந்தை, கொலை.

**14. பஞ்சபாணம்**
முல்லை, அசோகு, வனசம், சூதம், நீலம்.

**15. பஞ்சாயுதம்**
சங்கு, சக்கரம், கதை, கத்தி, வில்.

**16. பஞ்சபரமோட்டி**
அருகர்,சித்தர்,உபாத்தியாயர்,ஆசிரியர்,சாதுக்கள்.

**17. பஞ்சசிகை**
தலை, உச்சி, கண், புருவம், முழங்கை.

**18. பஞ்சதேவர்**
பிரம்மா, விஷ்ணு, உருத்திரன், மகேசுரன், சதாசிவன்.

**19. பஞ்சஸ்தலம்**
காசி, சோமநாத், பூரி, ராமேஸ்வரம், வைத்தியநாத்.

**20. பஞ்ச பூதங்கள்**
நீர், நிலம், காற்று, நெருப்பு, ஆகாயம்.

ஆன்மிகமலர் மெயில் புக்

# இரண்டாவது நவபாஷான முருகன்



கொடைக்கானலிருந்து 18 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது பூம்பாறை கிராமம். இந்த முருகன் நினைத்தால் தான் நாம் இங்கு வர முடியும்" இந்த தேதியில், இந்த நேரத்தில் வரவேண்டும் என்பது அவன் விருப்பம் . மிகவும் சக்திவாய்ந்த நவபாசான முருகன்.

இந்தியாவில் உள்ள எல்லா கோவில்களிலும் ஐம்பொன் வெங்கலம் கற்களால் ஆன சிலைகள்தான் உள்ளன. ஆனால் இந்தியாவில் உள்ள இரண்டு கோவில்களில் மட்டுமே நவபாஷானத்தால் உருவாக்கப்பட்ட அபூர்வமான சிலைகள் உள்ளன.

1. பழனி மலை மீதுள்ள தண்டாயுதபாணி முருகன் சிலை,
2. பூம்பாறை மலையில் உள்ள குழந்தை வேலப்பர் முருகன் சிலை.

உலகிலேய நவபாஷான சிலையை உருவாக்கி பிரதிஷ்டை செய்தவர் போகர் ஆவார். பழனி முருகன் சிலையை மட்டுமின்றி இந்தப் பூம்பாறை முருகன் சிலையையும் செய்தவர் போகர்.

பழனி மலைக்கும், பூம்பாறை மலைக்கும் நடுவில் உள்ள யானை முட்டி குகையில் தான் நவபாஷான முருகன் சிலையை உருவாக்கினார். அந்த சிலையைத் தான் பழனி மலை மீது பிரதிஷ்டை செய்தார். தண்டம் கொண்டு அச்சிலையை உருவாக்கியதால் அதற்கு தண்டாயுதபாணி என்று பெயர் சூட்டினார்.

அக்கோவிலை இறைவனிடம் வேண்டி சிவ பூதங்களால் கோவில் மற்றும் மண்டபகங்களை கட்ட செய்தார் என்பது வரலாறு.

பின்னர் மறுபடியும் சீனநாட்டிற்கு சென்று பஞ்சபூத சக்திகளை மீண்டும் பெற்று யானை முட்டி குகைக்கு வந்து ஞான நிலையை அடையும் பிரம்மத்தை உணர்ந்து கொள்ளவும் ஆதிபராசக்தியின் துணைகொண்டு குருமூப்பு என்ற அருமருந்தை நிலைநிறுத்தவும் பஞ்ச பூதங்களை நிலைப்படுத்தி அதன் மூலம் குருமூப்பு சிலையை உருவாக்கினார். அந்த சிலைதான் பூம்பாறை மலையுச்சியிலுள்ள குழந்தை வேலப்பர் சிலையாகும்.

ஒரு சமயம், அருணகிரிநாதர் பூம்பாறை மலையில் வீற்றிருந்த குழந்தையப்பரை தரிசிக்க வந்தார். அப்போது இரவு நேரமானதால் கோவில் மண்டபத்தில் தங்கி தூங்கிவிட்டார். அப்போது ராட்சசி ஒருவள் அருணகிரிநாதரை கொல்ல வந்தபோது முருகன் குழந்தை வடிவம் கொண்டு காவியுடை அணிந்திருந்த அருணகிரி நாதர் மீது ஏறி விளையாடிக்கொண்டிருந்ததைக்கண்டு குழந்தையும் தாயும்தான் தூங்கிக் கொண்டிருக் கிறார்கள் என்று எண்ணி அருணகிரிநாதரைக் கொல்லாமல் சென்று விட்டதாம். இதனை தனது ஞான திருஷ்டியால் நடந்த சம்பவத்தை கண்டு குழந்தை வேடம் வந்து தன் உயிரை காப்பாற்றியதால் குழந்தை வேலர் என்று அழைக்கப்பட்டு குழந்தை வேலப்பராக இன்றும் அருள் பாலித்து வருகிறார். அவரின் பக்கத்திலேலே அருணகிரிநாதருக்கும் சிலையுடன் கோவில் உள்ளது.










# முருகனின் சிஷ்யைகளான வள்ளி-தெய்வானை

திருமாலின் கண்களிலிருந்து தோன்றிய அமிர்தவல்லி, சுந்தரவல்லி ஆகிய இருவரும் சடாட்சர மந்திர உபதேசம் பெற முருகனிடம் வந்தனர். குருகாணிக்கையாக தங்கள் இருவரையும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று முருகனிடம் அவர்கள் வேண்டிக்கொண்டனர்.

அதற்கு குரு–சிஷ்யை விதிகளுக்கு புறம்பாக உங்களை திருமணம் செய்து கொள்ள முடியாது என்றும், மறுபிறவியில் வள்ளி, தெய்வானை என்ற பெயரில் என்னை நீங்கள் வந்தடைவீர்கள் என்று முருகப்பெருமான் கூறினார்.

அதன்பிறகு அன்ன ஆகாரமின்றி ஒருநிலை மனதோடு முருகனிடம் சடாட்சர மந்திரத்தை உபதேசம் பெற்றதால் அமிர்தவல்லி தேவகுலத்தில் தேவேந்திரன் மகளாக தெய்வானை என்ற பெயரில் வளர்ந்துவரமுருகன் தெய்வானையை திருப்பரங்குன்றத்தில் முதலாவதாக மணந்தார்.

அன்றாட மனித வாழ்க்கைப்படி எல்லா பணிகளையும் செய்து உணவு உட்கொண்டு முருகனிடம் சடாட்சர மந்திர உபதேசம் பெற்றதால் சுந்தரவல்லி மானிட இனத்தில் வேடுவர்குல பெண்ணாக வள்ளி என்ற பெயரோடு வளர்ந்து வர முருகன் காந்தரூப முறைப்படி வள்ளியை மணம் முடித்தார்.

# முப்பது முக்கோடி சிவலிங்கங்கள்



புராணங்களில் முப்பத்து முக்கோடி தேவர்கள், நாட்கள் பற்றியெல்லாம் சொல்லப்பட்டுள்ளது. முப்பத்து முக்கோடி என்றால் 33 கோடி அல்ல. 33 என்ற எண்ணுக்குப் பிறகு 26 பூஜ்யங்கள் சேர்ப்பது என்ற கருத்து உண்டு. அந்த அளவுக்கு வாழ்ந்தவன் ராவணன். சிவபக்தனான இவன், சிவதரிசனத்தை நேரில் பெற தன் ஒன்பது தலைகளை வெட்டி காணிக்கையாக்கினான். அப்படியும், சிவன் வராமல் போகவே பத்தாவது தலையையும் வெட்ட முயன்ற போது, சிவபெருமான் காட்சி தந்தார்.

அவரிடம் முப்பத்து முக்கோடி நாட்கள் வாழும் வரத்தைப் பெற்றான். அவன் வாழ்ந்த ஒவ்வொரு நாளும் ஒரு சிவ லிங்கத்தை பிரதிஷ்டை செய்து வழிபட்டான். அவ்வாறு ராவணன் பிரதிஷ்டை செய்ததில் ஒருசில லிங்கங்கங்களைத் தவிர மற்றவை இயற்கை சீற்றங்களாலும் அன்னியர்களாலும் சிதைக்கப்பட்டுவிட்டதாக கூறப்படுகிறது.

ஆனாலும் இன்றும் இராவணன் உருவாக்கிய சிவலிங்க வழிபாடு இலங்கையில் நடைபெற்றுவருகிறது.

# நமச்சிவாய வாழ்க...

## தோன்றிய வரலாறு

சைவத்திருமுறைகள் பன்னிரண்டு. அதில் திருவாசகம் எட்டாம் திருமுறையாகும். சிவனடியார்களில் நாயன்மார்கள் 63பேர். சமயக்குரவர் நால்வர்அப்பர், சுந்தரர், மாணிக்க வாசகர், திருநாவுக்கரசர் ஆவர். திருவாசகம் செந்தமிழுக்கு அன்பு மறையாகவும், உயிர்ப் பிணிக்கு மருந்தாகவும் உள்ளது.

சரியை, கிரியை, யோகம், ஞானம் போன்றவை இறை நிலையை அடைய முக்கிய நிலைகளாக நமது முன்னோர் குறிப்பிட்டுள்ளனர். அந்த வகையில் அப்பர் சரியைக்கும், சம்பந்தர் கிரியைக்கும், சுந்தரர் யோகத்திற்கும், மாணிக்கவாசகர் ஞானத்திற்கும் உரியவராக விளங்குகின்றனர்.

மதுரையைச் சேர்ந்தவர் மாணிக்கவாசகர், இவரின் இயற் பெயர் வாதவூரர், ஏறத்தாழ 8ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர் என கணிக் கப்பட்டுள்ளது.

ஆதி சங்கரரைப் போல 32 ஆண்டுகளே வாழ்ந்தார் மாணிக்கவாசகர். வைகைகரையில் திருவாதவூரில் அமாத்தியர் எனும் அந்தணர் மரபில் சம்புபாதசிருதர், சிவஞானவதிக்குப் புதல் வராகத் தோன்றியவர். மன்னன் அரிமர்த்தன பாண்டியனின் முதல் அமைச்சர். தென்னவன் பிரமராயர் என்ற பட்டம் பெற்றவர்.

சோழநாட்டுக் கடற்கரையில் குதிரைகள் வந் துள்ள செய்தி கேட்ட மன்னன், வாதவூரரிடம் பணம் கொடுத்து வாங்கி வரச்சொன்னான். வாத வூரர் வழியில் திருப்பெருந்துறையில் தங்கினார். சோலை ஒன்றில் சிவாகமங்கள், வேதங்கள் ஒலிப்பதைக் கேட்ட வாதவூரர் அங்கே சென்று, சிவனே குருநாதர் தோற்றத்தில் மரத்தடியில் வீற்றிருக்க, கீழே அடியார்கள் கூடியிருக்கும் காட்சியைக் கண்டு, பசுவைத் தேடிய கன்று போல் விரைந்து சென்று காலடியில் வீழ்ந்து வணங்கி, அருள் தர வேண்டினார்.

“அறை கூவி ஆட்கொண்டருளி
மறையோர் கோலம் காட்டி அருளலும்
உளையா அன்பென்பு உருக ஓலமிட்டு”

என்பார் மாணிக்கவாசகர்.

விண்ணவர் தேவர் மற்றவரிருக்க, குதிரை வாங்க வந்த வாதவூரரைத் திருப்பெருந்துறையில் சிவபெருமான் குருவாய்த் தோன்றி குருந்த மரத்தினடியில் அமர்ந்து தடுத்தாட்கொண்டு, தன் நீள் கழல்களைக் காட்டி ஸ்பர்ச, நயன, மந்திர தீட்சைகளை அளித்து மறைந்தார். வாதவூரரை இறைவன் ‘மாணிக்கவாசக’ என அன்புடன் அழைத்தார்.

ஆண்டவனால் ஆட்கொள்ளப்பட்ட, வாதவூரர், பாடிய முதல் அடி

“நமச்சிவாய வாழ்க நாதன் தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில்
நீங்காதான் தாள் வாழ்க”

இறைவனால் ஆட்கொள்ளப்பட்ட மாணிக்க வாசகர் பாடிய முதல் அடி என்பதால் சிவ கடாட் சத்தைப் பெற மேற்கண்ட பதிகத்தை பாடுவதன் மூலம் எளிதாக அடையலாம்.







# பித்ருதோஷ பரிகாரம்

ஜோதிடர்கள் சில நேரங்களில் நமது சாதகத்தில் பித்ரு தோஷம் இருக்கிறது, அதற்கு பரிகாரம் செய்ய வேண்டும் என்று சொல்வார்கள். என்ன காரணம் தெரியுமா?

சித்திரை, ஆவணி. ஐப்பசி மாதத்தில் பிறந்தோருக்கும், மாத பிறப்புக்கு முன்பின் 15 நாழிகையில் பிறந்தோருக்கும் பிதுர்தோஷம் உண்டாகிறது.

சாதகத்தில் சூரியனுடன் ராகு அல்லது கேது அல்லது சனி அல்லது மாந்தி இருப்பது பிதுர் தோஷம் என்று சொல்வார்கள்.

இவர்களுடன் குரு அல்லது புதன் சம்பந்தம் எனில் குலதெய்வ கோபமும் உண்டு என்கிறது ஜோதிட சாஸ்திரம்.

வீட்டில் பராமரிப்பு இல்லாமல் பெரியோர் கள் இறந்து விட்டார்கள் என்றாலோ துர் மரணங்களால்” விஷம், தற்கொலை போன்ற காரணங்களால் இறந்து பட்டிருந்ததாலோ

அந்த காரணம் வருங்கால சந்ததியினருக்கு பிதுர் தோஷமாக உருவெடுத்து வந்து அவர்தம் நல்வாழ்வுக்கு தடையாக வந்தடையும் “ என்பது ஆன்றோர் கூற்று.

எனவே அதற்கு தோஷப் பரிகாரமாக காசியில் பித்ரு சிரார்த்தம், அல்லது ஆயிரம் அந்தணர்களுக்கு அன்னதானம் அல்லது கன்றுடன் கூட பசுவை தானம் செய்ய வேண்டும்

இவ்வாறு செய்ய இயலாது எனில் ஓர் எளிய பரிகாரம், தினமும் காலையில் குளித்து சூரியனை நமஸ்காரம் செய்து பின்னர் கீழ் உள்ள சுலோகத்தை பொருளுணர்ந்து கூறிவிட்டு தூய்மையான இடத்தில் நீர் விட்டு காகத்திற்கு அன்னமிட வேண்டும். தினமும் இவ்வாறு செய்தால் பித்ருக்கள் மனமகிழ்ச்சியுடன் ஆசி வழங்குவார்கள் என்பதால் தோஷம் நீங்கப் பெற்று நல்வாழ்வு பெறுவது கண்கூடாக காணும் உண்மை.

பித்ரு சுலோகம்.:

ஓம் நம: பித்ரே ஜன்ம தாத்ரே
ஸர்வ தேவே மயாய ச
ஸுகதாய ப்ரசன்னாய
ஸுப்ரீதாய மகாத்மனே”

“என் பிறப்பிற்குக் காரணமான முன்னோர் களே! தெய்வீக சக்தி பெற்றவர்களே! உங்கள் ஆசியால் எங்களுக்கு நல்வாழ்வும் மகிழ்ச்சியும் உண்டாகட்டும். நல்லவர்களால் போற்றப்படும் உங்களை வணங்குகிறோம்”

என்பது இந்த சுலோகத்தின் பொருள்.

மானிட அவதாரம் எடுத்து வந்த இராம பிரான் இராமேஸ்வரத்தில் தனது தந்தை தசரதருக்கு” பிதுர் சிரார்த்தம் “செய்து வழிபட்டார். அஃது மானிட கடமைகளில் ஒன்று என்பதை வலியுறுத்தியுள்ளார். எனவே ஜோதிட அன்பர்களே! நாமும் ஸ்ரீராமபிரான் வழிநின்று நமது ஜென்ம கடன் தீர்த்து நல்வாழ்வு பெற்று சுபிட்சமாக வாழ்வோமாக.

– நர்மதா மணிவண்ணன்
லட்சுமிபுரம்,
தேனி மாவட்டம்.



# அதிர்ஷ்டம் தரும் அபூர்வ சிலைகள்



பெரும்பாலானவர்களின் வீடுகளில் உள்ள பூஜை அறைகளும் பல தெய்வ சிலைகளால் அலங்கரிக்கப்பட்டிருக்கும்.

வீடுகளில் இத்தனை தெய்வ சிலைகளை தான் வைத்திருக்க வேண்டும் என்பதில்லை என்பதால், பலரும் பல வித்தியாசமான மற்றும் அழகிய தெய்வ சிலைகளை பூஜை அறையில் வைப்பார்கள்.

ஆனால் வீட்டு பூஜை அறையில் குறிப்பிட்ட 3 தெய்வ சிலைகளை வைத்திருப்பதன் மூலம், வீட்டில் உள்ள பணப்பிரச்சனை நீங்கி, குடும்பத்தில் அமைதியும் சந்தோஷமும் அதிகரிக்கும்.

## மஞ்சளால் ஆன விநாயகர்

சிலை மஞ்சள் அல்லது தங்க முலாம் பூசப்பட்ட விநாயகர் சிலையை வைத்திருந்தால், வீட்டில் உள்ள வாஸ்து தோஷங்கள் நீங்கும்.

வேண்டுமெனில் வீட்டில் உள்ள மஞ்சள் பொடியை நீர் சேர்த்து கலந்து, விநாயகர் சிலையை செய்தும் பூஜை அறையில் வைத்துக் கொள்ளலாம்.

## மரத்தால் ஆன விநாயகர் சிலை

ஆல மரம், மா மரம் அல்லது வேப்ப மர மரத்தாலான விநாயகர் சிலையை பூஜை அறையில் வைத்திருப்பது மிகவும் நல்லது.

இந்த வகையிலான தெய்வ சிலை, வாழ்வில் உள்ள பிரச்சனைகள் நீங்கி, சந்தோஷமும் மகிழ்ச்சியும் அதிகரிக்கும்

## சிவனின் சிலை

பலரும் சிவபெருமானின் சிலையை வைத்திருப்பது வீட்டில் அதிர்ஷ்டத்தை அதிகரிக்கும் என நினைத்து வைத்திருக் கின்றனர்.

ஆனால் ஒரு பூஜை அறையில் ஒரே ஒரு சிவனின் சிலை தான் இருக்க வேண்டும். ஒன்றிற்கு மேற்பட்ட சிவனின் சிலைகள் பூஜை அறையில் இருந்தால், அது வீட்டில் பிரச்சனைகளுக்கு தான் வழிவகுக்கும். எனவே ஒரே ஒரு சிவனின் சிலையை மட்டும் வைத்து வணங்குங்கள்.







# செவ்வாய் தோஷம்



ஜோதிடத்தில் அனைவரையும் கலக்கத்தில் ஆழ்த்தி விடுவது செவ்வாய் தோஷம். அதைப் பற்றி நாம் அறிவோமெனில் அச்சப்பட அவசியமில்லை.

சிவனை மதியாது யாகம் வளர்த்த தட்சனின் தலைக்கனத்தைத் தவிடு பொடியாக்க, சிவனால் சிருஷ்டிக்கப்பட்டவர் தான் வீரபத்திரர். அவர் தட்சனின் யாகத்தை நிர்மூலமாக்கி அழித்து தனது கடமையை நிறைவேற்றினார்.

அத்தகைய போர்க்குணம் கொண்ட வீரபத்திரரே மறுஜென்மம் கொண்டு சப்த ரிஷிகளில் ஒருவரான வசிஷ்ட மாமுனிவரின் பேரனாக அவதரித்தார். மிக இளம் வயதிலேயே ஆனைமுகக் கடவுளை நோக்கி அருந்தவம் புரிந்தார்.

இவரின் கண் முன்னே தோன்றிய விநாயகப் பெருமான், ‘என்இளவல் கந்தகடவுளை உன் சொந்த கடவுளாகக் கொண்டு, நவகிரக நாயகர் களில் ஒருவராக வலம் வருவாயாக ‘ என்று ஆசிவழங்கினார்.

அவரவர் செய்த கர்ம வினைகளுக்கேற்ப அதன தன் இராசிகளில் அமர்ந்து, அதற்குரிய பலன் தந்து நவக்கிரக பரிபாலனம் புரிந்து வருகிறார். அத்தகைய மாமுனியை வணங்கி அவர்தரும் தோஷம் பற்றிப் பார்ப்போம்.

செவ்வாய் லக்னத்திற்கோ, சந்திரனுக்கோ , சுக்கிர னுக்கோ 2,4,7,8,12,ல் அமர்ந்தால் தோஷம் செய்வார்.

செவ்வாய் ராகு அல்லது கேதுவுடன் இணைந்து இருப்பின் தோஷத்தை அதிகம் செய்வார்.

செவ்வாய், மேஷம், விருச்சிகம் மற்றும் கடகம், மகரம் வீடுகளில் அமர்ந்திருந்தால் தோஷமில்லை.

மேலும் செவ்வாய், மிதுனம், கன்னி, தனுசு, மீனம் இராசிகளில் அமர்ந்தால் தோஷம் இல்லை.

செவ்வாயுடன் சனியோ அல்லது குருவோ இணைந்தாலோ, பார்த்தாலோ தோஷம் இல்லை.

ஒரு ஜாதகருக்கு அவர் (ஆணோ அல்லது பெண்ணோ)செவ்வாய் தோஷம் இருக்கிறது எனில் அவருக்கு செவ்வாய் தோஷம் உள்ள சாதகரையே திருமணம் செய்விக்க வேண்டும். செவ்வாய் தோஷம் மில்லாத ஜாதகருக்கு மணம் செய்து வைத்தால், தம்ப தியர் கடுமையான துன்பம் துயரங்களுக்குள்ளாவர்.

கருச்சிதைவுகள் அல்லது புத்திர தோஷத்தை கூட ஏற்படுத்தி விடும். சில நேரங்களில் விபத்து யோகமும் உண்டு.

## செவ்வாய் தோஷப் பரிகாரம்:

செவ்வாய் தோஷம் உடைய அன்பர்கள் வாரம் இருமுறை முருகன் கோவிலுக்குச் சென்று பூஜைகள் செய்து வந்தால் செவ்வாய் மனமகிழ்ச்சியுடன் வரம் தருவார்.

செவ்வாய் உடன் இராகு இணையப் பிறந்வர்கள், செவ்வாய் கிழமை இராகு வேளைகளில் துர்க்கையின் பாதங்களில் விளக்கு ஏற்றி பூஜை செய்தால் தோஷம் நீங்கப் பெற்று நல்வாழ்வு கிடைக்கும்.

## ஸ்ரீசெவ்வாய் மந்திரம்:

‘சிறப்புறு மணியே செவ்வாய் தேவே
குறைவிலா தருள்வாய் குணமுடன் வாழ
மங்கள செவ்வாய் மலரடி போற்றி
அங்கா ரகனே அவதிகள் நீக்கு”

## ஸ்ரீ செவ்வாய் காயத்ரி மந்திரம்;

“ஓம் அங்காரகாய வித்மஹே
பூமி பாலாய தீமஹி
தந்நோ குஜ:பிரசோதயாத் “

வரம் தந்து வாழ வைக்கும் செவ்வாய் பகவான் தாள் பணிந்து
நலம் பல பெற்று வாழ்வோமாக !

– நர்மதா மணிவண்ணன்
லட்சுமிபுரம், தேனி மாவட்டம்.



ஆசிரியர், வெளியீட்டாளர்
C.N.ராஜா
செல்: 8825844033

•••

இணை ஆசிரியர்
செந்தில்நாதன்

•••

துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர்,
சஞ்சனா, ஸ்ரீபதி,
குருபிரியா செல்: 9894595909
புனிதவேல் செல்: 9841807572

•••

வடிவமைப்பு
பான்ராஜாகிராபிக்ஸ்
செல்: 08825844033

நிர்வாக அலுவலகம்
aanmeegamalar.com
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு,
கோடம்பாக்கம், சென்னை 600024.
08825844033

**ஆசிரியர் குழுவில் நீங்களும் இணையலாம்**

நமது ஆன்மிகமலர்.காம் இதழின் ஆசிரியர் குழுவில் இணைந்து செயல்பட உங்களுக்கு வாய்ப்பு தரப்படுகிறது. ஆன்மிகம் சம்பந்தப்பட்ட விஷயங்களை எழுத ஆர்வமுள்ள அன்பர்கள் எங்களை தொடர்பு கொள்ளுங்கள், விளம்பரம் பெற விரும்புபவர்களும் எங்களை தொடர்பு கொள்ளவும். உங்களை எங்களுடன் ஒருவராக இணைத்துக் கொள்கிறோம்.

தொடர்பு கொள்ளவும்
08825844033

# இயற்கையும் கடவுளும் வேறு வேறல்ல

1. கவிதை என்பது என்ன? அது ஒரு கவிஞனின் உள்ளத்துவரைபடம். அந்த கலை சில வரைகோணங்களைத் தருகிறது. அதைக் கொண்டு ஒரு உருவத்தை சமைத்து விடலாம். இந்த மாதிரி கவிதை ஒரு மனிதனையும் ஏற் படுத்தி விடுகிறது. அவன் தான் பிறந்த உலகத்தையும் இந்த வண்ணமே பார்த்து விடுகிறான்.

2. கடவுளானாலும் இயற்கையானாலும் இவைகளை கண்களால் பார்க்கும் படியாக கவிதை தன்னிடத்தில் உள்ள திறமையால் இவைகளுக்கு ஒரு வடிவ அமைப்பை கொடுத்து விடுகிறது. அதனால் அது மனித உள்ளத்தில் நின்று விடுகிறது. இந்த வண்ணம் கடவுளால் ஆசிர் வதிக்கப்பட்டவர்கள் கவிஞர்களாக இருந்து விடுகிறார்கள்.

3. பைரன் என்பவர் ஒரு ஆங்கிலகவிஞர். அவருடன் சேர்ந்து ஓடி கடவுளைத் தேடும் முயற்சியில் நானும் திடீரென்று ஒரு கவிஞனாகி விட்டேன்.



4. நீ ஒரு கவிஞனாக வேண்டுமா? எந்த மொழியில் ஆக வேண்டும் என்று நினைக்கிறாய்? எந்த மொழியானாலும் அம்மொழியை முதலில் ஊன்றி கவனி. அதன்பின் அதில் தெரிகின்ற உள்வடிவத்தை பார்த்து அதன் வழியே உனது நேர்த்தியான சிந்தனையின் தன்மையை கூடவே கடவுள், உலகம் இவைகளையும் கவனித்து விடலாம்.

5. சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் கருத்தே கவிதை. இது எப்படிப் பட்டது தெரியுமா? காலணி என்ற பூட்சுகளின் அடிப்புறத்தில் அதைக் காப்பாற்றுகின்ற உள் உடம்பைப் போன்று வெளிப்பக்கத்தில் ஒரு மிருதுவான தோல் வேறு ஒரு தோலிலே அதே உருவில் செய்து ஒட்டி வைக்கப்பட்டிருக்கும். இதுபோல சொல்ல வந்த நமது கவிதை யின் சுருக்கத்தை நம் உள்ளே இருக்கின்ற ஆன்மா என்ற சிறிய உடம்பு தாங்கி வைத்துக் கொண்டிருக்கிறது.

6. மிருதுவான உள் உடம்பு போன்ற காலணியின் வெளித் தோல் கள் இல்லாமல் காலணிகள் வெகு நாட் களுக்கு உழைப்பதில்லை. இந்த வண்ணம் ஒரு கவிதையும், ஒரு கவிஞனும் தனது உள்ளுடம்பு என்ற ஆன்மாவை வைத்து கொண்டே மேலான சிந்தனை உலகினில் நடக் கிறார்கள்.

7. தான் கண்களால் பார்த்தபடியும் பார்த்ததை கவனித்துமே உலகம் என்னும் மிகப்பெரிய வெட்டவெளி வானில் பலவிதமான கண்ணுக்கு ரம்மியமான காட்சிகளையும் புதிய வரைபடங்களையும் பலப்பல வாக ஒரு மனிதன் படைத்து எழுது கிறான். இதுபோல கவிஞர்கள் என்ன செய்கிறார்கள் தெரியுமா? தங்களுடைய உள்ள நினைவு என்ற பெரிய வானில் எதிர்காலக் காட்சிகளையும் படங்களையும் அதன் உள் அர்த்தங்களையும் உள் உணர் வுகளையும் நாம் உணரும்படி யாகக் கண்டு வரைந்து விடுகிறார்கள்.

8. ஒரு புத்தியுள்ள மனிதன் முதலில் சிந்திக்கிறான், பிறகு அதையே வாழ வைக்கிறான். பின்பு அதற்கு வடிவம் தருகிறான். அதன்பின்பு அதையே கவிதையாக வடிக்கிறான். இதுதான் அவனுடைய அச்சாணி போன்ற முதற்தரமான வேலை.

9. கவிதை என்பது இயற்கையையும், கடவுளையும் வெளிக் கொணர்ந்து காட்டி விடுகிறது. இயற்கையும் கடவு ளும் வேறு வேறல்ல. இரண்டும் ஒன்றே. அதையே கவிதை என்று சொல்லுகிறார்கள்.

10. கீட்ஸ் என்பவன் ஒரு ஆங்கிலேய வரகவி. அவனுக்கு தரப்பட்ட பரிசு சொர்க்கம் என்ற ஆகாயத் திலிருந்து அவன் தலையில் கொட் டப்படவில்லை. இப்படியே உனக்கும் என்பதை உணரு. ஆயினும் இவை எல்லாம் எங்கு இருக்கிறது தெரியுமா? உனது தலையினுள் இருக்கிறது. அதையே சொர்க்கம் என்று அழைக்கிறார்கள்.

ஞானச்சேரி ஞானிகள்
பூஜ்ய ஸ்ரீசத்குரு சதாசிவ பிரும்மேந்திரரின்
அருளுரையிலிருந்து தொகுத்தது மேலும் விபரங்களுக்கு
எஸ்.மகாதேவன், போன் 098410 28028

ஆன்மிகம் • தத்துவம் • உடல்நலம் • பலன்கள்
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
www.aanmeegamalar.com
ஆன்மீகமலர்.காம்



# திருநீறை வீணாக்கி சூட்சும பாவத்திற்கு ஆளாகாதீர்கள்

திருநீறு என்பது சிவப் பிரசாதமாகும், சிவபெருமானே விரும்பி உடல் முழுவதும் பூசிக்கொள்ளும் பாக்கியம் பெற்றது.

குறிப்பிட்ட பிரச்சனைகளுக்கு, அதற்குரிய மந்திரங்களை திருநீற்றில் உருவேற்றி அந்த திருநீற்றை பூசிவந்தால் எப்பேர்பட்ட நோய்களும் தீரும்.

மந்திரம் மட்டுமின்றி தந்திரமாகவும் விளங்குவது திருநீறு, தேவர்களை விட மேலாக திருநீறு விளங்குகிறது. மனிதகுலத்திற்கு முக்தி தருவதாகவும் திருநீறு விளங்குகிறது.

பக்தி செய்ய துணை நிற்கிறது, சித்தி அளிக்க துணைபுரிகிறது.

தேவாரம், திருவாசகம் போன்ற பாடல்களில் திருநீற்றைப் பற்றி பல பாக்கள் உள்ளது.

சீராம் வெண் ணீற்றுத் திரிபுண் டரம் விடுத்தே
பேரான முத்தி பெறவிரும்பல் - ஆரமிர்த
சஞ்சீ வியைவிடுத்தே சாகா திருப்பதற்கு
நஞ்சே புசித்ததுபோ நாடு

❖❖❖

கங்காளன் பூசும் கவசத் திருநீற்றை
மங்காமற் பூசி மகிழ்வரே யாமாகில்
தங்கா வினைகளுஞ் சாருஞ் சிவகதி
சிங்கார மான திருவடி சேர்வரே

மேற்கண்ட தேவாரம் திருவாசகப் பாக்கள் திருநீற்றின் மகிமையை மிகவும் தெளிவாக எடுத்துக் கூறுகின்றது.

இவ்வளவு சிறப்பு வாய்ந்த திருநீற்றை பக்தர்கள் கடமைக்காக வாங்கி பூசிக்கொள்வது மட்டுமின்றி, மிகுந்தவற்றை கோயில் தூண்கள், சுவர் போன்றவற்றில் போட்டுவிடுகின்றனர்.

கோவிலுக்கு சென்றால் பாவம் தீரும் என்பதை அறிந்த பக்தர்கள் இறைவனின் பிரசாதமான திருநீருக்கு உரிய மரியாதை அளிக்காதது வருத்தமே.

இறைவனை எவ்வளவு மதிக்கிறோமே அந்த அளவிற்கு திருநீற்றிற்கும் முக்கியத்துவம் தர வேண்டும்.

திருநீற்றை சுற்றிலோ, தூண்களிலோ கொட்டும்போது சூட்சும ரீதியாக பாவம் வந்து சேரும்.

எப்படி கோயில் சுவற்றில் தாங்கள் கொட்டிய திருநீறு படிந்திருக்கிறதோ அதுபோல் தங்களுடைய துன்பங்கள் படிந்தே இருக்கும் தவிர நீங்காது என்பதுதான் சூட்சும உண்மையாகும்.

திருநீற்றினை பற்றி நன்கு அறிந்த சிவனடியார்கள், சிவாச்சாரியார்கள், ஓதுவார்கள் திருநீற்றினை கீழே இடமாட்டார்கள்.

பிரசாதமாக வாங்கும் திருநீற்றை முழுவதுமாக நெற்றியிலோ, உடலிலோ முழுவதுமாக பூசிக்கொள்வதே சிறப்பு.

அப்படி இல்லையென்றாலும், மிகுந்த திருநீற்றை அதற்கென வைத்திருக்கும் பாத்திரம் போன்றவற்றில் இடுவது சிறப்பு.

புண்ணியம் தேடவும், பாவம் விலகவும் கோயிலுக்குச் செல்லும்போது, இதுபோன்ற சிறு சிறு தவறுகளால் பாவத்தை பெருக்கிக் கொள்ளாமல் இருப்பதே சிறப்பாகும்.





# மூக்குத்தியின் ரகசியம்



மூக்குத்தி குத்திக் கொள்வதால் பெண்களுக்கு பல்வேறு நன்மைகள் ஏற்படுகின்றன என ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். ஆண்களின் மூச்சுக்காற்றை விட பெண்களின் மூச்சுக்காற்றுக்கு சக்தி அதிகம். இதனால் பண்டைய காலத்திலேயே மூக்கு குத்திக் கொள்ளும் வழக்கம் உருவானது. மூக்கு குத்துவதினாலும் காது குத்துவதினாலும் உடலிலுள்ள வாயுக்கள் வெளியேறுகின்றன.

உடலிலுள்ள வெப்பத்தைக் கிரகித்து நீண்ட நேரம் தன்னுள்ளே வைத்திருக்கூடிய ஆற்றல் தங்கத்துக்கு இருக்கிறது. மூக்குப் பகுதியில் ஒரு துவாரத்தை ஏற்படுத்தி அந்த துவாரத்தில் தங்க மூக்குத்தி அணிந்தால் அந்த தங்கம் உடலில் உள்ள வெப்பத்தை கிரகித்து தன்னுள்ளே ஈர்த்து வைத்துக் கொள்ளும் சக்தியைப் பெறும். அதுமட்டுமல்லாமல் மூக்கின் மடல் பகுதியில் ஒரு துவாரம் ஏற்பட்டால் அதன் மூலம் நரம்பு மண்டலத்தில் உள்ள கெட்ட வாயு அகலும். பருவ வயதை அடைந்த பெண்களுக்கு கபாலப் பகுதியில் அதாவது தலைப்பகுதியில் சிலவிதமான வாயுக்கள் இருக்கும். இந்த வாயுக்களை வெளிக் கொண்டு வருவதற்குத்தான் மூக்குக் குத்தப்படுகிறது. மூக்குக் குத்துவதால் பெண்கள், சளி, ஒற்றைத் தலைவலி, மூக்கு சம்பந்தமான தொந்தரவுகள், பார்வைக் கோளாறுகள், நரம்பு சம்பந்தமான நோய்கள் மற்றும் மனத்தடுமாற்றம் போன்றவற்றில் இருந்து பாதுகாக்கப்படுகிறார்கள்.

கைரேகை, சோதிடம் பார்ப்பவர்கள் ஆண்களுக்கு வலது கையும், பெண்களுக்கு இடதுகையும் பார்த்து பலன் கூறுவது வழக்கம். ஆண்களுக்கு வலப் புறமும் பெண்களுக்கு இடப் புறமும் பலமான, வலுவான பகுதிகளாகும்.

ஞானிகளும் ரிஷிகளும் தியானம் செய்யும்போது வலது காலை மடக்கி இடது தொடை மீது போட்டு தியானம் செய்வார்கள்.

இதற்கு காரணம் இடது காலை மடக்கி தியானம் செய்யும் போது வலது பக்கமாக சுவாசம் போகும். வலது என்றால் தமிழில் வெற்றி என்று பொருள். வலது பக்கமாக சுவாசம் செல்லும்போது தியானம், பிராத்தனை எல்லாம் கண்டிப்பாக பலன் தரும்.

இந்த நாடியை அடக்குவதாக இருந்தால் வலது பக்க சுவாசத்திற்கு மாற்றவேண்டும். அதே மாதிரி ஒரு அமைப்புத்தான் மூக்குத்தி.

நமது மூளைப் பக்கத்தில் ஹிப்போதெலமஸ் (Hippotelamas) என்ற பகுதி இருக்கிறது. நரம்பு மண்டலங்களை கட்டுப்படுத்தக் கூடிய, செயல்படக் கூடிய அளவு சில பகுதிகள் உள்ளன.

அந்தப் பகுதியில் சில உணர்ச்சி பிரவாகங்கள் உள்ளன. இதனைச் செயல்படுத்துவதற்கு அந்தப் பகுதி துணையாக இருக்கிறது. இப்படி இந்தப் பகுதியை அதிகமாக செயல் படுத்துவதற்கும் பெண்ணின் மூக்கில் இடது பக்கத்தில் குத்தக் கூடிய முக்குத்தி வலது பக்க மூளையை நன்றாக செயல் படவைக்கும்.

இடது பக்கத்தில் முளை அடைப்பு என்றால் வலது பக்கத்தில் நன்கு வேலை செய்யும். வலது பக்கம் அடைத்தால் இடது பக்கம் உள்ள மூளை அதிகமாக இயங்கும்.

இன்றைய நம்முடைய மனித வாழ்க்கைக்கு அதிகமாக இந்த இடது பக்க மூளையை அடைத்து வலது பக்கமாக வேலை செய்ய வைக்கிறோம். அதனால் வலது கை, வலது கால் எல்லாமே பலமாக உள்ளது.

இதனால்தான் நம் முன்னோர் பெண்களுக்கு மூக்கு குத்துவதை வழக்கமாக வைத்துள்ளனர்.



www.aanmeegamalar.com
www.aanmeegamalar.com



# பலவிதமான பிரச்சனையை தீர்க்க உதவும் பரிகாரங்கள்

எந்த விதமான பிரச்சனைகள், கஷ்டங்களையும் போக்கும் எளிய, விரைவில் பலன் தரக்கூடிய பரிகாரங்கள் உள்ளன. அவற்றில் சிலவற்றை பார்க்கலாம்.

❖ கெட்ட எண்ணங்களை, குரூர சிந்தனைகளை திசை திருப்புவதற்கு பெரிய முகம் பார்க்கும் கண்ணாடியை வரவேற்பறையில் அல்லது வீட்டின் உள்வாசலில் வைக்கலாம். மீன்தொட்டி வைத்து அதில் கருப்பு, சிகப்பு மீன்களை வளர்க்கலாம். வாசலில் கண் திருஷ்டி கணபதி படத்தையும் மாட்டி வைக்கலாம்.

❖ ஆரத்தி எடுக்கும்போது பயன்படுத்தப்படும் குங்குமம் கலந்த நீர், வெற்றிலை மீது எரியும் கற்பூரம் ஆகியவற்றுக்கு தீய சக்திகளை (கண்திருஷ்டி) விரட்டும் ஆற்றல் உண்டு.

❖ வாழை மரத்தை வாசலில் கட்டுவார்கள். இதற்கு காரணம் வாழைக்கு திருஷ்டி தோஷங்களை ஈர்த்துக் கொள்ளும் குணம் உண்டு என்பதுதான்.

❖ வாசலில் கற்றாழை, சப்பாத்தி கள்ளி, முள் அதிகம் உள்ள செடிகள், மஞ்சள் ரோஜா செடி ஆகியவற்றை வளர்க்கலாம். ஆகாச கருடன் என்று ஒரு வகை கிழங்கு உள்ளது. அதை வாங்கி மஞ்சள், சந்தனம், குங்குமம் வைத்து கருப்பு கம்பளி கயிற்றில் கட்டி வீட்டின் வாசலில் தொங்க விடலாம்.

❖ வாரம் ஒருமுறை கல் உப்பை குளிக்கும் தண்ணீரில் கலந்து குளித்து வர திருஷ்டியால் ஏற்படும் உடல் அசதி, சோம்பல் நீங்கும். குறிப்பாக அவரவர் பிறந்த கிழமை அல்லது செவ்வாய்க்கிழமையில் இவ்வாறு குளிக்க லாம்.

❖ வியாபாரத் தலங்களில் திருஷ்டி நீங்க எலுமிச்சம்பழத்தை அறுத்து ஒரு பகுதியில் குங்குமத்தை தடவியும், மற்றொரு பகுதியில் மஞ்சள் பொடியைத் தடவியும் வைக்கலாம். இதை ஒவ்வொரு செவ்வாய்க்கிழமை செய்வது நலம் தரும். பழத்தை மாற்றும்போது முதலில் வைத்த பழத்தை மூன்று முறை கடையை சுற்றி தெருவில் வீசிவிடவும்.

❖ அமாவாசை, பவுர்ணமி, அஷ்டமி, நவமி போன்ற நாட்களில் காலை, மாலை இருவேளையும் சாம்பிராணி பொடியுடன், கருவேலம்பட்டை பொடி, வெண் கடுகுத்தூள் ஆகியவற்றை கலந்து வீடு, கடை அலுவலகத்தில் புகை காட்ட திருஷ்டியும், தீய சக்திகளும் வெளியேறும்.

❖ முடக்கற்றான், பச்சை கற்பூரம், கஸ்தூரி மஞ்சள், ஜவ்வாது, ஆகியவைகளைக் சேர்த்து அரைத்து அந்தப் பொடியை பசு கோமியத்தில் கரைத்து வீட்டிலோ, வியாபார ஸ்தலத்திலோ, தெளிக்க தீய சத்திகள், கண் திருஷ்டி, நீங்கி செல்வ செழிப்பு பெறலாம்.

❖ கடன் தொல்லை போன்றவை இருந்தால், விநாயகரின் ஆலயத்தில் அவர்களின் பெயரில் அர்ச்சனை செய்து, தேங்காய் எண்ணெயையும், தன் குலத்தை காக்கும் குலதெய்வத்திற்கு பிடித்தமான விளக்கெண்ணையும் ஒன்றாக கலந்து, அர்ச்சனை செய்த தேங்காயில் ஊற்றி தீபம் ஏற்றினால் பிரச்சனைகள் விலகும். நம்முடைய முன்னேற்றம் தேங்காமல் விருத்தியாகும்.

❖ வளர்பிறையில் வரும் செவ்வாய், சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் கடற்கரைக்குச் சென்று கடல் நீரை எடுத்து வந்து அதில் மஞ்சள் பொடியை கலந்து கடை, அலுவலகம், வீடு ஆகியவற்றில் தெளிப்பது சிறந்த பரிகாரம். கடல் தண்ணிரில் குளித்தால் உடலில் இருக்கும் அந்த ஏழு சக்கரங்களும் பலம் பெறும்.

# திலகமிடும் விரல்களும் பலன்களும்

உடலில் உள்ள மின்காந்த சக்தி, புருவங்களின் நடுவில் விசேஷமாக வெளிப்படுகிறது. இந்த இடத்தை 'ஞானக்கண்' 'ஆக்ஞா சக்கர ஸ்தானம்' என குறிப்பிடுவர். அதை தூண்டி விடுவதற்காக சந்தனம், குங்குமத்தை திலகமாக நாம் இடுகிறோம். 'திலம்' என்பது எள்ளை குறிக்கும். திலகம் என்பதற்கு 'எள் அளவுக்கு சிறிதாக வைப்பது' என்பது பொருள்.

மனம் ஏதாவது ஒரு விஷயத்தால் பாதிப்பு அடையும்போது, உஷ்ணத்தால் தலைவலி ஏற்படும். சந்தனம், குங்குமம் இடுவதால் தலை பாதிப்பு நேராமல் குளிர்ச்சி உண்டாகும். காளிதாசரின் 'மாளவிகாக்னி மித்ரம்' என்னும் காவியம் திலகத்தின் பெருமையை விளக்குகிறது.

பிறரைக் கவர சிவப்பு, செல்வத்திற்கு மஞ்சள், அமைதிக்கு வெள்ளை, முகத்தின் பொலிவிற்கு கருப்பு நிறத்தில் திலகமிட வேண்டும். திலகமிடும் விரலுக்கேற்ப பலன் மாறுபடும். வலது கை மோதிர விரல் மன அமைதிக்கும், நடுவிரல் ஆயுள் விருத்திக்கும், கட்டை விரல் மன வலிமைக்கும், ஆள்காட்டி விரல் மோட்சத்திற்கும் வழிவகுக்கும்.



ஆன்மிகமலர் மெயில் புக்

www.aanmeegamalar.com

மாவட்டம் தோறும் ஆன்மிக செய்திகள், தல வரலாறுகள், கோவில்களின் சிறப்பு, கோவில் திருவிழா, சிதிலமடைந்த கோவில்களைப் பற்றிய தகவல்கள்களை திரட்டித்தர நிருபர்கள் தேவை

மேலும் தகவல்களுக்கு தொடர்பு கொள்ளவும்

8825844033

www.aanmeegamalar.com

# நவராத்திரி உபாஸனையின் மகத்துவங்கள்



**நவராத்திரி விரத காரியத்தின் சாஸ்திரம்**

நவராத்திரியின்போது கடஸ்தாபனம் செய்யப்படுகிறது. அதாவது, மண் சட்டி அல்லது தாமிர சொம்பில் மண் நிரப்பி அதில் ஸப்த தானியங்கள் தூவப்படுகின்றன. அத்துடன் கூட தண்ணீர், மலர்கள், அருகம் புல், அக்ஷதை, பாக்கு, நாணயங்கள் ஆகியவையும் சேர்க்கப்படுகின்றன.

சாஸ்திரம் மற்றும் மஹத்துவம் : மண் அல்லது தாமிர சொம்பிலுள்ள ப்ருத்வி தத்துவ ரூபமான மண்ணில், ஸப்த தானிய ரூபத்தில் உள்ள ஆப மற்றும் தேஜ தத்துவம் தூவப்படுகிறது. அந்த விதையிலிருந்து மற்றும் மூடிய சொம்பிலிருந்து வெளிப்படும் உஷ்ண சக்தியின் உதவியால் நாத அதிர்வலைகள் உண்டாகிறது. அதனால் ப்ரம்மாண்டத்திலுள்ள தேஜ தத்துவ ஆதிசக்தி ரூபமான அதிர்வலைகளை குறைந்த காலத்திற்குள் ஆகர்ஷிப்பது சுலபமாகிறது. மண் பானையிலுள்ள ப்ருத்வி தத்துவத்தின் கன பரிமாணத்தால் ஆகர்ஷிக்கப்படும் அதிர் வலைகளும் இந்த கன பரிமாணத்தைப் பெறுகிறது. அதனால் அதிக காலம் அவை நீடிக்கின் றன. தாமிர கலசத்திலிருந்து வெளிப்படும் அதிர்வலைகள் வாயுமண்டலத்தில் வேகமாக பரவுவதால் குறிப்பிட்ட காலம் வரை அந்த வாஸ்து முழுவதிற்கும் பயன் கிடைக்கிறது. கடஸ்தாபனத்தால் சக்தி தத்துவத்தின் தேஜரூப ரஜோகுண அதிர்வலைகள் ப்ரம்மாண்டத்தில் செயல்படுவதால் பூஜை செய்பவரின் சூட்சும தேஹம் தூய்மையடைகிறது.

**அகண்ட தீபமேற்றுவதன் சாஸ்திரம்**

தீபம் என்பது தேஜ தத்துவத்தின் சின்னம். நவராத்திரியில் வாயுமண்டலம் சக்தி மிகுந்த தேஜ தத்துவத்தால் நிறைந்திருப்பதால் அகண்டமாக ஒளிர் விடும் தீப ஒளியிடம் தேஜ தத்துவ அதிர்வலைகள் ஆகர்ஷிக்கப்படுகின்றன. அகண்ட தீபமேற்றுவதால் இந்த அதிர்வலைகள் தொடர்ந்து வாஸ்துவில் நிறைகின்றன. அதனால் நவராத்திரியின்போது அகண்ட தீபமேற்றுவது மஹத்துவம் நிறைந்ததாகும். நவராத்திரியில் செயல்பாட்டிலிருக்கும் தேஜ தத்துவ அதிர்வலைகள் அகண்டமாக தொடர்ந்து வெளிப்படுவதால் அவை அகண்ட தீபம் மூலமாக செயல்பட்டு அந்த வாஸ்துவை தேஜ தத்துவத்தால் நிறைக்கிறது.

**மலர்மாலை அணிவித்தல்**

மாலையிலுள்ள மலர்களின் நிறம் மற்றும் சுகந்தத்தால் வாயுமண்டலத்திலிருந்து ஆகர்ஷிக் கப்படும் தேஜ தத்துவ சக்தி அதிர்வலைகள் தேவி யிடம் உடனே ஸங்க்ரமிக்கிறது. அதனுடைய ஸ்பர்சத்தால் மூர்த்தியில் தேவி தத்துவம் குறைந்த காலத்திற்குள் விழிப்படைகிறது. பிறகு இந்த தேவி தத்துவம் வாஸ்துவில் வெளிப்பட்டு பரவ ஆரம்பிப்பதால் வாஸ்துசுத்தி ஏற்பட்டு ஜீவனுக்கு சைதன்யம் கிடைக்க உதவுகிறது.'

**கன்யா பூஜை செய்தல்**

கன்யா பூஜையை எவ்வாறு செய்வது? நவராத்திரி ஒன்பது நாட்களில் ஒவ்வொரு நாளும் ஒரு கன்யா குழந்தையை அல்லது ஒரே நாளில் 9 அல்லது ஒற்றைப்படை எண்ணுள்ள கன்யா குழந் தைகளை வீட்டிற்கு அழைக்கும் வழக்கம் உள்ளது.

1. கன்யா குழந்தைகள் உட்காருவதற்கு ஆஸ னம் அளிக்கவும்.
2. அவர்களுக்குள் தேவி தத்துவம் விழிப் படைந்துள்ளது என்ற பக்தி உணர்வோடு அவர்களுக்கு பாதபூஜை செய்யவும்.
3. தேவிக்கு பிடித்தமான உணவை (தேவிக்கு பூரிபாயஸம் பிடிக்கும்) கன்யா குழந் தைகளுக்கு வாழையிலையில் அளிக்கவும்.
4. கன்யா குழந்தைகளுக்கு புது வஸ்திரத்தை வழங்கி அவர்களை ஆதிசக்தியின் ஸ்வரூப மாக நினைத்து நமஸ்காரம் செய்யவும்.

கன்யா பூஜை செய்வதன் சாஸ்திரமும் மஹத் துவமும்: கன்யா குழந்தை என்பவள் தேவி தத்துவத்தின் வெளிப்படாத ஸ்வரூபமாகும். அவளை பூஜிப்பதால் அவளிடமுள்ள சக்தி தத்துவம் விழிப்படைந்து ப்ரம்மாண்டத்திலுள்ள தேஜ தத்துவ அதிர்வலைகள் ஆகர்ஷிக்கப்படுகின்றன. அவள் மூலமாக இந்த தத்துவம் சஹஜமாக சூழலில் வெளிப்பட்டு பரவுகிறது.

மற்றவருக்கும் சக்தி தத்துவ அதிர்வலை களின் பயன் கிடைக்கிறது. ஒன்பது நாட்களும் செயல் பாட்டில் இருக்கும் தேவி தத்துவ அதிர்வலைகள் நம் உடலில் சேர்வதற்கு இக்குழந்தைகளை பக்தியுடன் பூஜை செய்து அவர்களை மகிழ்விக்க வேண்டும். கன்யா குழந்தைகளிடம் ஸன்ஸ்காரங்களின் வெளிப்பாடு குறைவாக இருப்பதால் அவர்கள் மூலமாக ஸகுண நிலையில் தேவி தத்துவத்தின் அதிகபட்ச பயன் கிடைப்பது சுலபமாகிறது; அதனால் நவராத்திரியில் கன்யா பூஜை செய்வது மஹத்துவம் நிறைந்ததாகும்.

**ஒன்பது நாட்களும் தேவிக்கு நைவேத்தியம் அர்ப்பணித்தல்**

நவராத்திரியில் தேவிக்கு அர்ப்பணம் செய்ய சாதாரண ஸாத்வீக நைவேத்தியத்தை தயார் செய்ய வேண்டும். சாதாரணமாக செய்யப்படும் நைவேத்தியத்துடன் கூட விசேஷமாக தயாரிக் கப்படும் போளி, பருப்பு பாயசம் ஆகியவற்றையும் தயாரிக்கலாம். போளி போன்ற நைவேத்தியங்களை தேவிக்கு அர்ப்பணிக் கும்போது வெளிப்படும் ரஜோ குண தன்மையால் ப்ரம்மாண்டத்திலுள்ள சக்தி ரூபமான தேஜ அதிர்வலைகள் அதி விரைவில் அதனிடம் ஆகர்ஷிக்கப்படுகின்றன. அதை பிரஸாதமாக உட்கொள்ளும்போது அதிலுள்ள சக்திரூபமான தேஜ அதிர்வலைகளின் பயன் கிடைத்து ஸ்தூல மற்றும் சூட்சும தேஹங்கள் தூய்மையடைகின்றன.

**முளை விட்ட தானியங்களின் கதிர் களை விஸர்ஜனத்தின்போது தேவிக்கு அர்ப் பணிக்கவும்**

(முளை விட்ட தானியக் கதிர்களை ஸ்ரீ சாகம்பரிதேவியாக நினைத்து பெண்கள் தலையில் அணிந்து கொண்டு விஸர்ஜனத்திற்கு செல்வர்) முளை விட்ட தானியக் கதிர்களை தேவிக்கு அர்ப் பணிப்பது என்பது தானியத்திலுள்ள தேவியின் செயல்படும் அதிர்வலைகளை மூர்த்தியின் ஸ்திரத்தன்மையோடு ஒன்றிணையச் செய்வதை குறிக்கிறது. விஸர்ஜன காரியமே ஒன்றிணைக்கும் தத்துவத்தை குறிக்கிறது.

ஓடும் தண்ணீரிலிருந்து ஸாத்வீக அதிர் வலைகள் வெளிப்பட்டு வாயுமண்டலத்தில் பரவுவ தால் அனைவருக்கும் அதன் பயன் கிடைக்கிறது. இதன் மூலம் வ்யஷ்டி காரியத்தின் மூலம் எவ்வாறு ஸமஷ்டி நன்மை ஏற்படுகிறது என்பது தெளி வாகிறது.

– தகவல்: ஸனாதனின் கையேடு மற்றும்
www.spiritualresearchfoundation.org
தொடர்பு: 09380949626

www.aanmeegamalar.com
www.aanmeegamalar.com

# மண்டோதரி

ராவணனை அழித்த பிறகு, போர்க்களத்தில் ராமன் ஓய்வாக தரையை நோக்கியபடி அமர்ந் திருந்தார்.

அப்போது ஒரு பெண்ணின் நிழல் தெரிந் தது. அந்த நிழலுக்குச் சொந்தக்காரியான பெண், அவரது திருப்பாதங்களைத் தொட முயற்சிப்பதை ராமன் நிழலின் நடவடிக்கை மூலம் புரிந்து கொண்டார். உடனே தனது காலை உள்ளிழுத்துக் கொண்டார்.

“நீ யாரம்மா?” என்றார்.

“நான் ராவணனின் மனைவி மண்டோதரி. என் கணவரை யாராலும் வெல்ல முடியாது என இறுமாந்திருந்தேன். ஆனால் அவரையே ஒருவன் கொன்று விட்டான் என்றால், அவனிடம் ஏதோ உயர்ந்த குணம் இருக்க வேண்டும் என நினைத்தேன். மேலும். க்ஷத்திரிய குல தர்மப்படி, கணவனை இழந்த பெண்ணை வெற்றி பெற்றவன் என்ன வேண்டுமானாலும் செய்யலாம். ஆனால் நீ வரவில்லை. ஆச்சரியப்பட்டேன்.

இங்கே நீ என் நிழல் உன் மீது படுவதைக் கூட விரும்பவில்லை என்னும் போது, உன் சிறந்த குணத்தை என்னவென்பேன்! என் கணவரிடம் கூட ரகு குலத்தில் உதித்த ராமன் மனிதன் அல்ல.

உலகைக் காக்கும் பரம்பொருள். விஸ்வரூபன். தன்னுடைய ஒவ்வொரு அங்கங்களிலும் உலகங்களையே தாங்கி நிற்கிறான்.

பாதாள லோகமே அவனது பாதங்கள். பிரம்மலோகமே அவன் சிரசு. கதிரவனே அவனது கண்கள். மேகமே அவனது கேசம். அவன் இமைப்பதே இரவு பகலாகிறது. திசைகளனைத்தும் அவனுக்கு செவிகள். அவனது திருநாமம் எல்லாப் பாவங்களையும் நொடிப்பொழுதில் போக்கவல்லது. அவன் வேதத்தின் சாரம். ராமன் சாட்சாத் தெய்வ வடிவம் என்பதில் சந்தேகம் இல்லை. அவனிடம் பகையை ஒழித்து சீதையை விட்டுவிடுங்கள்’ என்று மன்றாடினேன்.

அவர் கேட்கவில்லை. உன் வெற்றிக்கு காரணம், என் கணவரிடம் இல்லாத ஒரு நற்குணம் உங்களிடத்தில் இருந்தது தான்.அதுதான் தங்களின் ஏகபத்தினி விரதத்தன்மை. அதனால் தான் நீ வென்றாய்,” என்றாள்.



அனைத்தும் கேட்ட ராம பிரான் சிறு புன்னகை புரிந்தார். தன் சுயவடிவான நாராயணனாக அவளுக்கு விஸ்வ ரூப தரிசனம் கொடுத்தார்.

ராமாயணத்தில் பாக்கியவதியாகத் திகழ்ந்த வள் மண்டோதரி.

## சீதையைக் காத்த மண்டோதரி

சீதையை அபகரித்து வந்த இராவணன, தன் இச்சைக்கு இணங்க அவளை துன்புறுத்தினான். ஒரு பெண்ணின் அனுமதி இல்லாமல் அவளைத் தீண்டினால் தலை வெடித்து மரணமடைவான் என இராவணனுக்கு சாபம் இருந்தது. இதனால் சீதையை சம்மதிக்க வைக்க அவளை பலமுறை துன்புறுத்தினான். எனினும் சீதை ஒருபோதும் இராவணனின் இச்சைக்கு இணங்கவில்லை. ஒரு சமயம் மிகுந்த கோபமடைந்த இராவணன் சீதையின் தலையைத் துண்டிக்க தன் வாளை உயர்த்தினான். அப்போது மண்டோதரி அங்கு ஓடிவந்து இராவணனின் கையைப் பிடித்து, இராவணனைத் தடுத்தாள்.

‘ஓர் ஆணின் மீது விருப்பமில்லாத ஒரு பெண்ணை சம்மதிக்க வைப்பதற்காக அவளைத் துன்புறுத்துவதும், கொலை செய்ய முயற்சிப்பதும் மகா பாதகம். இத்தகைய செயல் உம்மை மட்டுமல்ல, உம்மைச் சார்ந்த அத்தனை பேரையும், உன் சாம்ராஜ்யத்தையும் சேர்த்து அழித்திடும்’ என மண்டோதரி இராவணனுக்கு அறிவுரை செய்தாள். அதன் பின்னர் இராவணன் சீதையைக் கொலை செய்யும் எண்ணத்தை விடுத்தான்.

## மண்டோதரி சீதையின் தாயா?

மண்டோதரி சீதையின் தாய் என வால்மீகி இராமாயணத்தில் குறிப்பிடப்படவில்லை. ஆயினும், அத்பூத இராமாயணம், தேவி பாகவத புராணம் மற்றும் சமண இலக்கியங்கள் மண்டோதரியை சீதையின் தாய் என குறிப்பிடுகின்றன. இராமாணயத்தில் சுவாரஸ்யத்தை ஏற்றுவதற்காக அவ்வாறு கூடுதலான கதையை உருவாக்கியிருக்கலாம் எனக் கருதப்படுகின்றது.

இராவணனின் மனைவியாக இருந்தாலும், சீதைக்கு பாதுகாப்பாக இருந்தாள் என்பதால் சீதா தேவி மண்டோதரியை தாயாகவே போற்றி அழைத் ததால் ஒருசில புராணங்கள் மண்டோதரியை சீதையின் தாயாகவே பாவித்து கூறியதாக கூறப்படுகிறது.

அனுமன் இலங்கையில் ராவணனின் அந்தப் புரம் சென்ற போது, மண்டோதரி ஒழுங்காக உடையணிந்திருந்ததைக் கண்டு, இவள் சீதையாக இருப்பாளோ’ என்று சந்தேகம் கொண்டான். அந்தளவுக்கு ஒழுக்கமுள்ளவளாக விளங்கியதால் தான், கெட்டவனுக்கு வாழ்க்கைப்பட்டும் அவளுக்கு நாராயண தரிசனம் கிடைத்தது...

அழகிய வடிவமைப்பில்
வார இதழ்கள்,
மாத இதழ்கள்,
பப்ளிகேஷன்ஸ்
புக் ஓர்க்,
அட்டைப்பட
வடிவமைப்பு,
நாளிதழ்கள்,
போன்றவை
தரமாகவும்
குறைந்த செலவில்
செய்துதரப்படும்
Bhaanrajg Graphics
செல்: +91-8825844033


ஆன்மிகமலர் மெயில் புக்

# துன்பமும் இன்பமும்



யோகி ஸ்ரீ ராமானந்த குரு



பிறந்த நாள் முதல் இறக்க போகும் நாள்வரை துயரங்கள் என்பதே நமக்கு துணையாக வருகிறது. துள்ளி விளையாடும் பிள்ளைப்பருவத்தில் பள்ளிக்கு செல் என்றும் பாடங்கள் படி என்றும் திரும்ப திரும்ப சொல்லி மழலை பருவத்து மகிழ்ச் சியை மண்ணுக்குள் குழிதோண்டி புதைத்து விடுகிறார்கள். இது நமக்கு தெரிகிற முதல் துயரம். இதற்கு முன் பச்சிளம் குழந்தையாக தொட்டிலில் கிடக்கும் போது அம்மையும், அப்பனும், பாட்டனும், பாட்டியும் முத்தங்கள் கொடுக்கிறேன் என்றும், கொஞ்சி மகிழ்கிறேன் என்றும் எத்தனை கஷ்டங்கள் கொடுத்திருப்பார்கள். அவையெல்லாம் நினைவில் இல்லை.

பள்ளியை விட்டு வெளியே வந்து வாலிப பருவத்தின் வனப்பை ரசிக்கலாம் என்றால் பொறுப்பில்லாமல் ஊர் சுற்றாதே குடும்பத்தை கரை சேர்க்க வேலைக்கு போ! தொழிலை செய் என்று எண்ணிலடங்காத ஆணிகளை நடக்கும் பாதையில் நட்டு வைக்கிறார்கள். ஒருநாள், ஒரே ஒருநாள் நண்பர்களோடு ஆற்றங்கரை ஓரம் கடற்கரை மணல்பரப்பில் கட்டிப்புரண்டு சடுகுடு ஆடினால் வீணாகிப்போவாய் என்று விமர்சனம் செய்கிறார்கள். வேலை ஒன்றை தேடிக்கொள் அதன் பிறகு உன் உல்லாசத்திற்கு தடை இல்லை என்கிறார்கள்.

தொழில் அமைந்தால், வேலை கிடைத்தால் நாலுகாசு சம்பாதிக்க முனைந்தால் இன்னும் தனிமரமாக எத்தனை நாட்கள் வாழ்வாய் திருமணம் என்ற பந்தத்திற்குள் நுழைய வேண்டாமா? சமுதாயத்தில் நீயும் ஒரு அங்கத்தினன் என்பதை காட்ட வேண்டாமா? என்று சம்சார பந்தத்திற்குள் பிடித்து தள்ளுகிறார்கள்.

திருமணம் முடிந்துவிட்டால் மனைவிக்காக பாடு படு, குழந்தைக்காக ஓடு, குடும்பத்திற்காக ஓய்வே இல்லாமல் உழைத்திடு என்று சாட்டை கம்பால் விரட்டுகிற மாட்டை போல் காலம் முழுக்க சுற்ற விடுகிறார்கள். இதில் எப்போது நான் மகிழ்ந்திருப்பது? என்று நான் சந்தோசப்படுவது? எதற்காக நான் உற்சாகம் அடைவது? வாழ்க்கை முழுவதும் துன்பமயமாகவே இருக்கிறதே தவிர இன்பம் என்பது எள் முனை அளவிற்கு கூட இல்லை.

நாலுபேர் மதிப்பது இன்பம். அழகிய மனையாளை பெறுவது இன்பம் அன்பான குழந்தைகளை அரவணைக்கும் சொந்தபந்தங்களை உண்டாக்கி கொண்டது இன்பம் என்று நிஜமான துயரங்களுக்கு போலியான விளக்கங்களை கொடுக்கிறார்கள். நன்றாக யோசித்து பாருங்கள் மனைவி இன்பமா? சம்பளம் இல்லை கையில் கால் காசு இல்லை என்றால் எந்த மனைவி நம்மை நேசிப்பாள்? படிக்க வைக்கவில்லை என்றால் சொத்து சுகம் சேர்த்து வைக்கவில்லை என்றால் எந்த குழந்தை நமக்கு இன்பம் தரும். விருந்துக்கு வந்தவனுக்குசோறு போட துப்பில்லாதவனை எந்த உறவினர்கள் மதிப்பார்கள். இவர்களிடம் போலியான பாராட்டுதலை பெறவேண்டும் என்பதற்காக ஓய்வு ஒழிச்சல் இல்லாமல் பாடுபட வேண்டும் அதற்கு நமது இன்பத்தை பலிகொடுக்க வேண்டும் வாழ்க்கை என்பது துன்பம் நிறைந்த சாக்காடே தவிர பூக்காடு அல்ல என்று உலக வாழ்க்கையை துன்பமயமாக பார்பவர்கள் நிறைய பேர் உண்டு.

ஊருக்காக உலகுக்காக உற்றார் உறவினருக்காக வாழாமல் தனக்காக மட்டும் வாழ்வது என்பதா நிஜமான இன்பம்? அப்படி வாழ்ந்தால் அதுவே பெரிய துயரம். தன்னந்தனிமையில் தனிக்காட்டு ராஜாவாக யாருடைய துணையும் இல்லாமல் எவருடைய அருகாமையும் இல்லாமல் நீ வாழ விரும்பினால் மன நல மருத்துவமனைகள் மட்டுமே உனக்கு கடைசி புகலிடமாக இருக்கும். உன் அப்பனும் பாட்டனும் உன்னை பெற்றுப்போட்டது சுயநலமாக நீ சுற்றித்திரிய வேண்டும் என்பதற்கல்ல கடமையை செய்ய தலைமுறையை அடுத்த கட்டத்திற்கு எடுத்து செல்ல துன்பம் என்று பார்த்தால் ரோஜா குல்கந்தை சுவைப்பது கூட துன்பம் தான் அனைத்தும் இன்பமயம் என்றால் நெருப்பாற்றில் நீச்சலடிப்பதுவே பெரிய பேரின்பம்.

இப்படி இரண்டுதரப்பு வாதங்கள் உலகில் தொன்றுதொட்டு நடந்துவருகிறது இதில் எது சரியென்று நமக்கு தெரியவில்லை எதை தவறென்றும் புறந்தள்ளவும் முடியவில்லை. நமது வாழ்க்கை பயணத்தில் எதிர்படும் மனிதர்களை தினசரி காண்கிறோம் சிலர் பார்க்கும் போதெல்லாம் அழுது கொண்டே இருக்கிறான் எனக்கு திருமணமாகி விட்டது பெண்டாட்டியை எப்படி காப்பாற்றுவேன் என்று அழுகிறான் பத்துலட்ச ரூபாய் பணம் வந்துவிட்டது வரிகட்ட வேண்டுமே என்று அழுகிறான் மந்திரி பதவி கிடைத்திருக்கிறது இது நிலைக்குமோ நிலைக்காதோ என்று அழுகிறான். இவர்களது அழுகை ஓய்ந்ததை நம்மால் காணவே முடியவில்லை

இன்னும் சிலர் இருக்கிறார்கள் ஐந்து வயதில் அம்மா செத்து போய்விட்டாள் இவனை புத்திசாலியாக்குவது முடியவே முடியாது என்ற பயத்தில் இறந்துவிட்டாள் என்று தான் அனாதையாகி போனதை கூட சிரித்து கொண்டே கூறுபவர்களும் இருக்கிறார்கள். என் தொண்டையில் புற்று வந்திருக்கிறதாம் சில பாம்புகள் வந்து குடிவரட்டுமா என்று விசாரிக்கிறது என சாவைதரும் நோயை கூட நையாண்டி செய்கிறார்கள். அழவேண்டிய விஷயத்திற்கு சிரிப்பது சரியா என்ற கேள்வி பிறக்கும். சிரிக்க வேண்டிய விஷயத்திற்கு அழுபவன் இருக்கும் போது துயரத்தை கண்டு சிரிப்பதில் என்ன தவறு?

பலபேர் நினைப்பது போல் வாழ்க்கை முழுவதும் சோகமாகவே யாருக்கும் இருப்பதில்லை என்பது வயதுவரையில் ஒருமனிதன் வாழ்கிறான் என்றால் குறைந்தபட்சம் பாதி நாட்களாவது




சந்தோசமாக இருந்திருப்பான் இது கூட தவறு சில மணிநேரங்கள் மட்டுமே வந்துபோகும் துயரங்களை நாம் பல நாட்கள் நினைத்துக்கொண்டே இருப்பதனால் துயரத்தின் காலம் நீண்டதாக இருப்பதாக நமக்கு தெரிகிறது. உண்மையில் நாம் துன்பப்படும் காலத்தை விட இன்பமாக இருக்கும் காலமே அதிகம். அடிக்கடி இன்பம் வருவதனால் அதனுடைய தாக்கம் மறந்து போகிறது. இதை புரிந்து கொண்டால் வாழ்க்கையை நடத்துவது மிக சுலபமாக இருக்கும்.

முதலில் எதற்கெடுத்தாலும் துயரப்படும் பழக்கத்தை கைவிட வேண்டும் உலகத்தில் அனைவரும் இன்பமாக இருக்கிறார்கள் நான் மட்டுமே துயரங்களை அனுபவிக்கிறேன் என்று நினைப்பது பெரிய மனவியாதி பாயாசம் குடித்தாலும் கசக்கிறது என்பவனை எப்படி நிதானபுத்தி உடையவன் என்று எடுத்து கொள்வது நான் நன்றாக இருக்கிறேன் நாளையும் நன்றாக இருப்பேன் அதனால் இன்று மற்றவர்களையும் நன்றாக வைப்பேன் நன்றாக இருப்பவர்களையும் இருக்க விடுவேன் என்று செயல்படுபவன் மட்டுமே சாதனைகளை செய்யவில்லை என்றாலும் சோதனைகளை முறியடிப்பவனாக இருப்பான்.

துயரத்தால் மனிதனின் உடல் வனப்பு குறைகிறது. வீரம் வீரியம் குறைகிறது அறிவு குறைகிறது ஆற்றல் குறைகிறது அவனது செயல்கள் எல்லாமே காற்றில் கரையும் கற்பூரம் போல் ஆகிவிடுகிறது.

துயரப்பட்டு கொண்டே இருக்கும் மனிதன் நிரந்தர நோயாளியாகிவிடுகிறான் துன்பம் துன்பம் என்று சொல்லி கொண்டும் நம்பி கொண்டும் அலைவதனால் என்ன கிடைத்துவிடப்போகிறது? நீ துயரப்படுகிறாய் என்பதற்காக சூரியன் வடக்கே உதிக்க போகிறதா? அல்லிமலர் காலையில் மலர போகிறதா? உன் உடம்பு தான் கொதிக்கப்போகிறது. உன் நரம்பு தான் தளர போகிறது உன் புத்தி தான் தடுமாறப்போகிறது

ஆயிரம் கஷ்டங்கள் வந்தாலும் இது தற்காலிகமானதே நேற்று வந்தது என்னை கடந்து போனதை போல் இன்று வந்திருப்பதும் கடந்து போகும் கட்டு கரும்பை கசக்கி பிழிந்து யானை மென்று துப்புவது போல் துயரங்களும் என்னால் ஜீரணிக்க பட்டுவிடும் என்று ஒவ்வொரு சவால்களையும் எதிர்கொண்டு மோதி பார் உனக்குள் ஒரு தாமரை மொட்டு புத்தம் புதியதாக இதழ் விரிப்பதை பார்ப்பாய்.

யோகி ஸ்ரீ ராமானந்த குரு
மேலும் தொடர்பு கொள்ளவும்
போன்: 09442426434

ஆன்மிகமலர்
Corona Virus (COVID-19)
24 Hours Control Room
ஆன்மிகம் • தத்துவம் • உடல்நலம் • பலன்கள்
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
www.aanmeegamalar.com
ஆன்மிகமலர்.காம்

# வீட்டிலேயே சுத்தமான திருநீறு தயாரிக்கும் வழி முறை

பசுவானது மகாலட்சுமியின் வாசஸ்தலமாக விளங்குகிறது. பசுவின் சாணத்தை அக்னியில் இட்டு பஸ்பமாக்கி திருநீறு தயாரிக்கப்படுகிறது. இந்த உடலை சுத்தப்படுத்தி, அதற்குள் உள்ள ஆத்மாவை பரிசுத்தமாக்கும் வல்லமை பெற்றது திருநீறு. மகா பஸ்பமாக கருதப்படும் பரமாத்மாவும், விபூதி எனப்படும் திருநீறு பஸ்மமும் முற்றும் முடிந்த நிலையில் ஒன்றாக கருதப்படுவதால், விபூதி அணிந்து இறைக்காட்சியையும் பெறுவது சாத்தியமே என்று அருளாளர்கள் தெரிவித்திருக்கின்றனர்.

பல்வேறு முறைகளில் திருநீறு தயாரிக்கப்பட்டாலும், வீடுகளில் நாமே தயாரிக்கும் முறை பற்றி இங்கே காணலாம். காராம்பசுவின் சாணம் பூமியில் விழுவதற்கு முன்னர் பிடித்து, (அவ்வாறு இயலாவிடில், துணியை தரையில் விரித்து வைத்தும் பிடித்துக்கொள்ளலாம்) அதன் கோமியத்தை விட்டு கலக்கி, சிறு உருண்டைகளாக மாற்றி காய வைத்து, தூசிகள் இல்லாது எடுத்து வைத்து கொள்ளவேண்டும்.

அந்த உருண்டைகளை ‘திரிபுர ஸம்ஹார காலமான’ கார்த்திகை மாத பவுர்ணமியில் வரும் கிருத்திகை நட்சத்திரமான ‘கார்த்திகை தீபம்’ நாளில், நெருப்பில் இடவேண்டும். பாதுகாப்பான இடத்தில் அது நன்றாக எரிந்து தானாகவே ஆறும் வரையில் சில காலம் விடவேண்டும்.

மார்கழி மாதம் முழுவதும் பனி பொழிந்து, அந்த சாம்பலானது நிறம் மாறும் வரையில் விட்டுவிட்டு, தை மாதத்தில் அந்த சாம்பலை கிளறி விடவேண்டும்.

அதன் பின்னர், மாசி மாதத்தில் வரக்கூடிய ‘மகா சிவராத்திரி’ அன்று காலையில், அந்தச் சாம்பலை எடுத்து, ஒரு பானையின் வாயில் சுத்தமான, மெல்லிய துணியை கட்டி, சாம்பலை துணியின் மேல் போட்டு, கைகளால் தேய்க்க வேண்டும்.

அதன்மூலம், மென்மையான துகள்கள் திருநீறாக பானைக்குள் சேரும். அதை எடுத்து சிவபெருமானுக்கு திருநீறு அபிஷேகம் செய்வித்த பின்னர் வீட்டுக்கு எடுத்து வந்து, அதை உபயோகப் படுத்துவது தான் மேன்மையான முறையாகும். இந்த முறையை தவிர சாந்திக பஸ்மம், காமத பஸ்மம், பவுஷ்டிக பஸ்மம் ஆகிய சாஸ்திர ரீதியாக தயாரிக்கும் முறைகளும் நடைமுறையில் உள்ளன. (மேற்கண்ட முறையில் திருநீறு தயாரிக்க இயலாவிட்டால், சுத்தமான பசுஞ்சாணம் கொண்டு திருநீறு தயாரிக்கும் பல கோசாலைகள் மூலமாகவும் வாங்கிக்கொள்ளலாம்)

# மனிதனுக்கு வரும் 4 கண்டங்கள்

மனிதன் வாழ்நாள் காலத்தில் 4 விதமான உயிர் போகும் கண்டத்தை சந்திக்கிறான். அதை பற்றி திருமூலர் தெள்ள தெளிவாக விளக்குகிறார்:

"அழிகின்ற ஆண்டு அவை
ஐயைஞ்சும் மூன்றும்,
மொழிகின்ற முப்பத்து
மூன்றுஎன்பது ஆகும்
கிழிகின்ற காலஅறு
பத்திரண்டு என்பது
எழுகின்றது ஈரைம்பது
எண்அற்று இருந்தே"

– (திம 742)

பொருள்:

**முதல் கண்டம்:**
**(25–28 வயது வரை)**

- இந்த கால கட்டத்தில்தான் மனது அலைபாயும் காலகட்டம்.
- மனிதன் உடம்பை பேண மாட்டான்.
- காம இச்சை மிகுந்திருக்கும். முதியோர்களை மதியா தன்மை இருக்கும்

**இரண்டாம் கண்டம்:**
**30–33 வயது வரை)**

- இந்த கால கட்டத்தில் குடும்ப பாரம் மிகுதியால்
- உடலை பேண மாட்டான்.
- மனம் எப்போதும் கனத்திருக்கும்
- வாழ்க்கை பற்றி பயம் கலந்த சிந்தனை மிகுதிருக்கும்)

**மூன்றாம் கண்டம்:**
**(60–62 வயது வரை)**

- இந்த காலகட்டத்தில் மனிதனுக்கு




தனது சந்ததியினர் குறித்த கவலைகள் மேலோங்கி இருக்கும்.

- முதுமை குறித்த பயம் இருக்கும்.
- ஆளுமை தன்மை மேலோங்கி இருக்கும்.
- அதனால் ஏற்படும் அழுத்த காரணத்தால் தனது உடலை பேண மாட்டான்

**நான்காம் கண்டம்:**

- மேல் கூறிய 3 கண்டங்களை ஒரு மனிதன் கடந்துவிட்டால் தீர்க்க ஆயுள் பெறுவதற்கு சித்தி உண்டு.
- இதற்கு மேல் எல்லை இல்லை.
- இதைத்தான் இன்றைய அறிவியல் அறிஞர்கள் Human Life Cycle Psychology என்கின்றனர்.



ஆன்மிகமலர் மெயில் புக்



# கணவன் நலம்பெற மனைவி சொல்ல வேண்டிய மந்திரம்

இது ஸத்யவானின் மனைவியான ஸாவித்ரியால், ஸ்ரீ ஸாவித்ரீதேவியை பூஜை செய்து நமஸ்கரித்து பிரார்த்தித்த சுலோகங்களாகும்.

ஓம்கார பூர்விகே தேவி வீணா
புஸ்தக தாரிணி!
வேதமாதர் நமஸ்துப்யம்
அவைதவ்யம் ப்ரயச்சமே!!
பதிவ்ரதே மஹாபாகே பர்து ச
ப்ரியவாதினி!
அவைதவ்யம்ச ஸௌபாக்யம்
தேஹித்வம் மம ஸுவ்ருதே!!
புத்ரான் பௌத்ராம் ச ஸௌக்யம் ச
ஸௌமாங்கல்யம் ச தேஹிமே!!

விளக்கம்

1. தனது பெயருக்கு முன் ஓங்காரத்தை உடையவளும், வீணை, புஸ்தகம், இவைகளை தரித்துக் கொண்டு இருப்பவளும், வேதங்களுக் குத் தாயும், ஆன ஹே ஸாவித்ரீ தேவி (காயத்ரீ தேவி) தங்களுக்கு நமஸ்காரம். கணவனை விட்டுப் பிரியாதிருத்தலை (அதாவது தீர்க்க ஸௌமாங்கல்யத்தை) தாங்கள் அளிக்க வேண்டும்.

2. பதிவ்ரதையும், மிகுந்த பாக்யசாலினியும், பர்தாவிற்குப் பிரியமான சொல் சொல்கிறவளும், பக்தர்களை ரக்ஷிப்பதையே வ்ரதமாகக் கொண்ட வளும் ஆன ஹே தேவி! என்னை தீர்க்க சுமங்கலியாயும் செய்யவேண்டும். எனக்கு ஸௌ பாக்யத்தையும் தாங்கள் அளிக்க வேண்டும்.

ஆன்மிகமலர் மெயில் புக்

ஆன்மிகமலர்.காம்
www.aanmeegamalar.com
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
• ஆன்மிகம் • தத்துவம் • உடல்நலம் • பலன்கள்



# ஸ்ரீ ஸ்ரீ பாத ஸ்ரீ வல்லபர்

## ஸ்ரீ தத்த அவதாரங்கள் - 1

சப்த ரிஷிகளில் மிக ச்ரேஷ்டரான அத்ரி மகரிஷிக்கும் பதிவ்ரதா சிரோன்மணியான அனுஸூயா மாதாவிற்கு மும்மூர்த்திகளின் அம்சமாக பிறந்தவர் ஸ்ரீ தத்தாத்ரேயர்.

குரு பரம்பரை என்பது ஸ்ரீ தத்தாத்ரேயரிடம் இருந்துதான் ஆரம்பம்.

சூலம் ஏந்திய ருத்ர அவதாரி. ஸ்ரீ குரு சரித்திரம், ஸ்ரீ பாத ஸ்ரீ வல்லப சரிதம்ருதம் என்னும் மகா புராணம் இவரை பற்றி பல அறிய தகவல்களை நமக்கு அளிக்கிறது. அவ்வளவு எளிதாக யாராலும் இவ்விரண்டு சரிதங்களை பாராயணம் பண்ண முடியாது. அதிலும் சப்தாக பாராயணம் அதி ஸ்ரேஷ்டம். நாம் நினைத்த கோரிக்கைகள் அனைத்தும் உடனடியாக நிறைவேறும். மிகவும் ஆச்சாரமாக அனுஷ்டித்தல் அவசியம். நிரந்தர லட்சுமி மற்றும் குரு கடாக்ஷம் ஸ்ரீ குரு சரித்திரம், ஸ்ரீ பாத ஸ்ரீ வல்லப சரிதம்ருதம் பாராயணம் மூலம் கிடைக்கும். நமது இல்லத்தில் பூஜை அறையில் இவ்விரண்டு புத்தகங்கள் இருப்பது பரம ஐஸ்வர்யம்.

திருமூர்த்திகளின் அவதாரமான அவரே குருக்களுக்கு எல்லாம் குருவான சத்குரு ஆவார். இந்த பூமியில் குரு மற்றும் சிஷ்யர்களுக்கு இடையே எப்படிப்பட்ட உறவு இருக்க வேண்டும்,கலிகாலத்தில் கலியின் தாக்கத்தினல் விளையும் தீமையை எப்படி அழிக்க வேண்டும் போன்றவற்றை நடைமுறையில் எடுத்துக்காட்டவே தத்தாத்திரேயர் தாமே ஒரு குருவாக பல அவதாரங்களை எடுத்துக் காட்டி உள்ளார். தத்தாத்திரேயரே ஸ்ரீ பாத ஸ்ரீ வல்லபராகவும், ஸ்ரீ நரசிம்ம ஸரஸ்வதி ஸ்வாமிகளாகவும், ஸ்ரீ ஸமர்த்த ஸ்வாமிகளாகவும், ஸ்ரீ மானிக்பிரபு மற்றும் ஷிரடி சாயிபாபா போன்ற பல ரூபங்களில் தோன்றி முதல் குரு பரம்பரையை உருவாக்கினார்.

ஆதி குரு ஸ்ரீ தத்தாத்ரேயர் கலியுகத்தில் எடுத்த முதன்மை அவதாரம் ஸ்ரீ ஸ்ரீ பாத ஸ்ரீ வல்லபர். மகா தபஸ்வி யதிகளில் ஸ்ரேஷ்டர். அபரிமிதமான பூர்வ ஜென்ம புண்ணியத்தினால் மட்டுமே இவரை பற்றி நாம் சிறிதளவாவது அறிய முடியும். வெளி உலகத்திற்கு அதிகம் தெரியாமல் குப்தமாக மற்றும் சுக்ஷூம ரூபமாக அருளும் பரம குரு.

**அவதார நோக்கம்:**

ஓர் அமாவாசை தினத்தன்று அவர்கள் வீட்டில் சிராத்தம் (இறந்தவர்களுக்கு திதி கொடுப்பது) நடைபெற்றது. பிராமண முறைப்படி செய்ய வேண்டிய சடங்குகள் எல்லாம் வரிசையாக நடைபெற்றுக் கொண்டிருந்தன. திவசச் சமையல் தயாராக இருந்தது. பிராமணர்கள் உணவருந்த வேண்டியது தான் பாக்கி. அந்த சமயத்தில் ஒரு துறவி அவ்வீட்டு வாசலில் வந்து, பவதி பிட்சாந்தேஹி! என்று சொல்லிக்கொண்டு நின்றார்.

ஆசார முறைப்படி இறந்த முன்னோர்களுக்குத் திதி கொடுக்கும் நாளன்று வெளி ஆட்கள் யாருக்கும் உணவளிக்கக்கூடாது. பிட்சை அளிக்கக்கூடாது. மேலும் வந்திருக்கும் பிராமணர்கள் உணவருந்தி, காக்கைகளுக்கு அன்னமிட்ட பிறகு தான், வீட்டில் உள்ளவர்களே சாப்பிட முடியும். மிகுந்த சிரத்தையுடன், கூடுதல் கவனத்துடன் பிராமணர்கள் பொறுப்பாகச் செய்ய வேண்டிய சடங்கு இது. இவ்வளவும் சுமதி நன்றாக அறிந்தவள் தான். என்றாலும் வாயிலில் நின்ற துறவிக்கு உணவளிக்காமல் அவரைப் பசியுடன் திருப்பியனுப்ப அவள் விரும்பவில்லை. எனவே, வகுக்கப்பட்ட நியமங்களை மீறி அவள் பிராமணர்கள் சாப்பிடும் முன் பிட்சுவாக வந்தவருக்கு அன்னமிட்டாள்.

கணவனுக்கு அடங்கிய நிலையில் குலதர்மத்தை கடைப்பிடிக்க வேண்டிய கட்டாயம் இருந்தும் துணிவுடன் பசியறிந்து உணவு அளித்த சுமதியின் முன் பிட்சை பெறுபவராக, மும்மூர்த்திகளின் ஒருமித்த மகானாகிய ஸ்ரீ தத்தாத்ரேயர் நின்றார். அவளது தாய்மைப் பண்பைப் பாராட்டி. தாயே! உன் சேவையைக் கண்டு நான் மகிழ்ந்தேன். வேண்டும் வரத்தைக்கேள்! என்று கூறினார்.

அவள் அவரை வணங்கிப் பலவிதமாகத் துதித்தாள். பிறகு ஸ்வாமி! தாங்கள் என்னைத் தாயே! என்று அழைத்தீர்கள். அந்த வாக்கு பொய்க்கக்கூடாது. உம்மைப் போன்ற ஞானியை நான் மகனாகப் பெற வேண்டும். ஏனென்றால் எனக்குப் பிறக்கும் குழந்தைகள், பிறந்த சில காலத்திற்குள்ளாகவே இறந்து விடுகின்றன. பிழைத்து உயிர் வாழ்கின்ற குழந்தைகள் குருடாகவும், முடமாகவும் இருக்கின்றன! என்று கூறிக் கண்ணீர் விட்டாள்.

அவள் வேண்டுகோளை வந்திருந்த தத்தர் ஏற்பதாகக் கூறி அதில் ஒரு மாற்றத்தையும் கூறினார். அம்மா! உன் விருப்பப்படி எம்மைப் போன்ற ஒரு ஞானி மகனாகப் பிறப்பான். ஆனால் அவன் அநேக நாள் உன் வீட்டில் தங்க மாட்டான். பெரிய ஞானியாகி உன் துன்பங்களைப் போக்கி, உலகில் ஞான மார்க்கத்தைப் பரப்புவான்! என்று சொல்லி மறைந்தார்.

பக்தையான சுமதி நடந்தவற்றை அப்படியே தன் கணவரிடம் கூறினாள். இருவரும் மனம் மகிழ்ந்து, நெகிழ்ந்து இறைவனை வழிபட்டுப் போற்றித் துதித்தனர். பிறகு பக்தியுடன் ஸ்ரீ தத்தரின் அவதாரத்தை எதிர்பார்த்துக் காத்திருந்தனர்.

சுமதி தன்னுடைய கணவனின் அனுமதி இல்லாமல் சிரார்த்த (திதி) தினத்தில் பிட்சை அளித்துவிட்ட போதிலும், தோஷம் ஏதும் ஏற்படவில்லை. மாறாக எந்த சிரார்த்தம் செய்தாலும் முடிவில் ஏகோ விஷ்ணு! என்று சொல்லி அந்த விஷ்ணுவிற்கு அர்ப்பணம் செய்கின்றோமோ எந்த விஷ்ணுவிற்கே அவள் அன்னமிட்டதால், பித்ருக்கள் சுவர்க்கத்தை அடைந்து பிறவிப் பிணி தீர்த்தனர்.

எனவே, மதிய வேளையில் யார் பிட்சைக்கு வந்தாலும், ஒன்றும் இல்லை போ! என்று சொல்லாமல் நம் சக்திக்கு ஏற்றவாறு பிட்சை இட வேண்டும். அந்த நேரத்தில் வீட்டிற்கு யார் வந்தாலும் அவர்களுக்கு உணவிட்டு உபசரிக்க வேண்டும். தத்தர் எந்த ருபமாக வருவார் என்று சொல்ல முடியாது.

ஸ்ரீ தத்தர் அளித்த வாரத்தின் படி, கி.பி. 1320 ஆண்டு ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர் ப்ரம்மஸ்ரீ கண்டிகோட்டா அப்பலராஜ சர்மா அவர்களுக்கும் அகண்ட லக்ஷ்மி சௌபாக்யவதி சுமதி மஹாராணிக்கும் மூன்றாவது குழந்தையாக ஆந்திர மாநிலம் கிழக்கு கோதாவரி மாவட்டத்தில் உள்ள பிதாபுரம் என்னும் ஊரில் பிறந்தார். செவ்வாய் கிரஹத்தின் ஆதிக்கத்தில் சித்திரை நக்ஷத்திரத்தில் ஸ்ரீ கணேச சதுர்த்தி அன்று அவதரித்தார். எனவேதான் ஸ்ரீ கணேச சதுர்த்தி ஸ்ரீ ஸ்ரீ பாத வல்லபரின் ஜெயந்தியாக கொண்டாடப்படுகிறது. பிறந்த குழந்தையின் கால்களில் மீன் மற்றும் ஆமை மற்றும் சங்கு போன்ற வடிவ ரேகைகள் இருந்தன. அப்படிப்பட்ட ரேகைகள் சாதாரண மானிடர்களுக்கு இருக்காது. தப்பித்தவறி யாருக்காவது சங்கு ரேகை இருக்க முடியும். அதைக் கொண்டவர்கள் பெரும் வித்வான்களாக இருப்பார்கள்.

ஆனால் கூர்ம அவதாரத்தைக் குறிக்கும் ஆமை மற்றும் மச்சாவதாரத்தைக் குறிக்கும் மீன் போன்ற உருவ ரேகைகள் மானிடர்களுக்கு இருக்காது. அவை இரண்டும் பெரிய மகான்களாக உருவெடுக்க உள்ளவர்களுக்கும், தெய்வாம்சம் பொருந்தியவர்களுக்கு மட்டுமே இருக்கும். மேலும் அந்தக் குழந்தையின் ஜாதகத்தை ஆய்வு செய்த பண்டிதர்கள் அந்த குழந்தை நிச்சயமாக


ஆன்மிகமலர் மெயில் புக்

www.aanmeegamalar.com

தெய்வாம்சம் பொருந்தியது என்றும், பிற்காலத்தில் பெரும் ஞானியாக உருவெடுப்பார் என்றும், பல சீடர்களைக் கொண்டு அவர்களுக்கு தர்ம நெறிகளை போதிக்கும் ஆசானாக இருந்து பெருமை மிக்கவராகவும் விளங்குவார் என்று கூறினார்கள். அதைக் கேட்ட பெற்றோர்கள் பெரும் மகிழ்ச்சி அடைந்தார்கள். இப்படியாக நல்ல அம்சங்களோடு பிறந்த குழந்தைக்கு ஸ்ரீபாதா என்று பெயரிட்டார்கள்.

33 கோடி ருத்ர கணங்களின் அதிபதி ஸ்ரீ கணபதி. தன்னிலுள்ள கணபதி தத்துவத்தை ஒரு யோக வழியில் உலகிற்கு வெளிப்படுத்தவே ஸ்ரீ ஸ்ரீ பாத ஸ்ரீ வல்லபர் கணேச சதுர்த்தி அன்று பூமியில் அவதரித்தார். ஆகையால் எவரொருவர் ஸ்ரீ ஸ்ரீ பாத ஸ்ரீ வல்லபரை ஸ்மரணம் செய்து வழிபாடு செய்து பூஜை செய்கிறார்களோ அவருக்கு 33 கோடி ருத்ர கணங்களின் அருளும் கிடைக்கும்.

ஆகையால் சித்திரை நக்ஷத்திரத்தில் அவரை பூஜித்தால் அனைத்து கிரஹ தோஷங்களும் நீங்கிவிடும். சித்திரை நக்ஷத்திரத்தின் பொழுது அல்லது செவ்வாய் கிழமைகளில் ஸ்ரீ பாதர் செந்நிறத்தில் ஜொலிப்பர். அவர் அன்று அருணாச்சலேஸ்வரராக ஜொலிப்பர். ஆகையால் செவ்வாய்கிழமை சித்திரை நக்ஷத்திரம் அன்று பூஜை செய்வது மிக மிக விசேஷமாகும், கன்னியர்களுக்கு திருமண பாக்கியம் கிடைக்கும், பூத பிசாசுகளின் தொல்லை நீங்கும். ச்ராவண மாத முழு பௌர்ணமியன்று ஸ்ரீ வாசவி கன்யா எனக்கு ராக்கி அணிவித்த புண்ணிய தினம். அன்று பீடிகாபுரத்தில் இருப்பவர்களுக்கு சித்ர குப்தன் அதிக புண்ணியம் என எழுதுகிறார் என்று ஸ்ரீ பாத ஸ்ரீ வல்லப சரிதாம்ருதம் இயம்புகிறது.

வேதம், சாஸ்திரங்களில் அபார ஞானம், தேஜஸ், வீர்யம், ஸ்ரீ பாதருக்கு சிறு வயதிலே இருந்தது கண்டு அனைவரும் ஆச்சரியப்பட்டனர்.

இவருக்கு திருமணம் செய்துவைக்க பெற்றோர்கள் முடிவு எடுத்ததை அறிந்த ஸ்ரீ பாதர், ”அம்மா, என்னை தயவு செய்து தவறாக நினைக்காதே. நான் உனக்கு மகனாகப் பிறந்ததே உனக்கு நல்லதொரு மகன் வேண்டும் என்று நீ வேண்டியதினால்தான். இந்த ஜென்மத்தில் நான் மனித குல மேம்பாட்டுக்கு என்னை அர்பணித்துக் கொண்டுதான் உன் மூலம் வெளி வந்தேன். அதற்காக நான் உன்னைக் கை விட்டு விடுவேன் என்று தவறாக நினைக்காதே. மனித குலத்தில் நீங்களும் ஒன்றுதானே. நான் ஏற்கனவே யோக லஷ்மியை மணந்து கொண்டு விட்டவன் (அதாவது தான் தத்தாத்திரேயரின் அவதாரம் என்பதை மறைமுகமாக எடுத்துக் காட்டினார். தத்தாத்திரேயரின் மனைவியே லஷ்மி தேவியின் இன்னொரு அவதாரமான யோக லஷ்மி ஆவார்). ஆகவே எதற்கும் அஞ்சாமல் நான் விரும்பும் வாழ்கையை கைகொள்ள எனக்கு நீங்கள் அனுமதி தர வேண்டும். என் சகோதரர்களை கைவிட்டு சென்று விடுவேன் என்று எப்படி நீங்கள் நினைத்தீர்கள்?

என்னை நம்பியவர்களை நான் எப்படிக் கைவிடுவேன் என்று நினைக்கின்றீர்கள்? கவலை படவேண்டாம். அவர்களை பாதுகாப்பது என் பொறுப்பு”.

இப்படியாகக் கூறிய பின்னர் தனது இரண்டு சகோதரர்களையும் அருகில் வருமாறு சைகை காட்



டினார். என்ன அதிசயம் நடக்கிறது என்பது புரியாதது போல குருடராக இருந்தவரும் சைகையை புரிந்து கொண்டு அவர் அருகில் செல்ல முடமானவரும் அவர் அருகில் சாதாரணமாக நடந்து சென்றதும் அவர்கள் இருவரின் தலை மீதும் தனது கையை வைத்து ஸ்ரீ பாத வல்லபர் ஆசிர்வதிக்க, இரண்டு சகோதரர்களும் திடகார்த்தமான உடலுடன் உள்ள ஆண் மகன்களாக உருமாறினார்கள். இரு சகோதரர்களும் தமது சகோதரர் தங்களை விட வயதில் இளையவர் என்றாலும் கூட ஸ்ரீ பாத வல்லபரின் கால்களில் விழுந்து வணங்கினார்கள். அதைக் கண்ட பெற்றோர்கள் ஆனந்தம் அடைந்து அழுதார்கள்.

அங்கிருந்து கிளம்பி வடநாட்டிற்கு சென்றவர் விந்திய மலை, திரிவேணி சங்கம், காசி, கயா, ஹரித்துவார், ரிஷிகேஷ், பத்ரிநாத், கேதர்நாத்,







எஸ்.ரகுராமன்

என பல புனித இடங்களுக்கும் சென்று அங்கிருந்த நதிகளில் நீராடி, ஆலயங்களை தரிசித்துப் பின் தத்தாத்திரேயர் வசித்து வந்த இடமான சஹ்யாத்ரி மலை அடிவாரத்தை அடைந்தார். அங்கு தரிசனத்தை முடித்துக் கொண்டப் பின் அங்கிருந்துக் கிளம்பி கோகர்ணம் எனும் சென்றார். அது அவருக்கு முக்கியமான விஜயமாக அமைந்தது. வழி நெடுக அவருடைய தெய்வீக அருளை உணர்ந்து கொண்ட பல சாது, சன்யாச முனிவர்கள் அவரிடம் ஆசிகளைப் பெற்றார்கள். அதை அறிந்து கொள்ள முடிந்தவர்கள் அவரது மஹான் எனும் தேஜஸ்சைக் கண்டு அவருக்கு சிஷ்யர்கள் ஆயினர். அவர் வட நாடுகளுக்கு சென்று வந்தது முதல் அவரது சீடர்களினால் ஸ்ரீ பாதவல்லபா (வல்லபா என்றால் வலிமையானவர், திறமையானவர் என்று பொருள்) என்று அழைக்கப் படலானார்.

ஸ்ரீ பாத ஸ்ரீ வல்லபர் தான் பிரபஞ்சத்திலிருக் கும் ஸ்தாவர, ஜங்கம வஸ்துக்கள் அனைத்திற்கும் மூல காரணம். அவர் ஒரு ஆலமரம் போன்றவர். அவரது துணை, அம்ச/பின்ன அவதாரங்கள் அந்த மரத்தின் கிளைகள் போன்றவையாகும். ஆலமரத்தின் வேர்கள் கிளைகளிலிருந்து தலைகீழாக தோன்றினாலும் தாய் மரமே எல்லாவற் றிற்கும் அடிப்படையாகும். தேவர்கள் முதல் பூத பிசாசுகள் வரை உலகிலுள்ள அனைத்து உயிரி னங்களுக்கும் அவரே அடைக்கலம் கொடுப்பவர். புகலிடம் கொடுப்பவர். அனைத்து சக்திகளும் அவரிடமிருந்தே தோன்றி அவரையே தஞ்சம் புகுகின்றன.

அநேக ஜென்மங்களில் செய்த பாவங்கள் ஒழிந்த பிறகு புண்ணியங்கள் பலன் கொடுக்கத் துவங்கும் பொழுது தான் ஒருவருக்கு தத்தரிடம் பக்தி பிறக்கும். தத்தரிடம் பரிபூரண பக்தி ஏற்படும்பொழுது ஸ்ரீபாத ஸ்ரீ வல்லபர் தரிசனம், தொட்டு ஆசிர்வதித்தல், பேசுதல் இவற்றால் அருட் செல்வத்தை எந்த வயதிலும் எந்த நேரத்தில் வேண்டுமானாலும் பெறலாம்.

ஸ்ரீ ஸ்ரீபாதர் சத் புருஷர்களுக்கு எளிதாக கிடைக்ககூடிய தங்கச் சுரங்கம். பாவம் செய்பவர்களுக்கோ, தர்மத்தை மீரியவர்களுக்கோ அவர் ஒரு யமதர்மராஜா மாதிரி. ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீவல்லபரின் பெயரைச் சொன்னாலேயே, நாம் உறுதியாக அவரது அருளைப் பெறலாம். நாம் அனைத்து துன்பங்களிலிருந்தும் இழப்பிலிருந்தும் விடுதலை பெறலாம். சித்தர் மற்றும் யோகிகளுக்கு இவர் ஈஸ்வரன் அதனால் "யோகீஸ்வரன்" எனப்படுகிறார்.

ஸ்ரீ பாதரின் பக்தர்களுக்கு 'முடியாத காரியம்' என்று ஒன்று இல்லவே இல்லை. நெற்றியில் எழுதியுள்ளத் தலை எழுத்தை மாற்றி எழுதும் வலிமை வேறு எந்த தெய்வத்துக்கும் இல்லை. ஆனால் ஸ்ரீ தத்தாத்ரேயரின் அவதாரமான ஸ்ரீ ஸ்ரீபாதர், தன் பக்தனின் துன்பத்தைக் கண்டு மனம் இறங்கி பிரம்மாவை அவன் தலை எழுத்தை அழித்துவிட்டுப் புதிய தலையெழுத்தை எழுதுமாறு உத்தரவிடுவார்....

"இன்று என் பக்தன் இறக்க வேண்டியநாளாகும். நான் அவனது ஆயுளை மேலும் இருபது ஆண்டுகள் நீட்டித்துள்ளேன். இந்த முடிவை அவனுடைய பக்தியின் காரணமாக அளிக்கிறேன்." ஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீ வல்லபர்.

ஆந்திர மாநிலம் கிழக்கு கோதாவரி ஜில்லாவில் இயற்கை எழில் கொஞ்சும் பிட்டாபுரத்தில் உள்ளது குக்குடேஸ்வரர் திருக்கோவில். மகிமை வாய்ந்த 18 சக்தி பீடங்களுள் பத்தாவது பீடமாகவும் பாத கயா தலமாகவும் புகழ்பெற்ற பிட்டாபுரம் புராதன ஆலயங்களுக்குப் பெயர் பெற்ற நகரம் சக்தி யின் உடல் பாகத்தில் பிருஷ்ட பாகம் விழுந்த இடமாதலால் பீடிகாபுரம் என்று அழைக்கப்பட்டு பின்னர் மருவி பிட்டாபுரம் ஆனது. இந்த பிட்டாபுரத்தில்தான் இவரின் மூல மஹாசமஸ்தானம் உள்ளது.

அபார தீர்க்க தரிசி. ஸ்ரீ ராகவேந்திரர், ஸ்ரீ சமர்த்த ராம்தாஸ் சுவாமி, ஸ்ரீ இராமலிங்க அடிகள், ஸ்ரீ சதாசிவ ப்ரம்மேந்திரரின் அவதார ரஹஸ்யங்களை முன்பே கணித்து கூறியவர்.

மூன்று நாட்களுக்கு இடைவிடாது ஸ்ரீ பாத நாமத்தை ஜெபிப்பவருக்கும் த்யானம் செய்பவருக்கும் ஸ்ரீ பாதர் ஸ்தூல உடலுடன் எலும்பும் தோலுடன் தத்ரூபமாக தரிசனம் அளிப்பார். எப்படி ஸ்ரீ விநாய பெருமானை துதித்தால் சகல தேவதைகளை வணங்கின பலன் கிடைக்குமோ அப்படி ஸ்ரீ பாத வல்லபரை வணங்கினால் சகல குரு மூர்த்தங்களை வணங்கின பலன் கிடைக்கும்.

**ஸ்ரீ பாத ராஜம் சரணம் பிரபத்யே !**
**திகம்பரா ஸ்ரீ பாத ஸ்ரீ வல்லப திகம்பரா!**

(இந்த மந்திரத்தை எப்பொழுது வேண்டுமானாலும் ஜெபித்தால் எல்லா துக்கங்களும் பாபங்களும் அழிந்து போய்விடும்)

சித்த மங்கள ஸ்தோத்திர பாராயணம் செய்தால் இவரின் தரிசனம் கிடைக்கும்.

## ஸ்ரீ சித்த மங்கள ஸ்தோத்ரம் அபூர்வ ஸ்லோகம்

ஸ்ரீமத் அனந்த ஸ்ரீ விபூஷித அப்பல லக்ஷ்மி நரசிம்ம ராஜா!
ஜெய விஜயீ பவ, திக் விஜயீபவ, ஸ்ரீ மதக ண்ட ஸ்ரீ விஜயீபவ!........................................1

ஸ்ரீ வித் யாத ரி ராத சுரேகா ஸ்ரீ ராகீ ர ஸ்ரீ பாதா!
ஜெய விஜயீ பவ, திக் விஜயீபவ, ஸ்ரீ மதக ண்ட ஸ்ரீ விஜயீபவ!........................................2

மாதா சுமதி வாத்ஸல்யாம்ருத பரிபோஷித ஜெய ஸ்ரீபாதா!
ஜெய விஜயீ பவ, திக் விஜயீபவ, ஸ்ரீ மதக ண்ட ஸ்ரீ விஜயீபவ!........................................3

சத்ய ரிஷீஸ்வர துகிதானந்தன பாப்பனார்ய சுத ஸ்ரீ சரண!
ஜெய விஜயீ பவ, திக் விஜயீபவ, ஸ்ரீ மதக ண்ட ஸ்ரீ விஜயீபவ.........................................4

சவித்ருகாட க சயன புண்யப ல பாரத்வாஜ ரிஷிகோத்ர சம்பவா!
ஜெய விஜயீ பவ, திக் விஜயீபவ, ஸ்ரீ மதக ண்ட ஸ்ரீ விஜயீபவ!........................................5

தோசௌ பாத்தி தேவ் லக்ஷ்மிகண சம்க்யா போதித ஸ்ரீ சரணா!
ஜெய விஜயீ பவ, திக் விஜயீபவ, ஸ்ரீ மதக ண்ட ஸ்ரீ விஜயீபவ!........................................6

புண்ய ரூபிணி ராஜமாம்பா சுத கர்ப்புண்ய பல சஞ்ஜாத!
ஜெய விஜயீ பவ, திக் விஜயீபவ, ஸ்ரீ மதக ண்ட ஸ்ரீ விஜயீபவ!........................................7

சுமதீ நந்தன நரஹரி நந்தன தத்த தேவ பிரபு ஸ்ரீ பாதா!
ஜெய விஜயீ பவ, திக் விஜயீபவ, ஸ்ரீ மதக ண்ட ஸ்ரீ விஜயீபவ!........................................8

பீதிகாபுர நித்யவிஹாரா மதுமதி தத்தா மங்களரூபா!"
ஜெய விஜயீ பவ, திக் விஜயீபவ, ஸ்ரீ மதக ண்ட ஸ்ரீ விஜயீபவ!........................................9

ஸ்ரீ பாத ராஜம் சரணம் பிரபத்யே!

## சித்த மங்கள ஸ்தோத்திர பாராயண பலன்



இந்த ஸ்தோத்திரத்தை பக்தி சிரத்தையுடன் ஜெபித்து வந்தால்

❖ அனஹா லக்ஷ்மி விரதம் இருந்து ஆயிரம் சிறந்த பிராமணர்களுக்கு போஜனம் அளிப்பதன் பலன் கிடைக்கும்.

❖ அந்த பலனானது 45 நாட்கள் மண்டல விரதம் ஒரு வேளை மட்டும்உணவு உண்ணுதல், கடுமையான உடல் உழைப்பால் பணம் சம்பாதித்து அந்த பணத் தைக் கொண்டு ஆயிரம் சிறந்த பிராமணர்களுக்கு போஜனம் அளிப்பதற்கு சமம்.

❖ இதை பாராயணம் செய்வதால் சித்த புருஷர்கள் தரிசனமும், ஸ்பரிசமும் கிடைக்கப் பெறுவார்கள்.

❖ மனத்திலுள்ள அனைத்து கோரிக்கைகளும் நிறைவேறும்.

❖ ஸ்ரீ தத்தாத்ரேயரை தூய மனதுடனும், பக்தி சிரத்தையுடனும் மனம்,சொல்,செயலால் பூஜிப்பவர்களுக்கு ஸ்ரீ பாத ஸ்ரீ வல்லபரின் கிருபை பாராயணம் செய்த க்ஷனத்திலேயே கிட்டும் ❖ இந்த ஸ்தோத்திரம் பாரா யணம் செய்யப்படும் இடத்திற்கு மூலை முடுக்குகளிலும் கண் காணாத இடத்திலிருக்கும் சித்த புருஷர் களும் சூக்ஷ்ம ரூபத்தில் வந்து சேர்வார்கள்.

திருக்கோயில் அமைவிடம்:
ஸ்ரீ பாத ஸ்ரீ வல்லப மஹாஸம்ஸ்தானம் வேணுகோபால் சுவாமி கோயில் தெரு, பிடாபுரம் 533450, கிழக்கு கோதாவரி (மாவட்டம்), ஆந்திரா
08869250300/2523000

– எஸ்.ரகுராமன், தொடர்பு எண்: 9940349593



# நீங்களும் விழித்திருங்கள், மற்றவர்களையும் விழிக்கச் செய்யுங்கள்



இளைஞர்களே! பெருஞ்செயல்களை செய்து முடிப்பதில் எப்போதும் முன்னேறிச் செல் லுங்கள். ஏழைகளிடமும், சமுதாயத்தில் ஒடுக்கப் பட்டவர்களிடமும் இரக்கம் காட்டுங்கள். நமக்கு மரணமே வாய்த்தாலும்கூட அவர்களுக்கு இரக்கம் காட்டுவது நமது லட்சியம் ஆகும்.

என்னுடைய லட்சியத்தை உண்மையில் சில சொற்களில் சொல்லி முடித்துவிடலாம். அதாவது, மக்களுக்கு அவர்களுடைய தெய்வீகத் தன்மையை எடுத்துச் சொல்வதும், வாழ்க்கையின் ஒவ்வொரு இயக்கத்திலும் அதை எப்படி வெளிப்படுத்திக் காட்டுவது என்பதை எடுத்துச் சொல்வதும்தான் அது.

எழுந்திருங்கள். விழித்திருங்கள். நீங்களும் விழித்திருங்கள், மற்றவர்களையும் விழிக்கச் செய்யுங்கள். உங்களுடைய இந்த உலக வாழ்க்கை முடிவடைவதற்கு முன் னால், மனிதப்பிறவியினால் பெறுவதற்கரிய பெரிய நன்மையை அடையுங்கள். லட்சியத்தை அடையும் வரையில் நில்லாமல் முன்னேறிச் செல்லுங்கள்.

உயர்ந்த லட்சியம் கொண்ட மனிதன் ஒருவன் ஆயிரம் தவறுகள் செய்தால், லட்சியம் ஒன்றுமில்லாமல் வாழ்பவன் ஐம்பதாயிரம் தவறுகள் செய்வான் என்று நான் உறுதியாக சொல்வேன்.

மக்கள் உன்னை புகழ்ந்தாலும் சரி, இகழ்ந் தாலும் சரி, கடவுள் உனக்கு அருள் புரியட்டும், அல்லது புரியாமல் போகட்டும். உன் உடல் இன்றைக்கே வீழ்ந்து போகட்டும். ஆனால் நீ, உண்மை என்னும் பாதையிலிருந்து மட்டும் அணுவளவேனும் பிறழ்ந்து செல்லாமல் இருப் பதில் கவனமாக இரு. மனிதன் எந்த அளவுக்கு உயர்ந்தவன் ஆகிறானோ, அந்த அளவுக்கு அவன் கடுமையான சோதனைகளை கடந்தாக வேண்டும்

# திசை அறிந்து குளித்தால் பல பிரச்சனை தீரும்

குளிப்பதற்குக் கூட திசையா?... இதெல்லாம் ஏமாற்று வேலை, மூடப்பழக்கம் என்று நீங்கள் நினைக்கலாம். ஆனால் நம்முடைய முன்னோர்கள் எதையுமே காரணம் இல்லாமல் சொல்லவில்லை.

அவர்கள் செய்த ஒவ்வொரு செயல்களுக்குப் பின்னும் பல ஆயிரம் அர்த்தங்கள் இருக்கின்றன.

அந்த வகையில், குளிப்பதற்குக்கூட எப்போது குளிக்க வேண்டும்.

எந்த திசையில் நின்று குறிக்க வேண்டும் என்று வரையறுத்து வைத்திருக்கிறார்கள்.

குளிக்கும் முறைகளில் உள்ள அபூர்வ ரகசியங்கள்.

குளிக்கும் போது வடக்கு அல்லது கிழக்கு திசை நோக்கி நின்று குளிக்கவேண்டும். இவை இரண்டும் குளிப்பதற்கான உத்தம திசைகளாகும்.

கர்மம் செய்தபின்னும், மயானத்திற்கு சென்று வந்தால் மட்டும் தெற்கு நோக்கி நின்று குளிக்கலாம். மேற்கு திசை நோக்கி நின்று குளித்தால் உடல்வலி வரும்.

தினமும் கங்கா ஸ்நானம் செய்யமுடியும்.

குளிக்கும் முன் ஒரு குவளை தண்ணீரில் மோதிரவிரலால் ஓம் என்று த்யானம் செய்து எழுதுங்கள். அந்தநீர் அப்போது முதல் கங்கை நீராக மாறிவிடும்.

இந்த உடலுக்குள் நீங்களே வந்திருந்து, இதை உங்களுக்கு செய்யும் அபிஷேகமாக ஏற்றுக்கொள்ளுங்கள் என்று இறைவனிடம் வேண்டிக்கொண்டு குளித்தால், உள்பூசையின் அங்கமாக இறைவனுக்கு அபிஷேகமும் ஆகிவிடும்.

அக்னி எப்போதும் மேல்நோக்கியே பயணிக்கும். உடலுக்குள் இருக்கும் அக்னி கீழிருந்து மேல் ஏறுவதுதான் சரி. தண்ணீரை கால் முதல் மேல் நோக்கி நனைத்து வந்து கடைசியில் தலையில் ஊற்றிக் கொள்ளவேண்டும்.

நமது மண்டை ஓடுக்கு எப்படிப்பட்ட அக்னியின் வேகத்தையும் தாங்குகிற சக்தி உண்டு. காலிலிருந்து பரவும் குளிரிச்சி மேல் நோக்கி பயணிக்கும் போது உள் அக்னியானது தலையை நோக்கி பயணிக்கும். அதுவே சரியான முறை.

தலை முதல் கால் வரை உள்ள பின் பாகத்தை “பிரஷ்டம்” என்பர்.

அதில் நம் முதுகு பாகம் தான் மிகப்பெரியது. அங்கு தான் அக்னியின் வீச்சம் கூடுதல் வேகமாக பரவும். ஆதலால், குளித்து முடித்தவுடன், முதலில் முதுகு பாகத்தைதான் துவட்ட வேண்டும்.

அதில் ஒரு நன்மையும் உண்டு ஆற்றில் குளிக்கும் போது முதுகில் ஏதாவது அட்டைபூச்சிகள் இருந்தால் கூட தெரியாது ஆகையால் தான் முதலில் முதுகைத் துடைக்க சொன்னார்கள்.

டவலை குளிக்கும் நீரிலே நனைத்து பிழிந்து துவட்டுவது தான் உத்தமம். ஆனால் நாம் அனைவரும் ஈரம் படாத துண்டைத்தான் உபயோகிக்கிறோம். உலர்ந்த துணியானது உள்சூட்டை வேகமாக பரவச்செய்து பலவித உள் நோய்களை உருவாக்கும்.

பிறருடன் வாய்திறந்து பேசாமல் செய்கின்ற மூன்று வேலைகளில் ஒன்று, குளிக்கும் நேரம்.

ஆற்றில் குளிப்பவர்கள் ஒடி சென்று அதில் குதிக்காமல், கரையில் நின்று, சிறிது நீரை எடுத்து தலையில் தெளித்தபின், நீர் கலங்காமல், ஒரு இலை நீரில் விழுகிற வேகத்தில் மெதுவாக இறங்கி சென்று குளிக்கவேண்டும்.

நீரில் காரி உமிழ்வதோ, துப்புவதோ கூடாது. நீரின்றி ஒரு உயிரும் இல்லை. நீரை விரயம் செய்ய கடன் அதிகரிக்கும்.

கடல் நீர் ஸ்நானம் திருஷ்டி தோஷங்களையும், சகல் தோஷங்களையும் அறுக்கும். வெள்ளியன்று கடல் நீரில் குளிப்பது நல்லது அல்ல.

“கோவில்கள் இல்லாத ஊரிலும் ஆறுகள் இல்லாத ஊர்களிலும் குடி இருக்க வேண்டாம்” என்பார்கள் பெரியோர்கள். ஏன் தெரியுமா வெளியே சுத்த படுத்த ஆறுகள், உள்ளே சுத்தம் படுத்த கோயில்கள். இதை சரியாக பயன் படுத்த கூடிய மாநிலத்திலே கேரளா தான் முதலிடம் ஆகையால் தான் கேரளாவில் இதனை அதிகமாக கடை பிடித்து கொண்டு இருக்கிறார்கள்.அதனால் தான் அவர்கள் முகம் பளிச்சென்று இருக்கிறது.

காலையில் எழுந்ததும் சிவ சக்ரத்தை மன தில் நினையுங்கள்.

பல் தேய்க்கும் போது ஆள் காட்டி விரல் உபயோகிக்காதீர்கள். நடு விரலில்தான் பல் தேய்க்க வேண்டும்.

குளித்த முடித்த பின்பு ஓம் ஶ்ரீ கோமதி சங்கர நாராயணா என்று மூன்று முறை கூறுங் கள். குளித்தபின்பு 20 நிமிடம் களித்து தான் உணவு உண்ணுங்கள்.

வாரம் இரண்டு முறை எண்ணை ஸ்நானம் செய்யுங்கள். ஆண்கள் புதன், சனி; பெண்கள் செவ்வாய், வெள்ளி.

வருடம் ஒருமுறையேனும் கண்டிப்பாக கடல் குளியல், குலதெய்வ பூசை, வழிபாடு செய்யவேண்டும்.

மு.கிருஷ்ண மோகன்
ஶ்ரீ கால பைரவி ஜோதிட நிலையம்
போன்: 8526223399





# விஷ்ணு சஹஸ்ர நாமத்தின் மகிமை

## கருடனுக்கு உணர்த்திய சிவபெருமான்



திரேதாயுகத்தில் மகாவிஷ்ணு ராமாவதாரம் எடுத்தபோது, போர்முனையில் ராவணனின் மகன் இந்திரஜித், இராமபிரானை எதிர்கொண்டான். அவனது எந்த மந்திர மாய்மாலங்களும் ஸ்ரீராமனிடம் பலிக்காமல் போகவே இறுதியில் நாகாஸ்திரத்தை ஏவினான். பரம்பொருளேயானாலும் ஸ்ரீமன் நாராயணன் மானிட அவதாரம் அல்லவா எடுத்திருக்கிறார். எனவே நாகாஸ்திரத்தால் கட்டுண்டு மூர்ச்சையாகி வீழ்ந்துவிட்டார். கூடவே லக்ஷ்மணனும்.

இதை நாரத மகரிஷி பார்த்து பதறிப்போய், வைகுண்டம் போய் கருடனிடம், "இராமபிரானை இந்திரஜித்தின் நாகபாஸத்திலிருந்து விடுவிக்க உன்னால் மட்டுமே முடியும். நீ உடனே சென்று இராமபிரானை காப்பாற்று" என்கிறார்.

கருட பகவான் வந்து தன் சிறகுகளால் வீசி அவர்களை மூர்ச்சையிலிருந்து தெளிய வைத்தார். பரமனையே காப்பாற்றியதால் கருடனுக்கு கர்வம் ஏற்பட்டது.

"என்ன நாரதரே இராமர் பரம்பொருள் அவரே எல்லாம் என்று கூறுகிறார்கள். ஆனால் நான் இல்லாவிட்டால் இராமரை யார் காப்பாற்றியிருப்பார்கள்?" என்றார்.

கருடனுக்கு ஏற்பட்டுள்ள கர்வத்தை புரிந்துகொண்ட நாரதர், இந்த சந்தேகத்தை சத்தியலோகம் சென்று பிரம்ம தேவரை கேட்கும்படி ஆலோசனை கூறினார். உடனே சத்தியலோகம் சென்ற கருடன் அங்கு பிரம்மதேவரிடம் கேட்க, பிரம்மதேவரோ "நான் சதாசர்வ காலமும் தவத்தில் இருப்பவன். எனக்கு எப்படி அது பற்றி தெரியும். ஒருவேளை சிவபெருமானிடம் கேட்டுப்பார். எனக்கு தெரிந்து அவர் ஒரு சிறந்த ராம பக்தர். உன் கேள்விக்கு பதில் கிடைக்கலாம்!" என்றார்.

உடனே கருடன் கயிலாயம் சென்றான். அங்கு சிவபெருமானை பார்க்க, தேவாதி தேவர்களும் ரிஷிகளும் காத்திருக்க, சிவபெருமான் தரிசனத்திற்கு வர தாமதமானது.

கைலாயத்தில் ஒரு நொடி என்பதன் கணக்கே வேறு. சில நொடிகள் கருடன் காத்திருக்க அதற்குள் பல யுகங்கள் முடிந்திருந்தன.

கருடன் இறுதியில் நந்தியிடம் கெஞ்சினார். "நந்தி பகவானே, ஒரு பெரும் சந்தேகத்தை பரமேஸ்வரனிடம் கேட்க வந்திருக்கிறேன். கொஞ்சம் சீக்கிரம் தரிசனம் தரச் சொல்லுங்களேன். நான் மட்டுமல்ல இங்கே முப்பத்து முக்கோடி தேவர்களும் அவர் தரிசனதிற்காக காத்திருக்கிறார்கள்" என்று கூற, "சுவாமி பூஜையில் இருக்கிறார். அது முடிந்ததும் வருவார்!" என்று நந்தி கூற கருடன் திடுக்கிட்டார்.

என்னது சிவபெருமான் பூஜையில் இருக்கிறாரா? முப்பத்துமுக்கோடி தேவர்களும் இங்கே அவருக்காக காத்திருக்க அவர் யாரை பூஜித்துக் கொண்டிருக்கிறார்? என்ற சந்தேகம் ஏற்பட்டது கருடனுக்கு.

அடுத்த கணம் அங்கே பிரத்யட்சமான சிவபெருமான், "கருடா நான் ஸ்ரீ ராமச்சந்திர மூர்த்தியை பூஜித்துக் கொண்டிருந்தபோது அவசரமாக அழைத்தது ஏனோ?"

கருடனுக்கு ஏற்பட்ட அதிர்ச்சிக்கு அளவேயில்லை. "சுவாமி இங்கே முப்பத்து முக்கோடி தேவர்களும் யுகயுகமாக தங்கள் தரிசனத்திற்கு காத்திருக்க, தாங்களோ ராமனை பூஜித்ததாக சொல்கிறீர்கள். நானோ அவரது மகத்துவம் உணராதபாவியாகிவிட்டேன். என்கர்வம்இத்தோடு ஒழிந்தது. இராமபிரானை நாகபாசத்திலிருந்து விடுவித்ததால் தலைக்கனத்தோடு திரிந்தேன். ஸ்ரீராமச்சந்திர மூர்த்தி மீது எனக்கு மாறாத பக்தி ஏற்பட என்ன செய்யவேண்டும்? அதற்கு அருள் செய்யுங்கள்" என்று கேட்டுக்கொள்ள, பரமேஸ்வரன், மெலிதாக புன்னகத்தார்.

ஒரு பறவைக்கு மற்றொரு பறவையின் மூலமே ஞானத்தை புகட்டவேண்டுமே என்று திருவுள்ளம் கொண்ட கங்காதரன், "கருடா, அதை என்னால் விளக்க இயலாது. அதற்கு சாதுக்களின் சத்சங்கம் வேண்டும். நீ நேராக கயிலையின் வடக்கே உள்ள நீலாச்சலத்திற்கு செல். அங்கு காகபுசுண்டி ஹரியின் பெருமைகளை இதர ஜீவராசிகளுக்கு கூறிக்கொண்டிருப்பார். அவர் உனக்கு ராமபிரானின் மகத்துவத்தை விளக்குவார்" என்று கூறி மறைந்தார்.

கருடனும் நீலாச்சலத்திற்கு சென்று காகபுசுண்டியை வணங்கி, இராமபிரானின் பெருமைகளை கூறுமாறு கேட்டுக்கொள்ள, அவரும் இராமபிரானின் பெருமைகளை விளக்கி, அனைத்தும் இராமபிரான் உருவாக்கிய மாயையே என்று விளக்கி கூறினார்.

"சுவாமி இராமபிரானை விட மகத்துவம் மிக்கவர் அண்ட சராசரத்தில் எதுவுமில்லை என்பதை புரிந்துகொண்டேன். நன்றி!"

"இல்லை கருடா இராமபிரானை விட மகத்துவம் மிக்கது ஒன்று இருக்கிறது."

"என்ன இராமபிரானைவிட மகத்துவம் மிக்கது இருக்கிறதா?" கருடன் ஆச்சரியத்திலும் குழுப்பத்திலும் மூழ்க, "இராமநாமமே அது. இராமனைவிட அவன் நாமத்திற்கு மகத்துவம் அதிகம்!" என்றார் காகபுசுண்டி.

கருடனும் தெளிவுபெற்று அது முதல் இராமபக்தியில் சிறந்து விளங்கினார்.

**ஸ்ரீ ராமராம ராமேதி ரமே ராமே
மனோரமே
சஹஸ்ர நாம தஸ்துல்யம் ராம நாம
வரானனே**

– விஷ்ணு சஹஸ்ர நாமம்

விஷ்ணு சஹஸ்ர நாமத்தில் பரமேஸ்வரன் பார்வதியிடம் கூறிய இந்த வரிகளின் அர்த்தம் தெரியுமா? ராம ராம ராம என்று ஒரு முறை கூறினாலே மகாவிஷ்ணுவின் சஹஸ்ர நாமத்தையும் சொன்ன பலன் கிடைக்கும் என்பது தான்.


ஆன்மிகமலர்
மெயில் புக்
16-31 அக்டோபர் 2020 85
www.aanmeegamalar.com

# ஸ்ரீ வேங்கடேச அவதாரம்

ஸ்ரீமன் நாராயணன் எடுத்த அவதாரங்களிலேயே மிகவும் பரம பவித்ரமான அவதாரமாக கருதப்படுவது ஸ்ரீ வேங்கடேச அவதாரம்தான். ஸ்ரீ ராமாவதாரத்திற்கு பிறகு முழு மனித அவதாரம்தான் ஸ்ரீ வேங்கடேச அவதாரம். ஏனென்றால் லோகக்ஷேமத்திற்காக கலியின் பிடியிலிருந்து மக்களை காப்பாற்றி பகவத் சிந்தனையில் நிலைத்திருக்க அவர் குடி கொண்டுள்ள இடம் ஆந்திரா மாவட்டத்தில் உள்ள திருப்பதி. கலியுகத்தின் கண் கண்ட தெய்வம் திருமலைவாசன் ஒருவன் தான்.

பாரதத்தில் உள்ள அஷ்ட புண்ணிய ஸ்வயம்வக்த க்ஷேத்ரங்களில் திருப்பதியும் ஒன்று.

புரந்தரதாசர் பூலோக வைகுண்டம் என்று "வேங்கடாசல நிலயம் வைகுண்ட புரவாசம்" என்று திருப்பதியை புகழ்கிறார்.

நமது புராணத்தில் எத்துணை இறைவன் இருப்பினும் ஒவ்வொரு இல்லத்திலும் வழி வழியாக குலதெய்வம் என்று ஒன்று இருக்கும். பெரும்பாலான குடும்பத்திற்கு திருப்பதி ஏழுமலையான்தான் குலதெய்வமாக இருப்பார். இவ்வளவு ஏன் குலதெய்வம் அறியாதவர்கள் ஸ்ரீ வேங்கடாசலபதியை குலதெய்வமாக வரிப்பர். வேறு எந்த இறைவனுக்கும் இல்லாதே ஒரே தனிச்சிறப்பு இவருக்கு மட்டும்தான்.

"ஸ்ரீ பத்மநாப புருஷோத்தம வாஸுதேவ
வைகுண்ட மாதவ ஜநார்த்தன சக்ரபாணே!
ஸ்ரீ வத்ஸ சிந்ஹ சரணாகத பாரிஜாத
ஸ்ரீ வேங்கடாசலபதே தவ ஸுப்ரபாதம்!!"

திருப்பதி சென்று வந்தால் திருப்பம் என்னும் வழக்கம் உண்டு. எப்பேர்ப்பட்ட நெருக்கடி இருப்பினும், பிரச்னைகளிருப்பினும் ஒருமுறை திருப்பதி சென்று வந்தால் நிச்சயம் ஒருவித மனநிறைவு மற்றும் அனைத்து வேண்டுதல்களும் உடனே நிறை வேறும். ஸ்ரீ வேங்கடவனின் ஆகர்ஷ சக்தி வேறு எந்த அர்ச்சாவதார மூர்த்திக்கும் இந்த கலியுகத்தில் இல்லை.

விநா வேங்கடேசம் ந நாதோ ந நாத
சதா வேங்கடேசம் ஸ்மராமி ஸ்மராமி
ஹரே வேங்கடேச ப்ரசீத ப்ரசீத
ப்ரியம் வேங்கடேச ப்ரயச்ச ப்ரயச்ச !!





வ்யாஸர் அருளிய பதினெட்டு புராணங்களில் 12 புராணங்கள் ஸ்ரீநிவாஸனின் மகிமைகளை சொல்லுகின்றன.

ஒவ்வொரு யுகத்திலும் ஒவ்வொரு திருநாமங்களினால் அழைக்கப்படுகிறது. கிருதயுகத்தில் வ்ருஷபாசலம், த்ரேதாயுகத்தில் அஞ்ஜனாசலம், துவாபரயுகத்தில் சேஷாசலம், கலியுகத்தில் வேங்கடாசலம் எனவும் அழைக்கப்படுகிறது. இது தவிர கனகாசலம், சிம்ஹாசலம், ஆனந்தகிரி, நாராயணாத்ரி, வேங்கடாத்ரி என்று அநேக நாமங்களில் திருப்பதி அழைக்கப்படுகிறது.

வராஹ அவதாரம் முடிந்த பின் ஸ்ரீமன் நாராயணன் திருமலையை தன்னுடைய இருப்பிடமாக தேர்ந்தெடுத்து வசித்து வந்தார். ஆதியில் வராஹர் தங்கியதால் "ஆதி வராஹ க்ஷேத்திரம்" என்றும் அழைக்கப்படும். நரசிம்ம மூர்த்தியும் தனது அவதார காலம் முடிந்தவுடன் ஏகாந்தமாக தங்கியதும் திருமலைதான். ஆதி வராஹர் தான் முதன் முதலில் ஸ்ரீனிவாச பெருமாளுக்கு தங்க இடம் கொடுத்தவர். அதன் நிமித்தமாய் நாம் இன்றும் முதலில் ஆதி வராஹரை தரிசித்துவிட்டு பிறகு பெருமாளை சேவிக்கின்றோம்.

ப்ரம்மா, அகஸ்தியர், சரஸ்வதி ஆகிய தேவதா மூர்த்திகள் வணங்கி வழிப்பட்ட ஸ்தலம் திருப்பதி. அகத்தியர் சித்தி அடைந்த இடம் திருப்பதி என்றும் கூறுவர்.

திருப்பதி மலை முழுவதும் சாளக்ராமம்தான். ஆதலால்தான் விசிஷ்டாத்வைதி ஆச்சார்யரான ஸ்ரீ ராமானுஜரும், த்வைத ஆச்சார்யரான ஸ்ரீ வாதிராஜ ஸ்வாமிகளும் திருப்பதி வந்த பொழுது பாதத்தால் நடக்காமல் முட்டியால் நடந்து ஸ்ரீ ஏழுமலையானை தரிசித்தனர். இவரது பக்தியை மெச்சி ஸ்ரீனிவாசன் தன்னுடைய விக்கிரஹத்தை ஸ்ரீ வாதிராஜ ஸ்வாமிகளிடம் தந்ததாகவும் இன்றும் அவ்விக்கிரஹம் ஸ்ரீ வாதிராஜர் ஜீவ ப்ருந்தா வனமாகிய சோதே மடத்தில் இன்றும் உள்ளது.

ஆதிசேஷனுக்கு ஆயிரம் தலைகள் இருப்பினும் அவரின் பிரதான ஏழு தலைகளே ஏழு மலைகளாக திகழ்கின்றன. ஸ்ரீ வேதவ்யாஸர் திருப்பதியில் 66 கோடி தீர்த்தங்கள் உள்ளது எனவும் 1008 தீர்த்தங்கள் விசேஷமானவை என்றும் ("ஸத் தர்ம ரதி தான்யதி") குறிப்பாக ஏழு தீர்த்தங்கள் முக்தியாகிய மோக்ஷத்தை அளிக்கும் என்றும் அவையாவன: சுவாமி புஷ்கரணி, ஆகாச கங்கை, பாபவினாசினி, தும்புரு தீர்த்தம், பாண்டுதீர்த்தம், குமார தாரிகா மற்றும் க்ருஷ்ண தீர்த்தம்.

வேறு எந்த திருக்கோயிலுக்கும் இல்லாத ஒரு தனிச்சிறப்பு திருப்பதி பெருமாளுக்கு உண்டு. அது என்னவென்றால் மூன்று மதாசார்யர்களான ஸ்ரீ ஆதிசங்கரர் (அத்வைதம்), ஸ்ரீ ராமானுஜர் (விசிஷ்டாத்துவைதம்), ஸ்ரீ வ்யாசராஜ தீர்த்தர் (மாத்வம்) வழிபட்ட ஒரே கோயில் திருப்பதி மட்டுமே.

ஸ்ரீ ஆதிசங்கர பகவத்பாதர் ஸ்வர்ணாகர்ஷண எந்திரத்தை ஸ்ரீ வேங்கடவனின் பாதத்தின் கீழ் ப்ரதிஷ்டாபனம் செய்ததால்தான் இன்று வரை பணம் கொட்டோ கொட்டு என்று கொட்டுகிறது.

ஸ்ரீ ராமாநுஜாசார்யார்

ஸ்ரீ வேங்கடவனிடம் நித்யம் உரையாடும்

www.aanmeegamalar.com





www.aanmeegamalar.com

பெரும்பேறு பெற்றவர். திருமலையின் நித்ய பூஜா அனுஷ்டானங்களை வகுத்தவர். அவரின் மனதிற்கினிய சீடனாகிய அனந்தாழ்வார் தனது குருவான ஸ்ரீ ராமானுஜருக்கு நித்ய கைங்கர்யம் செய்த புனித தலம் திருப்பதி. அவர் பயன்படுத்திய கடப்பாறையை இன்றும் நாம் கோயில் நுழைவாயிலில் தரிசிக்கலாம். ஸ்ரீ ராகவேந்திரர் தனது முற்பிறவியில் ஸ்ரீ வ்யாஸராய தீர்த்தராக அவதாரம் எடுத்த பொழுது திருப்பதியில் சுமார் 12 ஆண்டுகள் பெருமாளுக்கு பூஜை செய்யும் பெரும் பாக்கியம் பெற்றார். அதன் பயனாய் திம்மண்ண பட்டர் கோபிகாம்பாள் தம்பதிக்கு ஸ்ரீ வேங்கடேசனின் அருளால் கலியுகத்தில் ஸ்ரீ ராகவேந்திர ஸ்வாமிகளாக திரு அவதாரம் புரிந்தார். அதன் காரணமாய் இப்புனித தம்பதியர் அவருக்கு ஸ்ரீ வேங்கடநாதன் என்று நாமம் சூட்டினர்.

"தேவெரெந்தரெ திருப்பதி திம்மப்பனு...
குருகளெந்தரெ மந்த்ராலய ராகப்பனு..."

(எப்படி குரு என்றால் ஸ்ரீ ராகவேந்திர ஸ்வாமியை குறிக்குமோ அதேபோல் தெய்வம் என்றாலே நமக்கு உடனே நினைவிற்கு வருபவர் ஸ்ரீ வெங்கடாசலபதி.)

வகுளாதேவி ஸ்ரீனிவாசன் வளர்ப்பு தாய். இந்த வகுளாதேவிதான் முன் ஜென்மத்தில் யசோதையாக இருந்து ஸ்ரீ கிருஷ்ணனை வளர்த்தவள். யசோதையாக இருந்த பொழுது கிருஷ்ணரின் திருமணத்தை நடத்திவைக்கும் பாக்கியம் இல்லாததனால் அடுத்த பிறவியில் வகுளாதேவியாக அவதரித்து கிருஷ்ணரின் மறு அவதாரமான ஸ்ரீனிவாசனுக்கு திருமணம் நடத்திவைத்த பெரும் பாக்கியம் பெற்றவள்.

பிறகு குபேரனிடம் ப்ரம்மா, சிவன், அஸ்வத்த வ்ருக்ஷம் சாக்ஷியாக கடன் வாங்கி பத்மாவதியுடன் திருமணம் நடத்தி வைத்தார். இந்த பத்மாவதிதான் முன் ஜென்மத்தில் வேதவதியாக பிறந்து ஸ்ரீ ராமரை திருமண புரிய ஆவல் கொண்டு, அது முடியாமல் போக, அடுத்த பிறவியில் பத்மாவதி என்ற பெயரில் ஆகாச ராஜனுக்கு மகளாக பிறந்து அதன் பிறகுதான் திருப்பதி ஏழுமலையான் சீனிவாசனாக பத்மாவதி தாயாரை மணம் புரிந்து ராமாவதாரத்தில் தான் கொடுத்த வாக்கைக் கலியுகத்தில் காப்பாற்றினார்.

அன்னமய்யா எனும் பாகவதோத்தமர் திருப்பதி பெருமாளின் மீது 30,000க்கும் மேற்பட்ட கீர்த்தனைகளை பாடியுள்ளார். இது "அன்னமய்யா கீர்த்தனைகள்" என்று மிகவும் புகழ்பெற்றது.

ஹாதீராம் பாவாஜி என்னும் பக்தர் பெருமாளிடம் சொக்கட்டான் விளையாடிய பெரும் பேறு பெற்றவர்..

சந்திரனின் தாக்கம் அதிகமாக உள்ள தலம்



திருப்பதி. ஆதலால்தான் இத்தலம் மிகவும் குளிர்ந்த பிரதேசமாகவும், மனதிற்கு சாந்தி அளிக்கும் தலமாக வும், நமது மனம் ஒருமித்த சித்தத்துடன் வேறெதிலும் அலைபாயாமல் இருப் பதற்கு காரணம். நடந்து சென்று திருப்பதி செல்வது நமது உடம்பிற்கும், மனதிற்கும் சிறந்த பயிற்சியாகவும் நமது மூலாதாரத்தின் விழிப்பு நிலையையும் தூண்டுகிறது.

வேங்கடேச மலையில் ஸ்ரீநிவாசனின் சாந்நித்யமும், சகலதேவதா மூர்த்திகளும் புனித மலைகளாகவும், தீர்த்தங்களாகவும், செடி, கொடிகளாகவும், விலங்காகவும் மற்றும் சகல ஜீவராசிகளாகவும் இருந்து பெருமாளை நித்யம் சேவித்து வருவதாக ஐதீகம் ஆதலால்தான் நாம் இங்கு வைக்கும் வேண்டுதலுக்கு அபார பலன் கிடைக்கிறது. நாம் இங்கு எவ்வளவு நேரம் இருக்கிறோமோ அவ்வளவு நேரம் நமக்கு இறைவனின் அதிர்வலைகள் நம்முள் செல்வது நமக்கு பரம புண்ணியம் ஆதலால்தான் அங்கு பலமணி நேரம் தரிசனத்திற்கு இறைவன் நம்மை காக்க வைக்கிறார். இதன் தாத்பர்யம் புரியாமல் நாம்தான் புலம்புகிறோம்.

கோவிந்தராஜன் வகுளாதேவியின் மூத்த புத்திரன் ஆதலால் ஸ்ரீனிவாச பெருமாள் கோவிந்த ராஜனின் சஹோதரராகிறார்.

சிவராத்திரியன்று பெருமாளுக்கு வைரத்தில் விபூதி பட்டை அணிவித்து ஈஸ்வரனாகவும் காட்சி அளிப்பது விந்தையிலும் விந்தை. இங்கிருக்கும் பெருமாள் சிவ விஷ்ணு ஸ்வரூபமாக இருப்பதால் இது ஒரு தலைசிறந்த சைவவைஷ்ணவ தலமாகவும் விளங்குகிறது. ஈஸ்வரனுக்கு உகந்த வில்வம் சாற்றப்படும் ஒரே வைஷ்ணவ திருக்கோயில் திருப்பதி மட்டுமே.

சிலாரோகணம் என்னும் ஒரு அபூர்வ கல்லினால் ஆன திருமேனியுடையவர்.

உலகின் இரண்டாவது பணக்கார கடவுளாக இருப்பினும் அவர் உண்பது என்னவோ மண்சட்டியில் தயிர் சாதம்தான்.

திருப்பதி மலைஅடிவாரத்திற்கு அலிபிரி என்று பெயர்.

பெருமாளின் கருவறை மேலிருப்பது ஆனந்த நிலையம் என்னும் விமானம். இதன் தரிசனம் சகல பாவங்களையும், தோஷங்களையும் போக்க வல்லது.

மூலவரின் விக்ரஹத்தில் உள்ள நுண்ணிய சிற்ப வேலைப்பாடுகள் அவர் ஜீவனோடு விளங்குவதற்கு சாட்சியாக உள்ளது. அப்படி ஒரு அபார தேஜஸ் உள்ள மூர்த்தி ஸ்ரீ வேங்கடவன்.

இவருக்கு சாற்றும் வஸ்திரங்கள், வாசனை திரவியங்கள், நறுமண மலர்கள் வேறெங்கும் கிடைக்காதது.

இங்கு கொங்கணச்சித்தர் சமாதி உள்ளது,

இவருக்கு சாற்றும் ஒற்றை கல் நீலம் என்னும் வைரத்தின் மதிப்பு மட்டும் சுமார் 100 கோடி.

திருப்பதி சொர்க்கவாசல், பிரம்மோத்சவம் மிகவும் விசேஷம்.

திருமலை 3000 அடி உயரத்திலுள்ள குளிர் பிரதேசமாகும். இவரின் விக்ரஹம் மட்டும் 110 டிகிரி வெப்பத்தின் அளவிற்கு கீழே குறைவதே இல்லை. இதுவும் ஒரு அதிசயம்.

திருப்பதி அருகிலிருக்கும் திருத்தலங்கள்

திருச்சானூர், ஸ்ரீ கோவிந்தராஜ ஸ்வாமி கோவில், ஸ்ரீ கபிலேஸ்வரர், ஸ்ரீ கோதண்டராமஸ்வாமி கோயில், ஸ்ரீநிவாசமங்காபுரம், ஸ்ரீ கல்யாண வேங்கடேஸ்வரஸ்வாமி கோயில், ஸ்ரீ காளஹஸ்தி, திருத்தணி.

"ஸ்ரீய : காந்தாய கல்யாண நிதயே
நிதயேர்த்தினாம்
ஸ்ரீவேங்கட நிவாஸாய
ஸ்ரீநிவாஸாய மங்களம்"

"ஓம் நிரஞ்சனாய வித்மஹே
நிராபாஸாய தீமஹி
தந்நோ ஸ்ரீனிவாச ப்ரசோதயாத்"!!

– எஸ்.ரகுராமன்,
தொடர்பு எண்: 9940349593



# தெரியாமல் சொன்னாலும் பலன்

தெரிந்தோ, தெரியாமலோ கடவுளின் பெயரை எப்படி சொன்னாலும் பலன் கிடைக்கும் என்கிறார்கள் அருளாளர்கள். உதாரணமாக, ''ஐயா வந்தாரா...தெரியுமா?'' என்று ஒருவரிடம் கேட்டால்,''அவர் வந்தாராம், நடந்ததைக் கேட்டாராம். கொஞ்ச நேரம் காத்திருந்தாராம். அப்புறம் சாப்பிட்டாராம், கிளம்பிட்டாராம்'' என்று பதில் சொல்வதாக வைத்துக் கொள்வோம். இப்படி வார்த்தைக்கு வார்த்தை 'ராம்' என்றதால் சொன்னவர், கேட்டவர் இருவருக்கும் ராம பக்தரான ஆஞ்சநேயரின் அருள் கிடைக்கும் என்கிறார் வாரியார்.

# ஆன்மீக வழியில் அமைதி

4



கடவுள் இந்த உலகத்தினைப் படைத்து, அதில் பல்லாயிரம் கோடி உயிரினங்களைப் படைத்துள்ளார். கடவுள் மனிதர்களாகிய நம்மை படைக்கும் போது மட்டும் நமக்கென்று வாழ்க்கையில் விருப்பப்பட்டதை தேர்வு (choice) செய்யும்தன்மையில் படைத்து விட்டார். ஆனால் விலங்குகள், பறவைகள், ஊர்வன போன்ற உயிரினங்களை மனிதனைப்போல் விருப்பப்பட்டதை தேர்வுசெய்து (choice) செயல்படும்தன்மையில் படைக்கவில்லை. ஒவ்வொரு மனிதனுக்கும் அவனையும் அறியாமல் வாழ்க்கையில் ஒரு லட்சியம், விருப்பம் இருக்க வேண்டும். ‘இல்லை’ என்று மனிதர்கள் யாரும் மறுக்க முடியாது. கடவுள் மனிதனுக்கு மட்டும் விருப்பப்பட்டதை தேர்வு செய்வதற்கு (choice) வாய்ப்புகளைக் கொடுத்திருக் கிறார்.

எடுத்துக்காட்டாக ஒரு மனிதனுக்கு எதிரில் ஒரு தட்டில் ஆப்பிள், ஆரஞ்சு என பலவிதமான பழங்கள் வைக்கப்பட்டுள்ளது. அவ னுக்கு பசி வந்துவிட்டால் தட்டில் உள்ள ஏதோஒரு பழத்தை எடுத்து சாப்பிடத் தான் வேண்டும்.

எதிரில் வைக்கப்பட் டுள்ள பழங்களைப் பார்த்துக் கொண்டே இருந்தால், பசி அடங்கப்போவது இல்லை. எனவே அவனுக்குப் பசி வரும்வரை வேண்டுமானால் அவைகளைப் பார்த்துக் கொண்டே இருக்கலாம். அவனுக்கு விருப்பமான பழத்தினை தேர்ந்து எடுத்து உண்பதற்கு முடியும்.

நாம் இனியபழங்களை நம் விருப்பம்போல் தேர்ந்தெடுத்து உண்பது போன்றுதான், கடவுள் நமக்கு விருப்பமான ஒன்றை நல்லதோகெட்டதோதேர்வு செய்வதற்கு (choice) வாய்ப்புகளைக் கொடுத்திருக் கிறார்.

மற்ற உயிரினங்களுக்கு இதுபோன்று சாய்ஸ் இருக் கிறது. ஆனால் அவைகளுக்கு மனிதனைவிட சாய்ஸ் மிகவும் குறைவாகக் அளித்திருக்கிறார். நாம் விருப்பபட்டு தேர்வு செய்யும் செயலைப் பொறுத்து நமது வாழ்வு அமையும் என்பதை மனதில் நினைவு கொள்ள வேண்டும்.

இவ்வுலகில் வாழும் விலங்குகள் பறவைகள் போன்ற உயிரினங்களுக்கு ஒவ்வொரு உயிரினத் துக்கும் ஒரு இயல்பான குணத் துடன் இறைவன் படைத்துள்ளார். பசுக் களுக்கு சாதுவாக இருக்கும் பண்பினைக் கொடுத் துள்ளார். காக்கைக்கு உணவு கிடைத்து விட்டால் மற்ற காக்கைகளை ‘கா..கா...’ என்று கரைந்து ஒற்றுமையுடன் கூட்டமாக உண்ணும் குணத்தினை படைத்துள்ளார். மற்ற பறவைகளைவிட காக்கைகளுக்கு கூடி வாழும் குணத்தினை கொடுத்துள்ளார்.

நாய்களை தங்கள் எஜமான்களுக்கு வாலை ஆட்டிக்கொண்டு நன்றியுடன் இருக்கும் குணத்துடன் படைத்துள்ளார். காட்டில் வாழும் நரிகளை தந்திரம் செய்யும் குணத்துடன் படைத்துள்ளார்.

நாய் தன்னோட இனமான அடுத்த தெருவில் இருந்து வரக்கூடிய மற்ற நாய்களைக் கண்டாலே குரைத்து அவற்றினை விரட்ட ஆரம்பித்து விடுகிறது. அதுதான் நாய்களின் இயல்பான குணமாக இருக் கிறது. நாய்கள் ‘எனக்கு நன்றியுடன் இருப்பதற்கு கொஞ்சம்கூட பிடிக்கவில்லை, காட்டில் வாழும் நரி போன்று தந்திரமாக இருக்கவே விரும்பு கிறேன். பசு போன்று சாதுவாக அமைதியாக இருக்க விரும்புகிறேன்’ என்று கூறி, அதன் இயல்பான குணங்களையும் செயல்களையும் விரும்பியபடி, நாய் களால் சுயமாக சிந்தித்து மாற்றிக்கொள்ள முடியாது.

உலகில் வாழும் விலங்குகள், பறவைகள் போன்ற அனைத்து உயிரினங்களுக்கும் அதன் இயல்பான குணங்களே இருக்கும். அவைகளுக்கு மனிதனைப்போல விரும்பியபடி தன்னோட குணங் களை செயல்பாடுகளை சுயமாக மாற்றுவதற்கு முடியாது. ஒரு பறவை உயிருடன் இருக்கிறது என்று வைத்துக் கொள்வோம்.

அந்தப்பறவை தொடர்ந்து உயிருடன் இருக்க வேண்டுமெனில் அது பறந்து சென்றுதான் இரை தேட வேண்டும் என்பது அதன் இயல்பான குணம். நான் பறக்க மாட்டேன் யானையைப்போன்று, நாயைப்போன்று தரையில் நடந்து சென்றுதான் இரைதேடுவேன் என்று அவைகள் நினைக்கவோ செயல்படுத்தவோ தன்னோட விருப்பம்போல் இருக்க முடியாது. புலிகள் சிங்கங்கள் போன்ற கொடிய விலங்குகள் காட்டில் வேட்டையாடி தன்னோட இரையைத் தேடிக்கொள்ள வேண்டும். அதற்கு மாறாக நான் வானில் பறவைகளைப்போன்று

பறந்து சென்றுதான் இரையைத் தேடிக் கொள்வேன் என்று அதன் இயல்பினை விரும்பியபடி சுயமாக மாற்றிக்கொள்வதற்கு முடியாது .மனிதனைப்போல் சுயமாக சிந்தித்து விரும்பியபடி வாழ்வதற்கு விலங்குகள், பறவைகள் போன்றவற்றை கடவுள் படைக்கவில்லை.

ஒரு மனிதன் மனது வைத்தால் விருப்பப்பட்டால் தன்னோட குணங் களை பண்புகளை செயல்பாடுகளை மாற்றிக் கொள்ள முடியும். அதாவது மனிதர்கள் தன்னிடம் உள்ள உயர்ந்த குணத்திலிருந்து தாழ்ந்த குணத் திற்கும், தாழ்ந்த குணத்திலிருந்து உயர்ந்த குணத்திற்கும் மாற்றிக்கொள்ள முடியும்.

மனிதர்களின் குணங்களை, மனிதனுடைய பண்புகளை செயல்பாடு களை வைத்து மிருகத்தன்மை, மனிதத்தன்மை மற்றும் தெய்வத்தன்மை என ஆன்மிகம் பிரித்துக் கூறுகிறது. இந்த மூன்றில் ஒன்றைத் தேர்ந்தெடுத்து அதன்படி வாழ்ந்து கொள்வதற்கு, அவனுக்கு வாய்ப்புகள் கடவுளால் வழங்கப்பட்டுள்ளது.

மேலும் மனிதர்களுக்கு தன்னோடகுணங்களில் செயல்பாடுகளில் நல்லவைகள், தீயவைகள் எது என்று பகுத்தறிந்து, தங்களது குணங்களை பண்பு களை செயல்பாடுகளை மாற்றிக்கொள்வதற்கு மனிதனால் முடியும்.

மேலும் நமது குணங்களை, பண்புகளை மாற்றி செயல்படுத்துவதற்குத்தேவையான மன வலிமை யையும் (willpower) கடவுளால் மனிதர்களுக்கு மட்டும்தான் கொடுக்கப்பட்டுள்ளது. விலங்குகள் பறவைகள் போன்ற மற்ற உயிரினங்களுக்கு பகுத்தறிந்து குணங்களை மாற்றிக்கொள்ளும் தன்மைகள் எதுவும் அவைகளுக்கு மனிதனைப்போல் இறைவனால் வாய்ப்புகள் வழங்கப்படவில்லை.

கடவுள் மனிதர்களுக்கு சிந்தித்து நல்லமுறையில் வாழ்வதற்கு வாய்ப்புகள் கொடுத்ததோடு, மனிதன் தன்னோட செயல்களில் எது தர்மம் எது அதர்மம் என்று தர்ம சாஸ்திரங்கள் புராணங்கள் இதிகாசங்கள் மூலம் அறிந்து கொள்ளக்கூடிய அறிவுத்திறனையும் அவனுக்கு அளித்துள்ளார். ஒரு மனிதன் முன்பாக ஒரு தட்டில் பலவிதமான வண்ண மலர்கள் பழங்கள் இருக்கிறது என்று வைத்துக் கொள்வோம்.

மனிதன் தனக்குத் தேவையான மிகவும் விருப்பமான மலர்களை பழங்களை தட்டிலிருந்து எடுத்துக்கொள்ள முடியும். அதேபோல் மனிதன் தன்னுடைய குணங்களை பண்புகளை விரும்பியபடி தேர்வு செய்து ((choice) செயல்பாடுகளை



எழுத்தாளர்
பூ.சுப்ரமணியன்

மாற்றிக்கொள்வதற்கு வாய்ப்புகள் இறைவன் அளித்துள்ளார்.

ஒருவனை சுட்டிக்காட்டி 'இவன் முன்பெல்லாம் முரடனாக இரக்கமற்ற குணங்களுடன் யாருக்கும் அடங் காமல் சுற்றித் திரிந்து கொண்டு இருந்தான். இப்போது திடீரென்று எப்படியோ தலைகீழாக அவன் குணங் கள் செயல்பாடுகள் எல்லாம் மாறி விட்டது. அவன் பசுபோல் சாதுவாகவும் எல்லாரும் வணங்கும்படியான பண்புள்ளவனாக மாறிவிட்டான்' என்று நமது பேச்சு வழக்கில் சிலரைப்பற்றி கூறுவதை நாம் கேட்டு இருக்கிறோம். மனிதன் நினைத்தால் மிருகத்தன்மை, மனிதத்தன்மை மற்றும் தெய்வத்தன்மை ஆகிய மூன்றில் ஒரு தன்மையுடன் உலகில் வாழ முடியும்.

காட்டில் வாழும் புலி மற்ற விலங்குகளை வேட்டையாடி தன்னோட பசியை ஆற்றிக்கொள்கிறது. புலியானது ''எனக்கு மற்ற உயிரினங்களைக் கொன்று அதன் மூலம் எனது பசியை போக்குவதற்கு எனக்கு விருப்பமில்லை. நான் வீட்டில் சாதுவாக வாழும் பசுக்களைப் போன்று புல்லை மட்டும் மேய்ந்து கொள்கிறேன்' என்று தன்னோட உணவுப் பழக்கத்தினை புலி மாற்றிக் கொள்வதற்கு முடியாது. 'புலி பசித்தாலும் புல்லைத் திங்காது' என்று பழமொழி உலக வழக்கில் கூறுவதை நாம் கேட்டு இருக்கிறோம்.

எண்ணற்ற துன்பங்களுக்கும் கஷ்டங்களுக்கும் மூலகாரணம் மனிதனுடைய ஆசைதான் என்று ஞானிகள் கூறியுள்ளனர். இதனைத்தான் ஆசை அறுமின்கள் ஆசை அறுமின்கள் ஈசனோடு ஆயினும் ஆசை அறுமின் என்று திருமூலர் பாடியுள்ளனர். மனிதன் விரும்பினால் தன்னிடம் இருக்கும் தீயபழக்கவழக்கங்களை நல்ல பழக்கவழக்கங்களாக மாற்றிக்கொள்வதற்கு முடியும். அதேபோல் மனிதன் விருப்பப்பட்டால் தன்னிடமுள்ள நல்லவிதமான பண்புகளை பழக்கவழக்கங்களை மாற்றிக்கொண்டு தீயகுணங்களுடன் வாழ்வதற்கும் முடியும்.

நாம் வாழ்வில் மன அமைதியுடன் வாழ வேண்டுமெனில், ஆசை, கோபம், பொறாமை போன்ற துன்பம்தரக்கூடிய குணங்களை முற்றிலும் தவிர்த்து நமக்கும் மற்றவருக்கும் பயன்தரக்கூடிய நல்ல பழக்கவழக்கங்களை தவறாமல் கடைபிடித்து வரவேண்டும்.

(அமைதி தொடரும்)

எழுத்தாளர் பூ.சுப்ரமணியன்
கோட்டக் கலால் அலுவலர் (பணிநிறைவு)
கைபேசி: 9894043308



## திருக்கயிலாயம் செல்ல உதவும் நாகலிங்க 'பூ'

நாகலிங்கப் பூவை வீட்டில் சிவலிங்கமாக வைத்து பூஜிக்கலாம். ஆனால், நாகலிங்கப் பூவை ஈசனுக்கு சாற்றி, நமது பெயர் சொல்லி அர்ச்சனை செய்திருக்க வேண்டும். அதன் பிறகு, வீட்டின் பூஜை அறையில் நாகலிங்கப் பூவை சிவலிங்கமாக எண்ணி தினமும் பூஜை செய்யலாம். நமது கோரிக்கைகளை வேண்டிக் கொள்ளலாம். அர்ச்சனைக்குப் பயன்படுத்தப்பட்ட நாகலிங்கப் பூவை வீட்டில் வைத்து சிவனுக்கு இணையாக மரியாதை கொடுத்து தினமும் பூஜை செய்ய வேண்டும். வீட்டில் யாராவது வாழ்நாளின் இறுதிப்பகுதியில் இருந்தால், அவரது தலையணைக்கு அடியில் இந்த நாகலிங்கப் பூவை வைக்க வேண்டும். இதனால், அந்த ஆத்மா தமது வாழ்நாள் நிறைவடைந்ததும் திருக்கயிலாயம் சென்றடையும்.

## அலைச்சலும் குழப்பமும்

உனக்கு பிடித்திருந்தால் திடமான நம்பிக்கையை என் மீது வையுங்கள். உங்களது இப்போதைய அலைச்சலும் குழப்பமும் பயனற்றவை. நீங்கள் உங்கள் கடமையைச் செய்யுங்கள், சிறிதளவும் அஞ்சாதீர்.

என் மொழிகளில் நம்பிக்கை வை யுங்கள். என்னுடைய லீலைகளை நினைவில் கொள். நான் உன்னுடைய ஆசைகளைப்பூர்த்தி செய்து உன் னுடைய பக்தியை அதிகப் படுத்து வேன்.



## மாணிக்க மாலை

மலர்மாலை, சந்தனமாலை, பணமாலை கூட கேள்விபட்டிருப்போம், ஆனால் மாணிக்க மாலையை கேள்வியே பட்டிருக்கமாட்டோம். அதுதான் கீழே உள்ள படம். அதாவது மாதுளை பழம் முத்துகளால் ஆன மாலையை வைர மாலை என்று அழைப்பார்கள்.

இந்த மாலையில் சிறப்பம்சம் என்னவென்றால் இந்த மாதுளைமுத்துகளை ஊசியால் கோர்க்க மாட்டார்கள் நூல் வைத்து தொடுப்பார்காள் இந்த மாலை மார்கழி மாதத்தில் அத்யன உற்சவத்தில் மட்டும் சாற்றுவார்கள்.



இந்த மாலை தொடுக்க தெரிந்தவர்களால் மட்டுமே தொடுக்க முடியும் இன்று ஆழ்வார் திருநகரியில் மட்டுமே நடைமுறையில் உள்ளது.

# மேல் நோக்கு நாள், கீழ்நோக்கு நாள், சமநோக்கு நாள்

# பற்பலனை தரும் மூன்றுவித நாட்கள்

தினசரி நாள்காட்டியை நாம் பயன்படுத்தினாலும், அதில் உள்ள ஒருசில விஷயங்களை நாம் தெரிந்து கொள்ளாமலே இருக்கிறோம்.

இதுபோன்ற ஒருசில விஷயங்களை நாம் தெரியாமல் வைத்திருப்பதால் பல நல்ல பலன் தரும் விஷயங்களை இழந்து வருகிறோம்.

அந்த வகையில் தினசரி நாள்காட்டியில் உள்ள ஒரு விஷயம்தான் **மேல் நோக்கு நாள், கீழ்நோக்கு நாள், சமநோக்கு நாள்** (படத்தில் வட்டமிட்டு காட்டப்பட்டுள்ளது) போன்ற நாட்கள், இந்த நாட்கள் அனைத்து நாள்காட்டியிலும் இருக்கும். (ஒருசில நாட்காட்டியில் ⇧⇔⇩ இதுபோன்று குறியீட்டில் அமைந்திருக்கும்) ஆனால் நாம் அதை பொதுவாக மேல்நோக்கு என்றால் நல்ல நாள் என்றும், சமநோக்கு என்றால் சுமாரான நாள் எனவும், கீழ்நோக்கு நாள் என்றால் கெடுதலான நாளாகவும் எண்ணி அந்த நாட்களில் தவறான காரியங்களில் ஈடுபடுகிறோம்.

மேல்நோக்கு நாள், கீழ்நோக்கு நாள், சமநோக்கு நாள் இவை மூன்றும் அன்றைய தின நட்சத்திரத்தின் அடிப்படையில் அமைகின்றன.

நட்சத்திரங்கள் மொத்தம் 27 இவைகளை நம் முன்னோர்கள் ராசிமண்டல அடிப்படையில் மூன்றாக பிரித்தனர்.

1 ஊர்த்துவமுக நட்சத்திரம்
2 அதோமுக நட்சத்திரம்
3 த்ரியமுக நட்சத்திரம்

## ஊர்த்துவமுக நட்சத்திரம்

1. ரோகிணி,
2. திருவாதிரை,
3. பூசம்,
4. உத்திரம்,
5. உத்திராடம்,
6. திருவோணம்,
7. அவிட்டம்,
8. சதயம்,
9. உத்திரட்டாதி

ஆகிய ஒன்பது நட்சத்திரங்களும் ஊர்த்துவமுக நட்சத்திரங்கள் எனப்படுகின்றன.

இந்த நட்சத்திரங்களைக் கொண்ட நாட்களை மேல்நோக்கு நாட்கள் எனப்படும்.

இன்னாளில்...

மேல்நோக்கி வளர்கின்ற பயிர்களுக்காக விதை விதைத்தல், மரங்களை நடுவதற்கும், மேல்நோக்கி எழும் கட்டிடங்கள்(வீடு), உயரமான மதில் போன்றவற்றைக் கட்ட ஆரம்பிக்க உரிய நாட்கள் ஆகும்.

இரண்டாவதாக வரும் 9 நட்சத்திரங்கள் அதோமுக நட்சத்திரம் என்று அழைக்கப்படும். அந்த நட்சத்திரங்கள்.

## அதோமுக நட்சத்திரம்

1. பரணி,
2. கிருத்திகை,
3. ஆயில்யம்,
4. மகம்,
5. பூரம்,
6. விசாகம்,
7. மூலம்,
8. பூராடம்,
9. பூரட்டாதி

ஆகிய ஒன்பது நட்சத்திரங்களும் அதோமுக நட்சத்திரங்கள் எனப்படும்

அதாவது...

இந்த நட்சத்திரம் கொண்ட நாட்களை கீழ்நோக்கு நாள் எனப்படுகிறது.

இந்த நாட்களில்...

கிணறு வெட்டுதல், புதையல் தேடுதல், சுரங்கப் பணிகளை மேற்கொள்ளுதல், பூமிக்கடியில் வளரும் கிழங்கு வகைச் செடிகளைப் பயிரிடுதல் முதலான பணிகளைச் செய்வது நல்லது.

மூன்றாவது வரும் 9 நட்சத்திரங்கள் த்ரியமுக நட்சத்திரம் என்று அழைக்கப்படும். அந்த நட்சத்திரங்கள்:

## த்ரியமுக நட்சத்திரம்

1. அஸ்வினி,
2. மிருகசீரிஷம்,
3. புனர்பூசம்,
4. ஹஸ்தம்,
5. சித்திரை,
6. சுவாதி,
7. அனுஷம்,
8. கேட்டை,
9. ரேவதி

ஆகிய ஒன்பது நட்சத்திரங்களும் த்ரியக்முக நட்சத்திரங்கள் ஆகும்.

இந்த நட்சத்திரங்கள் கொண்ட நாட்களை சமநோக்கு நாட்கள் எனப்படும்

இந்த நாட்களில்...

வாகனங்கள், கார், பைக் வாங்குதல், செல்லப் பிராணிகள், ஆடு, மாடு, காளை வாங்குதல், சாலை அமைத்தல், வாசக்கால் வைத்தல், வயல் (ஏறு) உழுதல் ஆகிய பணிகளைச் செய்வது உத்தமம்.

மேற்கண்ட நாட்களை நினைவில் வைத்துக் கொண்டால் எந்த நாளில் என்ன காரியங்கள் செய்தால் பலன் கிடைக்கும் என்பதை எளிதாக அறிந்து கொள்ளலாம்.

இதுபோன்ற எளிமையான விஷயங்களை நாமே அறிந்து கொண்டால் அந்த அந்த நாட்களுக்குரிய பணிகளில் ஈடுபட்டால் வெற்றி நிச்சயம் கிடைக்கும்.

நமது முன்னோர் பல விஷயங்களை மிக நுணுக்கமாக அலசி ஆராய்ந்து அனுபவப் பூர்வமாக விளக்கியும் வைத்துள்ளனர். ஆனால் நாம்தான் பயன்படுத்தாமல் அவற்றை அலட்சியமாக விட்டுவிட்டோம்.

இதுபோன்ற நல்ல சிறு தகவல்களை நமது சந்ததியினர்களுக்கு நாம் எடுத்துரைத்தால் அவர்களின் தொழிலுக்கும், வாழ்க்கைக்கும் மிக உறுதுணையாக இருக்கும்.

– சர்வம் கிருஷ்ணார்ப்பயாமி









# கும்பாபிஷேகத்திற்கு பயன்படும் அஷ்ட பந்தன கலவை



கோவில்களில் கும்பாபிஷேகம் செய்யும்போது விக்கிரகத்திற்கும் பீடத்திற்கும் இடையில் ஒரு வித கலவையை புதிதாக மாற்றியமைப்பார்கள் இந்த கலவைக்கு பெயர் “அஷ்ட பந்த கலவை” என்று பெயர் இதை சிற்பிகள் “அஷ்ட பந்தன மருந்து” என்று அழைப்பார்கள்.

இந்த மருந்து கலவை, தெய்வங்களை பீடத்தில் அசையாமல் நிறுத்தும்.

அஷ்டபந்தன கலவை தயாரிப்பதற்குக் **கொம்பரக்கு, சுக்கான் தூள், குங்கிலியம், கற்காவி, செம்பஞ்சு, சாதிலிங்கம், தேன்மெழுகு, எருமை வெண்ணெய்** ஆகிய எட்டு பொருள்கள் தேவை.

கோயில் எழுப்புவதற்கான இடத்தைத் தேர்வு செய்வதிலிருந்து ஆலயம் எப்படி அமைய வேண்டும் என்பது வரை பல ஆகம விதிமுறைகள் இருக்கின்றன.

கோயிலைக் கட்டி முடித்த பிறகு, தெய்வ மூர்த்தங்களைப் பிரதிஷ்டை செய்வார்கள். ஒரு பீடத்தின்மீது தெய்வ மூர்த்தத்தை வைத்து,பீடத்திலிருந்து அகலாமல் இருப்பதற்காக, `அஷ்ட பந்தன மருந்து’ சாத்துவார்கள். இந்த அஷ்ட பந்தன மருந்து, தெய்வ மூர்த்தத்தைப் பீடத்துடன் அழுந்தப் பிடித்துக்கொள்ளும். 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை தெய்வ மூர்த்தங் களுக்கு அஷ்ட பந்தனம் சாத்த வேண்டும் என்பது ஆகம நியதி.

இவ்வாறு இந்த மருந்தை மாற்றும்போது நடைபெறும் விழாவே கும்பாபிஷேகம் எனப்படும். உலக உயிர்களெல்லாம் நலமாக இருக்க வேண்டுமென்றால், மூல தெய்வ மூர்த்தம், தனது ஆதார பீடத்தில் ஆடாமல் அசையாமல் இருக்க வேண்டும். அப்படி இருந்தால்தான் உலகத்துக்கும் உலகில் வாழும் மக்களுக்கும் சிறப்பு. மூலவ மூர்த்தி தொடங்கி, எல்லா தெய்வங்களின் திருமேனிகளும் பீடத்திலிருந்து அசையாமல் இருக்க வேண்டும் என்பதற்காக இந்த அஷ்டபந்தன மூலிகை மருந்தைச் சாத்துகிறார்கள்.

அஷ்டபந்தனம் தயாரிப்பதற்காகவே தமிழில் ஒரு வெண்பா பாடப்பட்டுள்ளது.

“கொம்பரக்குச் சுக்கான்தூள் குங்கிலியம் கற்காவி
செம்பஞ்சு சாதிலிங்கம் தேன்மெழுகு தம்பழுது
நீக்கி எருமைவெண் ணெய்கட்டி நன்கிடித்து
ஆக்கல் அட்டபந்தனம் ஆம்”

இந்த மூலிகை மருந்து பல நாள்களானாலும் கெடாத வகையில் தயாரிக்கப்படும்.

## தயாரிக்கும் முறை:

கொம்பரக்கு, சுக்கான் தூள், குங்கிலியம், கற்காவி, செம்பஞ்சு, சாதிலிங்கம், தேன் மெழுகு, எருமை வெண்ணெய் ஆகிய எட்டு பொருள்களைச் சேர்த்து, உரலில் இட்டு இடிக்க வேண்டும். கொம்பரக்கு தொடங்கி ஒவ்வொரு பொருளாக உரலில் இட்டு இடிக்க வேண்டும். இடிக்கும் போது எருமை வெண்ணெய்யை சிறிது சிறிதாகச் சேர்த்து இடிக்க வேண்டும். அஷ்டபந்தன மருந்து கெட்டியாக கல்லுபோலவும் இருக்கக் கூடாது. குழைவாகவும் இருக்கக் கூடாது.

இரண்டுக்கும் இடைப்பட்ட ஒரு பதமான நிலையில் இருக்க வேண்டும். இப்படி இருந்தால்தான் ஆதாரப்பீடத்தில் இருக்கும் இறைவனின் திருமேனியை நிலைநிறுத்த வசதியாக இருக்கும்.

இந்த மூலிகை மருந்துகளைக் கலந்து இடிப்பதற்கான பாத்திரங்கள், உரல், உலக்கை ஆகியவை மிகவும் தூய்மையாக இருக்க வேண்டும். இந்தப் பொருள்களை எந்தெந்த அளவு சேர்க்க வேண்டும், எவ்வளவு நேரம் இடிக்க வேண்டும் என்பதற்குக் கால அளவுகள் உண்டு. அஷ்டபந்தனம் தயாரிப்பவர்களின் வாக்கு, மனம், செயல் இவையாவும் இறைச் சிந்தனையிலேயே நிலைத்திருக்க வேண்டும் என்பது மிகவும் முக்கியம்.

மேற்கண்ட கலவையில் தயாரிக்கும் மருந்து, கோவில் கோபுரத்தில் வைக்கப்பட்டிருக்கும் கலசத்தின் மூலம், சிலைக்கு தேவையான அனைத்து சக்திகளையும் ஈர்த்து தெய்வ மூர்த்தங்களுக்கு அபரிமிதமாக வழங்கும். இதனால்தான் குறிப்பிட்ட நாட்களுக்குப் பிறகு கும்பாபிஷேகம் செய்யப்படாத திருக்கோயில்களில் சக்தி குறைபாடு ஏற்படும் என்று ஆகமங்கள் குறிப்பிட்டுள்ளது.

இந்த மருந்தை 100 ஆண்டுகள் வரை கெடாதவாறு தயாரிக்க முடியும். ஆனாலும், 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை புதிதாகத் தயாரித்து, தெய்வ மூர்த்தங்களுக்கும் பீடத்துக்கும் இடையில் சாத்தி, கும்பாபிஷேகம் செய்வதென்பது நடைமுறையில் இப்போது வழக்கமாகியுள்ளது...

– சிவதினேஷ் விஸ்வரூபன்







# நெய்யும் மெய்யும்

பெரும்பாலான மக்கள், நெய் வெறும் கொழுப்பு மட்டும் நிறைந்த, ரத்தக் கொழுப்பை உயர்த்தும் குணம் உடையது என்ற தவறான எண்ணத்துடன், உணவில் நெய்யை அறவே சேர்ப்பது இல்லை.

ஆனால் ஆயுர்வேதத்தில், நெய்யினை உணவில் தினந்தோறும் எடுத்துக் கொள்ளுமாறு பரிந்துரைக்கப்படுகிறது. நெய் ஒரு மிகச் சிறந்த போஷாக்கான, மருத்துவ குணம் வாய்ந்த பொருள். வாயு மற்றும் பித்த சம்பந்தமான நோய்களுக்கு, நெய் மிக முக்கியமான மருந்து. நெய்யை ஏன் நீங்கள் கட்டாயம் உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டும் என தெரியுமா?

- நெய் எளிதில் ஜீரணமாகி விடும். சாப்பிட்டவுடன் அவை கொழுப்பாக உடலில் தங்கப்படுவதில்லை. மாறாக எனர்ஜியாக எரிக்கப்படுவதால் உடலில் கொலஸ்ட்ரால் அதிகரிக்காது.
- மாலைக்கண் மற்றும் கிட்டப் பார்வை, தூரப்பார்வை என பார்வை குறைபாடு இருப்பவர்கள் கட்டாயம் நெய்யை சேர்த்துக் கொள்வதால் கண் பார்வை தெளிவடையும்.
- பால், தயிர் போன்றவற்றில் ஒவ்வாமை இருப்பவர்கள் தாராளமாக நெய் சேர்த்துக் கொள்ளலாம். அவற்றிலுள்ள லாக்டோஸ் இல்லையே தவிர அவற்றின் பண்புகள் ஒத்திருக்கும்.
- நெய்யில் நிறைய நேர்மறையான குணங்கள் இருப்பதால் அதனை சாப்பிடுவதால் நேர்மறை எண்ணங்கள் அதிகரிக்கும் என ஆயுர்வேதம் கூறுகின்றது.
- மருந்துக்கள் கெடாமல் பாதுகாக்க நெய்யே சிறந்த பொருளாகும். நெய்யை ரசாயனம் என்று ஆயுர்வேத மருந்தாளர்களால் அழைக்கப்படுகிறது. ஏன் என்றால் முழு உடல் நலம் கொடுத்து நீண்ட ஆரோக்கியத்தைக் கொடுக்கும் குணம் நெய்க்கு உண்டு. அவை மருந்துக்களின் குணங்களை செல்களின் சுவருக்குள் ஊடுருவச் செய்கிறது.
- மலச்சிக்கலைப் போக்கும். வாத, பித்த, கபத்தின் சீற்றங்களைக் குறைத்து அதனதன் நிலையில் நிறுத்தி நோய்களின் தாக்கத்தைத் தடுக்கும்.
- சிலர் எப்போதும் சோர்வுடன் உடல் வலுவில்லாமல் காணப்படுவார்கள். சிறிது தூரம் நடந்தால்கூட அவர்களுக்கு மேல் மூச்சு வாங்கும். உடனே அமர்ந்து விடுவார்கள். கால்கள் அதிகமாக வலிப்பதாகக் கூறுவார்கள். இதற்கு காரணம் உடலில் சத்தின்மையே. இவர்கள் தினமும் மதிய உணவில் நெய்யை சேர்த்து வந்தால் உடலுக்குத் தேவையான சத்துக்கள் கிடைக்கும்.
- நெய் சாப்பிட்டா நேர்மறை எண்ணங்கள் அதிகரிக்கும்!

மேற்கண்ட அனைத்தும் உண்மையான தரமான கலப்படமில்லாத நெய் மூலம் கிடைக்கும்.





www.aanmeegamalar.com



தீய பலனைத் தரும்

# எள்தீபம்

## காஞ்சி மகாப் பெரியவர்



சனிக்கிழமை தோறும் சனிபகவானுக்கு எள் தீபம் ஏற்றுவது நாளுக்கு நாள் பெரு கிக் கொண்டே வருகிறது.

துன்பங்களால் அவதிப்படும்போது, அதற்கு விடிவு என்று கூறப்படும் பல் வேறு பரிகாரங்களை நாம் கண்மூடிக் கொண்டு செய்கிறோம் என்பதை இதன் மூலம் தெரிந்துகொள்ளலாம்.

அதன்படி எந்த கோவில்களிலும் எள் தீபம் ஏற்றாதீர்கள். இதுவும் தவறாகச் செய்யப்படும் ஒரு வழிபாடு. இது தோஷத்தைப் போக்குவதற்குப் பதிலாக அதிகப்படுத்தும்.

எள் என்பது அரிசியைப் போல ஒரு தானியம். அரிசியை எரிப்போமா? எள்ளை எண்ணையாக்கி அந்த எண்ணையைக் கொண்டு தீபமேற்றச் சொல்லித்தான் நமது பரிகாரமுறைகள் சொல்கிறதே தவிர எள்ளையே நேரிடையாக எரிக்க அல்ல. எள்ளை நைவேத்தியமாகத்தான் படைக்க வேண்டும்.

காஞ்சி மகான் ஸ்ரீமகாபெரியவர் ஒருமுறை தனது சொற்பொழிவில் எள்தீபம் கூடாது என்று தெளிவுபடுத்தியுள்ளார்.

ஆனாலும் நாம் அதை பொருட்படுத் தாமல் எள் தீபத்தை ஏற்றிவருகிறோம். இதற்கு எந்தவித பலன்களும் கிடை யாது. எள்ளில் இருந்து பெறப்படும் எண் ணையில்தான் தீபத்தை ஏற்ற வேண்டும்.

வேத சாஸ்திரங்களிலும், புராணக் கதைகளிலும், முன்னோர்களாலும் சொல்லப்படாத ஒரு செயலை தவறாக செய்து துணியில் எள்ளைச் சுற்றி எரிப்பதால் கோவில் அசுத்தம் அடைவதற்கு நாம் காரணமாக உள்ளோம்.

திருக்கோயில் சாஸ்திரப்படி கோயிலை அசுத்தம் செய்தாலும் பாவம் பீடிக்கும் என்று கூறப்படுகிறது. கோவிலை சுத்தம் செய்து உழவாரப் பணிகள் செய்யும் அடியார்களுக்கு பல்வேறு புண்ணியங்கள் கிடைப்பதாக புராணங்களில் கூறப்பட்டுள்ளது.

கோவிலை சுத்தம் செய்யாவிட்டாலும், அசுத்தம் செய்யாமலாவது இருப்போம், இனியாவது சனிபகவானுக்கு நல்லெண் ணை தீபத்தை மட்டுமே ஏற்றுவோம்.

Owned, Published by C.N.RAJA. Design by BHAANRAJAGRAPHICS, CHENNAI. Published from New No.16, Old No.18, Bharatheeswarar Colony, 4th Street, Kodambakkam, Chennai - 600 024.
Editor : C.N.Raja, Cell: 08825844033.
Website: www.aanmeegamalar.com / app: aanmeegamalar / E-mail: aanmeegamalar@gmail.com



www.aanmeegamalar.com

சந்தா இல்லை
நன்கொடை இல்லை

வெற்றிகரமாக

# 100 வது இதழ்

உலகமெங்கும் 60,000 ஆன்மிக வாசகர்களுடன், தரத்திலும், வடிவமைப்பிலும்

## நம்பர் 1 இணைய இதழ்

ஆன்மிகமலர்.காம் இணையதளம் சார்பில் மாதம் இரண்டு இ-புத்தகமாக வெளிவரும் நமது இதழின்

**100வது இதழ் 100 பக்கங்களுடன்**

இதுவரை வெளி வந்த முக்கிய ஆன்மிக தகவல்களுடன் பொக்கிஷமாக திகழ்கிறது...

**குடும்ப உறுப்பினர், நண்பர்களுக்கு SHARE செய்து அவர்களும் படித்து பயன்பெற உதவுங்கள்....**

www.aanmeegamalar.com இணையதளத்தில் இலவசமாக டவுன்லோடு செய்து படிக்கலாம்.